Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆனி 6-ஆம் நாள். (20-6-59) சனிக்கிழமை இதழ் 20.

# இந்தியா — இலங்கை எதிர்கால நல்லுறவு

## இனி உறுதி பெறுமென்ற நம்பிக்கை

## பாரதக் குடியரசுத் தலைவருக்கு மகத்தான வரவேற்பு

### வான்முகில் வழாது பெய்தும் மக்கள் உற்சாகத்தில் மிதந்த காட்சி

— நமது கொழும்பு நிருபர் —

“இந்திய மககளுக்கும் இலங்கை மக்களுக்கும், சிறப்பாக தமிழ் மக்களுக்கும் இடையே ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக நெருங்கிய உறவுகள் இருந்து வருகின்றன. இதை உணர்ந்து இந்தியக் குடியரசின் தலைவரான டாக்டர் இராஜேந்திர பிரசாத்தை தமிழரசுக் கட்சியின் காரியக் குழு மனப்பூர்வமாக வரவேற்பதுடன், இந்நாட்டிலே அவர் தங்கியிருக்கும் காலம் மகிழ்ச்சிகரமாக இருக்கவேண்டுமென்றும் வாழ்த்துகின்றது”

இத்தீர்மானத்தை வவனியாவிலே சென்ற ஞாயிறன்று நகர மண்டபத்தில் அந்தரங்கமாகக் கூடிய சமஷ்டிக் கட்சி காரியக் குழு நிறைவேற்றியது. ரத்மலானை விமான நிலையத்திலே சென்ற திங்களன்று எஸ். ஜே. வி. செல்வநாயகம் தம்பதிகள், வி. ஏ. கந்தையா தம்பதிகள் ஆகிய இவர்கள் வந்து ராஜன் பாபுவின் வரவேற்பிற் கலந்து கொண்டார்கள். அவர்களைப் பிரதமர் பண்டார நாயக்கா, டாக்டர் ராஜன் பாபுவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

வேறு விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் இருப்பினும், இந்தியாவின் ஜனாதிபதியை இங்கு வரவேற்பதில், அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் வேற்றுமை இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இந்த வைபவத்தில் இரு சார்பினரும் கலந்து கொண்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த விக்ரமசிங்கா, பீட்டர் கெனமன் இவர்களும், சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வெஸ்லி குணவர்த்தனவும், பிலிப்பின் தோழரான சாகர பளன சூரியாவும், சமஷ்டிக் கட்சித் தலைவர்களுடன் ஒரே வரிசையில் அமர்ந்து, ஜனாதிபதியின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

அதற்கிடையே அங்கு மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகா, முதலில் விக்கிரமசிங்காவிடமும், கெனமனிடமும் சென்று சிரித்துக் கொண்டே கைகுலுக்கினார். பிறகு வெஸ்லி, பளனசூரியா, எஸ். ஜே. வி., வி. ஏ. கந்தையா இவர்களுடனும் கைகுலுக்கிச் சுகம் விசாரித்தார். ‘கவர்னர் ஜெனரல்’ எல்லாக் கட்சியாளருக்கும் நண்பராக இருப்பதை அந்தக் காட்சி காட்டுவதாக இருந்தது.

விமான நிலையத்துக்கு இந்திய ஜனாதிபதியை வரவேற்க வந்த கூட்டத்தில் பெரும்பாலோரும் தமிழர்களும் இந்தியருமேயாவர். சிங்களவர் கூட்டம் மிகக்குறைவு.

ஜனாதிபதியின் விமானம் இறங்கியதும், அவரை வரவேற்க முதலில் படியேறிச் சென்ற அமைச்சர் ஏ. பி. ஜயசூரியா, விமானப் படி தடுக்கி, கீழே குப்புற விழுந்து விட்டாரென்றாலும் உடன் பக்கத்திலிருந்தவர்கள் உதவியுடன் எழுந்துவிட்டார்.

நம் ஊருக்கு ஒரு பெரியவர் வந்தால் சாஷ்டாங்கமாகக் கும்பிட்டு, அவரை மரியாதையுடன் வரவேற்கும் பண்பாடு உண்டென்றும், அமைச்சர் விழுந்து எழுந்ததும், அவ்வித மரியாதையாகுமென்றும் ஓர் அன்பர் சமாதானம் கூறினார்.

ராஜன்பாபு விமானத்திலிருந்து இறங்கியதும், இந்திய தேசியக்கொடி பறந்த, கவர்னர்ஜெனரலின் காரில் ஏறினார். நான்கு பீரங்கிகளிலிருந்தும் 21 மரியாதைக் குண்டுகள் வெடித்து, ராஜ வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவர் ஒலி பெருக்கியிலே பேசியது சுருக்கமாக இருந்தாலும் கருத்துக்கள் மணி மணியாக இருந்தன. **“இலங்கை மக்களுக்கு இந்திய மக்களினதும், இந்திய அரசாங்கத்தினதுமான நல் வாழ்த்துக்களையும், ஆழ்ந்த நட்புணர்ச்சிகளையும் என்னுடன் கொணர்ந்திருக்கின்றேன்.”** என்று அறிவித்து சுதந்திர இலங்கைக்குத் தாம் வரமுடிந்ததுபற்றிப் பெருமகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

“நம் இருதேச சரித்திரத்திலே இந்த நல்லுணர்ச்சிகள் வேரூன்றியுள்ளன. இந்தத் தேசிய சுதந்திர யுகத்திலே, எமது பொதுவான அனுபவங்கள், பொதுவான பிரச்சினைகள், பொதுவான நோக்கங்கள் இந்த நட்புவளர்ச்சிகளை பலப்படுத்தியுள்ளன.

“பல நூற்றாண்டுகளாக அன்னிய ஆதிக்கத்தில் இருந்த நாம் சமீபத்தில் விடுதலை அடைந்தோம். நம் இரு தேசங்களும், நமது மக்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தி, சாதாரண மக்களின் வாழ்வு சந்தோஷமாக இருக்கச்செய்யும் மேலான நோக்கத்துடனே பொருளாதார புனரமைப்பான மிக முக்கியகாரியத்தில் இப்போது ஈடுபட்டுள்ளன. இது மகத்தான வேலை. விடாமுயற்சியுடன் அயராது உழைக்கவேண்டும். நமது அரசியல் சுதந்திரத்திலே பொருளாதாரவளம் ஏற்படச்செய்வதில் நாம் சீக்கிரம் வெற்றியடைவோமென்பது என் உறுதியான நம்பிக்கை” என்றார்.



வெள்ளவத்தையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் நிறுவப்படவிருக்கும் சர்வதேச கலாசார நிலையத்துக்கு அத்திவாரக் கல் நாட்டுவதற்கு இராஜன்பாபு அங்கு செல்லுகிறார்.

அவர் பேச்சு இந்தியா, இலங்கை இவ்விரு நாடுகளின் நெருங்கிய உறவையும், இரு நாடுகளும் பல பொது வேலைகளில் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தி, இரு நாடுகளின் நட்புறவையும் பலப்படுத்துவதாக இருந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம், மட்டக்களப்புக்கு

## புதிய பஸ்ஸுகள் வேண்டும்

### அரசாங்கத்தின் மனதைமாற்ற தமிழ்த் தலைவர்கள் கடமை

— நமது அரசியல் நிருபர் —

யாழ்ப்பாண நகர சபையும், தமிழரசுக் கட்சியின் காரியக் கமிட்டியும் இப்போது, பஸ்ஸுகள் விஷயத்தில் கவனம் செலுத்தியுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புது பஸ் ஒன்று கூட ஓடவில்லை. தீவின் மற்றப் பகுதிகளில் புதிய பஸ்ஸுகள் ஓடுகையில், தமிழ்ப் பகுதிகளில் மட்டும் பழைய பாடாவதிகளும் லொட லொட்டைகளும் தான் ஓடுகின்றன. இதனால் தமிழ் மக்களிடையே மிகவும் அதிருப்தி நிலவுகின்றது. பஸ்ஸுகளை உபயோகிப்பவர்கள் மிகவும் சங்கடப்படுகின்றார்கள்.

இதை உணர்ந்து யாழ்ப்பாண நகரசபை, “தமிழ் ஸ்ரீ” பஸ்ஸுகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

இதே விஷயமாக அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டுமென்று தமிழரசுக் கட்சியின் காரியக்கமிட்டி 5 மணி நேரம் விவாதித்தது, இதற்காக திரு. எஸ். ஜே.வி. யையும், கட்சிக்காரியதரிசியையும் நியமித்தது.

இவ்விருவரும், போக்குவரத்து சபைத் தலைவருடன் நேரில் பேசியதில், இரு மாகாணங்களுக்கும், புதிய சிங்களஸ்ரீ பஸ்ஸுகளை அனுப்ப முடியாத நிலையில் பழையவற்றைத் திருத்திக் கூடுமான வரை நல்லதாக அங்கு அனுப்புவதாக இ. போ. ச. தலைவர் பதிலளித்துள்ளார். இந்தப்பதில் தமிழ்ப் பகுதி மக்களுக்குத் திருப்தியளிக்க முடியாது. மற்றப் பகுதி மக்களைப்போல் தங்களுக்கும் புதிய பஸ் வசதிகள் வேண்டுமென்றே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் போக்குவரத்து மந்திரி, புதிய பஸ்ஸுகளுக்கு “சிங்கள ஸ்ரீ” எண்ணிக்கைகளையே கொடுப்பதென்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றார். இதை இப்போது மாற்றினால் அது சிங்கள மக்களிடையே அதிருப்தி ஏற்படுத்தலாமென்று கருதி, அவர் அதை மாற்றத் தயங்கக்கூடும். அவசரப்பட்டு தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியதின் பயனே இது.

இதற்கிடையே பஸ் போக்குவரத்து அதிக நஷ்டத்தில் நடக்கின்றது. பொதுமக்களுக்குத் திருப்தியான முறையில் இது நடைபெற முடியாவிட்டால் நஷ்டம் மேலும் அதிகரிக்கும்.

இது தர்ம சங்கடமான நிலைமை. இதை மாற்றி சீர்

(9ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் — BRIDGESTONE TYRES

Dirtributors : TUCKERS AUTODROME

ஏக விநியோகஸ்தர்கள் :

ஒட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி : “ஒட்டோஸ்”

## வரி விளம்பரம்


### தேவை

ஆசிரியர் ஒருவருக்கு அவருடைய இல்லத்தில் உதவியாக இருப்பதற்கு ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது எஸ். எஸ். ஸி. அறிவும், தமிழில் நல்ல ஆர்வமும் தேர்ச்சியுமுள்ள மாணுக்கன் தேவை. பத்திரிகைத் தொழிலில் விருப்பமுள்ளவராயிருப்பின் அத்துறையில் அவர் பயிற்சி பெற சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். ஆதரவும், உதவியும் வேண்டுபவர்களின் விண்ணப்பங்களே கவனிக்கப்படும். இலங்கையின் எப்பகுதியிலுள்ளவர்களும் மனுச் செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு :

X 2, c/o த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள் சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

பட்டு, பருத்தி, புடைவைகள், தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்.** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

### ஈழநாடு வரி விளம்பரம்

★ திருமணம்
★ நன்றி கூறுதல்
★ விற்பனவு
★ கொள்வனவு

ஆகியவற்றைக் குறைந்த செலவில் விளம்பரம் செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு :-

ஈழநாடு வரிவிளம்பரப் பகுதி
தபாற் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.


<u>ஆசிரியருக்குக் கடிதங்கள்</u>

# எங்கள் பஸ் ஓடுது பார்!

அரசாங்கம் பஸ்சேவையைத் தேசியமயம் ஆக்கியபோது பொதுமக்கள் கொண்ட குதூகலத்தைச் சொல்லமுடியாது. "எங்கள் பஸ்" என்ற பெருமிதத்தில் மிதந்தனர். ஆனால் தனியுரிமையாளர் கையிலிருந்து இ. போ. ச;வின் நிர்வாகத்துக்கு மாறிய அன்றிலிருந்து இன்றுவரையுள்ள நிலை கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுதான்.

கடகடத்த பஸ்வண்டிகள் குறிப்பிட்ட இடத்துக்குச் சேர்வதற்கு முன்பாகப் பலமுறை தண்ணீர் அருந்தி, இயந்திரக் கோளாறினால் முரண்டுசெய்து, படுத்திருந்து மிகமிக ஆறுதலாக இடத்தைச் சேர்வது புதுமையல்ல. இதனால் தொழிலுக்குச் செல்வதோ, அன்றிக் காரியாலயங்கட்குச் செல்வதோ தடைப்படுவதுடன் உழைப்பையும் இழக்கவேண்டியுளது.

குறிப்பிட்ட ஒரு பகுதியை எடுத்துக்கொண்டால் அப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்ட நேரசூசியின் அமைப்புக்கு வண்டிகள் ஓடுவதில்லை என்பது தெரியவரும். ஒருமணிக்கொரு வண்டி என்ற முறையில் ஓடும் பகுதியில் 7 மணிக்கு வண்டி வரும் என்ற நேரசூசியைத் தெரிந்த பிரயாணிகள் வந்து நிலயத்திற் கூடிநின்றால் அது வருவதில்லை. அடுத்து இருமணி நேரம் பிந்தியே வரும். அப்போது 8 மணிக்கும், 9 மணிக்கும் மிகக்கூடிய கூட்டத்தைச் சமாளிக்க முடியாது போய்விடும். இந்த நிலையில் பிரயாணிகள் முண்டியடித்துக் கொண்டே ஏறவேண்டும்.

அப்போது கண்டக்டர் "காசைக் கையிற்கொண்டுவா" என்று கூறுவார். சில்லறை இல்லாதவரை "மாற்றிக் கொண்டுவா" என்று அனுப்பிவிடுவார். சில்லறையுடன் அப்பிரயாணி திரும்பும்போது வண்டி நிறைந்துவிடும். பிரயாணி கால்கடுக்க நிற்கவேண்டியதுதான்.

காலை 9 மணிக்கு முன்னரும், மாலை 5 மணிக்குப் பின்னருமே காரியாலயம், தொழிலகம் முதலியவற்றிலிருந்து திரும்பும் கூட்டம் அதிகம். அவர்களை "அந்த பஸ்ஸில் ஏறு—இந்த பஸ்ஸில் ஏறு" என்று 'றில்' பழக்குவது பஸ்நிலயத்தின் வழக்கமாகும்.

சில சந்தர்ப்பங்களில் இடப்பெயர்ப் பலகையைக்கூட இவர்கள் மாற்றுது விடுவதினால் வழிப்பிரயாணிகள் ஏமாந்தும் விடுகின்றனர். எனவே இ. போ. ச. பிரயாணிகளின் நடமாட்டம் அதிகமான சந்தர்ப்பங்களில் கூடுதலான வண்டிகளை ஒழுங்கு செய்வதுடன், உள்ளூர அரித்துவரும் நிர்வாக ஊழல்களையும் களைதல் வேண்டும். அப்போதுதான் 'எங்கள் பஸ்' என்ற பெருமிதம் எவர்க்கும் உண்டாகும்.

கொக்குவில். **க. சிவசம்பு.**

## பஸ் சேவையும் மக்களும்

இன்றைய சுதந்திர இலங்கையின் பஸ்சேவை மக்களின் நலனுக்காகத் தேசியமயமாக்கப்பட்டதென்றனர் அரசியலார். ஆனால் இன்று யூதர் இனமாக, ஒதுக்கப்பட்ட இனமாக வாழும் தமிழ்மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் சிங்களரால் மட்டும் ஒதுக்கப்படவில்லை. எங்கள் இனத்தினராலேயே ஒதுக்கப்படுகின்றார்கள். அவர்கள்தான் அரசியல் அனாதைகளாகத் தமிழர்களையாக்கி நசுக்குகிறார்கள் என்றால், நம் சொந்தநாட்டிலுமா நசுக்குப்படவேண்டும். கௌரவமின்றி மக்களை மாக்கள் எனக் கருதுகின்றனர் கண்டக்டர் நண்பர்கள். பஸ் வண்டியில் அளவின்றி அடைத்து நோயாளிகளை, வயதானவர்களை, பெண்களை, குழந்தைகளைக் கொல்லாமற் கொல்கின்றனர். பாராளுமன்ற அங்கத்தவர்கள், தமிழ்த் தலைவர்கள் தாங்கள்மட்டும் கஷ்டமின்றிக் காரில் பவனி வருகிறார்கள். பொதுமக்களோ சிங்கள ஸ்ரீ பஸ்ஸில் ஏறக்கூடாதென்ற அவர்கள் கூற்றுக்குக் கட்டுப்பட்டுக் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். கண்ணியமற்ற கண்டக்டர்களும், ஊரை ஏமாற்றுபவர்களும் நமக்கு வேண்டுமா? தங்களைத் தியாகம் செய்யக்கூடிய உத்தமர்களை, உயிரைத் திரணமாக மதிக்கும் தியாகிகளையே பொதுமக்கள் விரும்புகின்றனர்.

சுன்னாகம். **ப. முத்துக்குமாரசாமி.**

# உலகில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

## விலை மேலும் குறையக்கூடும்

உலகச் சந்தையில் தேயிலை விலை மேலும் குறையக்கூடுமென்று தெரிகிறது. சென்ற வருஷத்தைவிட நடப்பு வருடத்தில் உலகில் தேயிலை உற்பத்தி ஒரு கோடி 40 லட்சம் ருத்தல் அதிகரிக்கலாமென்று அமெரிக்க விவசாய இலாகா தெரிவிக்கிறது. சென்ற வருஷத்தில் மொத்தம் 165 கோடி 40 லட்சம் ருத்தல் தேயிலை உலகில் உற்பத்தியாயிற்று. அதாவது முந்திய வருட உற்பத்தியைவிட இது 4 1/2 விகிதம் அதிகமாகும்.

ஆபிரிக்காவில் மலிவான மட்ட ரக தேயிலை அதிகம் உற்பத்தியாவதாகஒரு கருத்து நிலவுகின்றது. அப்படிக் கருதுவது சரியல்ல. ஆபிரிக்க தேயிலைக்கு லண்டன் மார்க்கெட்டில் சராசரி விலை சென்ற வருஷத்தை விட ருத்தலுக்கு 2 பென்ஸ் அதிகமாகக் கிடைத்துள்ளது. கிழக்கு ஆபிரிக்காவில் 1957ல் 7 கோடி 3 லட்சம் ருத்தல் உற்பத்தியாகியிருக்க, சென்ற வருஷத்தில் 8 கோடி ருத்தலுக்கு மேல் உயர்ந்துள்ளது. நைரோபி ஏலத்தில் மாதாமாதம் சராசரி 55 லட்சம் ருத்தல், விற்பனையாகின்றன. முன்னர் 22 லட்சம் ருத்தலே அங்கு விற்பனையாயின.




ஆசிய நாடுகள் சிலவற்றின் அபிவிருத்தித் திட்டம்: 2

# திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பு

## கைத்தொழில் விருத்தியே முக்கிய அம்சம்

டாக்டர் பி. விக்னராஜா

**சீனம், யப்பான் ஆகிய நாடுகளின் பொருளாதார நிலையையும் அவற்றின் வெளிநாட்டு வர்த்தக முறைகளைப் பற்றியும் இக் கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளன**

பொதுவாக் ஆசிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனைகளைப் பற்றிச் சென்ற இதழிற் குறிப்பிட்டேன். சீனம், யப்பான் இரு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி முறைகளையும் அவற்றுக்கான திட்ட அமைப்புக்களிலேற்படும் சிக்கல்களையும் பற்றி இனி ஆராய்வோம்.

திட்டமிடப்பட்ட தேசிய முறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாக சீனத்தின் பொருளாதார வளர்ச்சி அமைந்துள்ளது. ஜப்பானின் பொருளாதாரமோ தனிப்பட்டோரின் முயற்சியிலேயே தங்கியுள்ளது. இவை இரண்டு முறைகட்கும் இடையாக இருக்கும் இந்திய நாட்டின் பொருளாதார இயல்பைப்பற்றி பின்பு ஆராய்வோம்.

சீன நாட்டினை நோக்கும்போது அங்குள்ள ஒரு முகப்பட்டதிட்ட முறைகள் எதையும் வரையறுத்து நிலை நாட்டும் தன்மை வாய்ந்த நிர்வாக அமைப்பிற்கு ஏற்றதாகவே காணப்படுகிறது. அங்கு ஏதாவதொரு திட்டம் அமைச்சுக்களால் ஆராயப்பட்டு அரசாங்கத்தினலும் அங்கீகரிக்கப்பட்டு விடும்போது, அது உண்மையில் ஒரு கட்டளையின் உருவையே எடுத்து விடுகின்றது. அரசாங்க அலுவல்கள் அதற்கேற்ப அமைய, பொது மக்களும் அதன் வழியே இயங்க வேண்டி இருக்கின்றனர். இவ்விதம் விரும்பியோ விரும்பாமலோ, அவர்கள் இடப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்களாகவே வந்து விடுகின்றனர். இவ்வித ஒரு முகப்பட்ட திட்ட அமைப்பில் பெருநன்மை ஒன்று இருக்கின்றது, அதாவது திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை மக்கள் தயவிலேயே விட்டுவிட வேண்டியதில்லை. எனினும் நடைமுறைக்கு வரும்போது கவனித்து இடையிடையே எழும் இன்னல்களுக்கேற்ப திட்டத்தைச் சிறிது மாற்றி அமைத்தலும் உண்டு.

### கைத்தொழில்

திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பில் கைத்தொழில் அபிவிருத்தி அதிமுக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. கைத்தொழிலபிவிருத்திகள் ஏற்பட்டு வரும்போது அதற்கடங்க விவசாய உற்பத்தியையும் அவற்றின் விநியோகத்தையும் கவனித்து கட்டுப்படுத்துதலும் அவசியமாவது வழக்கம். இவ் வளர்ச்சிகள் கூட்டுறவு முறையாக உருவாகும்போது வேண்டியபடி கட்டுப்படுத்தற்கும் மேலதிக உற்பத்தியையோ அவற்றின் விலை நிர்ணயிப்பையோ ஏற்றடங்கி வருதற்கும் உகந்ததாக விடுகின்றன. இவ்விதம் திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பில் பாவினையைக் கட்டுப்படுத்தவோ அதன் மூலம் ஏற்படும் சேமிப்பை வேருெரு துறையிற் செலவிடவோ முடிகின்றது. இவ்வித வரையறுப்புக்கள் மூலமும் உள்நாட்டுப் பலமும் கொண்டே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் இயலக்கூடியதாயிருக்கின்றது. இருந்துங்கூட வெளி நாட்டு உதவியைப் பெறுதல் சில சமயங்களில் தவிர்க்க முடியாததாய் இருந்து விடுகின்றது. நாளாந்ததேவைக்கான வளர்ச்சிக்காக மூலதனத்தை செலவிட நேரும் ஆரம்ப காலத்தில், தட்டுப்பாட்டின் காரணமாக திடீரென்ற விலையேற்றம் ஏற்படுவதும் உண்டு. இவ் விலையேற்றத்தை அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் மூலமும் நேரடியான விலைக் கட்டுப்பாட்டின் மூலமும் வெகுவாகக் குறைத்து விடுகின்றனர். இம்முறைகளினல் தனிமக்களின் முயற்சிகள் பலதுறைகளிலும் கட்டுப்பாட்டுக்குள்ளாகி விடுகின்றன.

கம்யூனிஸ்ட் சீனத்தின் திட்ட அமைப்புக்கள் 1949-ம் ஆண்டு ஆரம்பமாயின. 1952-ம் ஆண்டு வரை உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேடுகளை சரிப்படுத்துவதிலும் பொருளாதார அமைப்பொன்றினை ஏற்படுத்துவதிலுமே கூடிய கவனம் செலுத்தப்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1953-ம் ஆண்டு வருடமொன்றுக்கு 112லிருந்து 115 இலட்சம் ஆகும். இவ்வித நிலையில், இன்று கையாண்டு வரும் முறைகளின் மூலம் சீனம் தனது பொருளாதாரப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்தொழித்து விடுமோ என்பது நாம் இனிக் கண்டறிய வேண்டியதொன்றே. இன்றைய முன்னேற்றம் தொடர்ந்து நடைபெறுமோ என்பது ஒரு புறமிருக்க இன்றுள்ள நிலையில் சீனம் பொருளாதாரத் துறையில் வெகு தூரம் முன்னேறி இருக்கின்றதென்பது கண்கூடு.

### யப்பானின் நிலை

சீனத்தின் பொருளாதாரம் கடந்த பத்து வருடத்துள் அடையப்பெற்ற ஒன்ருகும். ஆனல், யப்பானின் பொருளாதாரமோ இரண்டாவது உலக மகா யுத்த முடிவின்போதே நல்ல திடமான நிலையில் இருந்ததுண்டு. அத்தகைய அபிவிருத்தியைப் பெற்றிருந்துங்கூட ஏனைய ஆசிய நாடுகள் பலவற்றைப் போலவே இன்று யப்பானும் பெருகிவரும் சனத்தொகை, அதற்கேற்ற மூலவளமில்லாமை, ஆகிய பிரச்சனையைத் தீர்க்க இயலாத நிலையிலேயே இருக்கின்றது. இதன் விளைவே பரந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டமாகும். கூடிய சனத்தொகையின் இன்னெரு அறிகுறியே யப்பான் வெளிநாட்டு வியாபாரத்திலும் தங்கியிருக்க வேண்டிய இன்றைய நிலைமை. யுத்தத்திற்கு முன்னர் வருஷத்திற்கு 4 சத விகித அளவுக்குக் கூடி வந்த யப்பானின் தேசிய வருமானம் யுத்தகாலத்தின் பின்னர் ஏறக்குறைய 11 சத விகிதமாய்க் கூடிவருகிறது. இவ்விதம், வருமான விகிதத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுங்கூட பொருளாதாரப் பிரச்சனைகள் யப்பானுக்கு வெகுவாக இன்னும் இருந்து கொண்டே வருகின்றன.

இந்த நெருக்கடிகளின் தன்மைகளைக் கவனிக்கும் போது இவை பழைய அபிவிருத்தி முறைகளின் மூலம் தீர்க்கத்தக்கவையா என்பது சந்தேகத்துக்குரியதே. 1951, 52லிருந்து தனிப்பட்டோர் முயற்சியைச் சார்ந்திருந்த பொருளாதார அமைப்பு இனி மாற்றங்கள் பலவற்றுக்கு உள்ளாகவேண்டியும் நேரிடலாம். தனிப்பட்ட முயற்சியின் போது ஏற்படக்கூடிய திறமையைப்பற்றி இன்றைய யப்பானில் எவரும் சந்தேகப்படவில்லை. எனினும் வியாபார வர்த்தக அம்சங்கள் மாத்திரம் இன்றைய பொருளாதார நெருக்கடியைத்தீர்த்துவிடமுடியாது என்பதும் அரசாங்கம் இனி முன்வந்து அமைக்கும் கொள்கைகள் மூலமும் எடுக்கும் தலையீட்டின் மூலமுமே குறைகளை நிவர்த்தி செய்யலாம் என்பதும் பெரும்பாலும் உணரப்பட்டு வருகின்றது.

### முன்னேற்றத் திட்டங்கள்

எனினும் அடிப்படை அமைப்பிலுள்ள அக்கறை, சமூக நலனிலுள்ள ஊக்கம், மற்றும் பொருள் வளத்தைப்பாதுகாக்க வேண்டிய அவசியம் ஆகிய இவை சேர்ந்து தனிப்பட்ட சுதந்திர பொருளாதார அமைப்பின் கீழ் முன்னேற்றத் திட்டங்களுக்கு இன்னும் வெகுவாக இடமுண்டு என்ற முடிவையே ஏற்படுத்தி இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரத்திட்ட அமைப்புக்களும் ஒவ்வொரு உருவைப் பெறுதற்கு இடமுண்டல்லவா. இதற்கேற்ப திட்டமமைப்பதென்ருல் சீனத்தைப்போன்று ஒன்றைக்குறித்து வரையறுத்துவிட்டு அதனை அரசியற்கட்சி எவ்விதமேனும் கையாண்டே தீரவேண்டும் என்ற நிலைமை நிலவவேண்டியதல்ல என்றே யப்பான் கருதுகிறது. தனிமுயற்சியையும் பொது மக்களது விருப்பத்தையும் வளர்த்து அதற்கேற்ப அபிவிருத்தி முறைகளைக் கையாள்வதையே யப்பான் விரும்புகிறது. இம்முறை மூலமும் அபிவிருத்தி முறைகளைக் கவனித்து முறையான வழிய

(6ஆம் பக்கம் பார்க்க)

‘ஹென்ற்லி’
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
( Old Air Port Road )
இரத்மலானை.

# இராஜேந்திர பிரசாத் மணிமொழிகள்

இப்போதெல்லாம் அதிகமான பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கின்ருேம். மக்களிடையே உயர்தரக் கல்வி கற்கும் ஆர்வம் அதிகரிக்கிறது. இது நல்லதே. ஆனல் கல்வி ஸ்தாபனங்கள் அதிகரிப்பதால் மட்டும், நமது மனமும், புத்தியும் அபிவிருத்தி அடைந்ததாகக் கொள்ளமுடியாது. இந்த ஸ்தாபனங்களில் படிக்கும் மாணவர்களின் புத்திக்கூர்மை சற்றே குறைந்து வருவதைக் காண ஏமாற்றமளிக்கின்றது.

கல்வி என்பது பயனுள்ளதாகவும் பூரணமாகவும், சிக்கனமாகவும் இருக்கவேண்டுமாயின், அதை மக்களின் சொந்த மொழி மூலமாகவே அமைக்கவேண்டும்.

### பரீட்சைப் பளு

மாணவர்களுக்கு பரீட்சைகள் பெரிய பளுவாகவுள்ளன. இந்தப் பளுவிலிருந்து வாலிபர்களுக்கு எப்படி, எவ்வளவு தூரம் கஷ்ட நிவாரணம் அளிக்கலாமென்பதை ஆலோசிக்கவேண்டும். பரீட்சைகளில் தேறுவதற்காக மட்டும் பல விஷயங்களை மனனம் செய்வதைவிட்டு, அவர்கள் உண்மையான அறிவைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்த உதவவேண்டும்.

### குருகுல முறை

பழைய கால குருகுல முறையிலே குருவுக்கும் மாணவருக்கும் மிக நெருங்கிய உறவுண்டு. வரவரக் குன்றி, அது பிரிட்டன் கல்வி முறையில் அடியோடு மறைந்தது. நவீன கல்வி முறை அந்த லட்சியத்திலிருந்து விலகி, இன்று மாணவருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய உறவில்லாமல், ஏதோ முதலாளி—தொழிலாளி போன்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. மாணவரிடையே ஒழுங்கின்மை அதிகரித்துள்ளதற்கு இதுவே பெரிதும் காரணமாகும். புத்தகப் படிப்பைவிட, மனமும், ஆன்மீக, தார்மிக பண்புகளும் அபிவிருத்தியடைவதே மாணவருக்கு அதிக முக்கியமும் பலனுள்ளதாகவும் இருக்கும்.

### மனிதனின் அகந்தை

பாரதத்திலுள்ள பஸ்மாசுரன் கதையைப்போல இன்று மனிதனின் கையிலே அளவு கடந்த நாசகார சக்தியை தேவதைகள் அளித்துள்ளன. இதைக் கண்டு மனிதன் மிகவும் அகந்தையும் பெருமையும் அடைந்துள்ளான். ஆனல் தன்னையே நாசம் செய்து விடக்கூடிய நடனத்தை அவன் ஆடக்கூடாது. இதை எப்படித் தடுக்கலாம்? இதுவே இன்றைய சர்வதேச பிரச்சினையாகவுள்ளது. எந்த அறிவுத் தெய்வம், இச் சக்தியை மனிதனுக்கு அளித்ததோ, அதே தெய்வம் அந்தச்சக்தியை சரிவரப் பயன்படுத்தவும் கற்பிக்க வேண்டுமென்று நாம் நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம். சக்தியைப் பற்றிய அறிவுமட்டும் நமக்குப் போதாது. அது தீங்காகவும் முடியலாம். அத்துடன் நல்ல விவேகம் வேண்டும். சர்வகலாசாலை, விஞ்ஞான அறிவுடன், மெய்ஞ்ஞான விவேகத்தையும் நமது மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். அப்பொழுதே தான் பெற்றுள்ள புதிய சக்திகளை அவன் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தவும் நல் வாழ்வு வாழவும் முடியும்.

### கைப்பொருட் காட்சி

நமது கைப்பணியாளருக்குப் போதிய உற்சாகம் இல்லாததால், அவர்கள் தங்கள் கலை அறிவை பொதுவாக இழந்து வருகின்றனர். அவர்கள் உற்பத்திசெய்த கைப்பணிப் பொருள்களை வாங்கி ஆதரித்தாலே அவர்கள் உற்சாகத்துடன், தங்கள் கலைகளை மேன் மேலும் வளர்க்கமுடியும். கைப்பொருட் காட்சிகள் நாட்டின் பல பாகங்களில் நடப்பதுடன், அவை ஒரு சில நாட்கள் மட்டுமன்றி நிரந்தரமானதாக இருக்கவேண்டும்.

சிறுகதை

# ஜீவ நதி

“பவானி”

இன்னும்பதினைந்துநிமிஷங்களில் புகையிரதம் மணிகண்டாலை அடைந்துவிடும்.

ஜன்னலுக்கு வெளியே நோக்கினன் இராமலிங்கம். இலைகளையெல்லாம் உதிர்த்து மொட்டையாய் நின்ற மரங்கள் தளிர் தள்ளி நின்றன. இளவேனில் பிறந்துவிட்டது. இயற்கை புதிய வாழ்க்கை தொடங்குகிறது; புதிய உலகைப் படைக்கின்றது.

இராமலிங்கம் இன்பமாக நெட்டுயிர்த்தான், படியிலிருந்த அட்டைப்பெட்டியைத் தடவிக்கொண்டான். நேர்மையான உடலுழைப்பில் கிடைத்த வெகுமதியல்லவா அது! சிறையென்ற உலையிலே உருக்கிப்படைத்துவிட்ட புதிய பிம்பமல்லவா இன்றைய இராமலிங்கம். அந்தத் தனிமையில் எத்தனை துடிப்பு! சிறைச் சுவர்களோடு அவன் சொந்தம் கொண்டாடிய நாட்களில் தான் தங்கத்தை எவ்வளவு என்றுணர்ந்தான். அவளுக்காக ஒவ்வொரு விடியும் ஏங்கினன். அவனை அவள் வெறுக்காதிருந்தால் போதும்!

தனக்கு அந்தத் திருட்டுக்குணம் இனி என்றுமே வராதென்றுதான் திடமாக நம்பினன். இந்த ஞானோதயம் நீடிக்கும் என்பது என்ன நிச்சயம்? பணத்தோடு விளையாடினல் தானே அந்தச் சோதனை ஏற்படும்? அதற்கு இராமலிங்கம் தான் சந்தர்ப்பமே அளிக்கப்போவதில்லையே!

“ஐயா இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது?” எதிரேயிருந்த மனிதரை நூறு தரம் மணி கேட்டுவிட்டான். அவரும் எரிச்சலைக் கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டு பதிலளித்தார். அவனது துடிப்பு அவருக்கெங்கே தெரியும்? “இன்னும் மூன்று நிமிஷம் தான். அவசரமாகப் போகவேண்டுமோ?” “ஆமாம்...ஆமாம்... அவசரம் தான்.” ஏழு வருஷத்திய அவசரமல்லவா அது? தங்கத்திற்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவள் பெயரைப்போலவே பத்தரைமாற்றுத் தங்கம் தான்! அவனைப் பற்றிய உண்மையை அறிந்திருந்தால் அவனைத் திரும்பியும் பார்த்திருக்கமாட்டாள். அவன் கைதாகும் காரணத்தை அறிந்ததும் தங்கம் மலைத்துப் போனுள். ஆழ்ந்த துயரம் அவள் முகத்தில் பரந்தது. வாழ்க்கையின் தொடர்பு அறுந்து கற்சுவரும் கம்பிக்கதவும் அவனுக்கு உலகமான போது, நினைவிலும் கனவிலும் கற்பனையிலும் தங்கத்தின் துயர் படிந்த முகமே அவனை விரட்டி விரட்டி வந்தது. அவளுக்குகந்தவனுகத் தான் ஆகிவிட்டதான பெருமிதம் இப்போது.

உயிரினும் மேலான அந்த அட்டைப் பெட்டியைத், தன் நேர்மையின் திறத்தைத் தங்கத்திற்கு நிறுவப்போகும் பரிசுகளை நெஞ்சோடு அணைத்துப் பிடித்தவாறு ஸ்டேசனுக்கு வெளியே வந்து தெருவில் இறங்கி நடந்தான்.

தெருவின் எதிர்ப்பக்கத்தில் சிறுவரும் சிறுமியரும் கலகலத்தவாறு சிட்டுக்கள் போல் தாவியும் நடந்தும் வந்து கொண்டிருந்தனர். இராமலிங்கத்தின் சிந்தனை தன் குழந்தையை நோக்கிப் பறந்தது. அவளும் இவர்களைப் போலக் கவலையின்றி சிட்டுப்போல சிரித்துத் திரிவாளல்லவா? தெருவைக் கடந்துகொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்தவாறு தன்னையறியாது நின்றுவிட்டான். கடைசியாக வந்துகொண்டிருந்த சிறு பெண் ஒருத்தியின் புத்தகமொன்று நழுவித் தெருவில் திறந்தவாறு விழுந்தது. அதன் ஒற்றைகளிடையே அந்தப் பெண் வைத்திருந்த வர்ணக்காகிதத் துண்டுகளெல்லாம் தெருவில் சிதறின. அவள் பட்டுப் பூச்சிபோல அங்கும் இங்கும் பறந்து பறந்து, உட்கார்ந்து எழுந்து, அவற்றைப் பொறுக்கலானுள். தெருவைக் கடந்துவிட்ட சிறுமிகளுள் ஒருத்தி திரும்பிக், “கமலம், சீக்கிரம் வா!” என்று கத்தினுள்.

திடீரென்று ‘ஹாரன்’ அலறல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிய சிறுமி நடுத்தெருவில் போட்டுவிட்ட புத்தகக் கட்டை வாரிக்கொண்டு திரும்பி தெரு ஓரத்தை நோக்கிப் பாய்ந்தாள். இராமலிங்கம் கையைத் தூக்கிக் கொண்டு கத்திய அதே வினடி கார் அவளை மோதி எறிந்தது.

இராமலிங்கம் சிறிது தயங்கினன். ‘பாவம் யார் குழந்தையோ? இதற்கு அவன் என்ன செய்துவிட முடியும்? அவனுக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்? ஒரு வம்பில் அகப்பட்டு அநுபவித்தது போதும்’. குழந்தைகளில் ஒன்று ஓலமிட்டு அழத் தொடங்கிவிட்டது. அவன் திரும்பிப் பார்த்தான்—இரத்தத்தில் மிதந்த அந்த முகத்தில் நிலவிய அமைதி அவனை உலுக்கிற்று. திரும்பிச் சிறுமி கிடந்த இடத்திற்கு வந்துவிட்டான். “இது யார் குழந்தை?” என்று கேட்டான்.

“எங்கள் பக்கத்து வீட்டுப் பிள்ளை” என்றுன் அவர்களுள் பெரியவனை பையன் ஒருவன்.

“சரி தம்பி, நீ இரண்டு எட்டில் ஸ்டேஷனுக்கு ஓடி ஒரு ‘டாக்ஸி’ கூட்டிக்கொண்டு வா. சீக்கிரம்!” என்றவன் மண்டியிட்டுத் தன் துண்டை அவளுடைய தலையில் சுற்றிக் கட்டுப்போட்டுவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு தெரு ஓரத்திற்குப் போனுன். சிறுபோதில் டாக்ஸி வந்தது.

“தம்பி நீ இவர்கள் வீட்டுக்குப் போய் நடந்ததைச் சொல்லி ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்! — டிரைவர்! ஆஸ்பத்திரிக்குச் சீக்கிரம் ஓட்டப்பா” என்று உத்தரவிட்டான். வண்டியைவேகமாகஓட்டியபோதும் இராமலிங்கத்திற்குத் திருப்தியாகவில்லை.

கமலத்தின் முகத்தைப் பார்த்தான். மலருமுன் கிள்ளியெறியப்பட்ட அரும்பாகக் கிடந்தாள். இனிய முகம்! அவளுடைய குழந்தையும் இப்படித்தானே இருப்பாள்? தங்கம் என்ன பெயர் வைத்தாளோ? பெண் குழந்தை யாரைக் கொண்டதோ தந்தையைக் கொள்ளும் என்று சொல்வார்கள். இல்லை தங்கத்தின் குழந்தை எதுவும் அவளைப் போலத்தான் இருக்கும். - இருக்க வேண்டும்! தந்தையைப்போல் இருக்கவேண்டாம்! இந்தக் கமலத்தைப் போல் மொட்டு இதழ்களும் பட்டு இமைகளும் தங்கத்தின் சிவந்த நிறமுமாகத் தான் இருப்பாள்.

இனிய கனவில் இராமலிங்கம் மெல்ல மடியைத் தடவினுன். அவனுக்குப் பகீரென்றது! அவனுடைய பெட்டி! எங்கே? எங்கே? பரபரவென்று மேலும் கீழும் பார்த்தான் — கமலத்திற்குக் கட்டுப்போட அதைத் தெருவில் வைத்தவன் பிறகு எடுக்கவேயில்லை! அவனது அன்பு மனைவிக்கும் பிஞ்சுக் குழந்தைக்கும் கொண்டு வந்த அன்பை அடக்கியதல்லவா அந்தப் பெட்டி. குரோதம் பொங்கக் கமலத்தைப் பார்த்தான். சனியன்! இவ்வளவு தூரம் வந்தவனுக்குக் கடைசி நேரத்தில் சகுனத் தடைபோல் முளைத்தது. என் இன்பத்தைச் சூறையாடியுமல்லவா விட்டது மூதேவி! அதைச் சாவின் வாயிலிருந்து மீட்க அழைத்து வேறு செல்கிறுன்.

“ஆஸ்பத்திரி வந்துவிட்டது ஐயா!” என்று திரும்பிய டிரைவர் இராமலிங்கத்தின் முகத்தில் தெரிந்த கடூரத்தைக் கண்டு திகைத்துப்போனுன். ‘மீட்ட’ரைப் பார்த்து வேண்டாவெறுப்பாக இரண்டரை ரூபாயை நீட்டியவன் கமலத்தைத் தூக்கிக் கொண்டே உள்ளே நுழைந்தான்...... அவனைக் காத்திருக்கச் சொல்லிக் கமலத்தைச் சிகிச்சைக்குக் கொண்டு போய்விட்டார்கள். இராமலிங்கம் கமலத்தையும் தன்னையும் மாறி மாறிச் சபித்துக் கொண்டான். ஆத்திர எண்ணங்களோடு எவ்வளவு நேரம் இருந்தானே தெரியாது ......டாக்டரைக் கண்டதும் எழுந்து நின்றுன். “இனி நான் போகலாமா டாக்டர்?”

“இருங்கள் ஸார். அந்தக் குழந்தைக்கு அதிகப்படியான இரத்தம் சேதமாகிவிட்டது. உடனே இரத்தம் செலுத்த வேண்டும். எங்களிடம் இல்லை. அடுத்த நகர் ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் பேசச் சொல்லியிருக்கிறேன். அவர்களிடம் இந்த இரத்தத் தொகுதி இருந்தாலும் அது இங்கு வருமுன் குழந்தை ஒருவேளை இறந்துவிடும். தாய் அல்லது தந்தையின் இரத்தம் ஒத்துப் போகும் என்று நினைக்கிறேன். அவர்கள் சீக்கிரம் வந்தால்!— யாரென்றே உங்களுக்குத் தெரியாதா?”

“தெரியாது! தெரியாது! அவர்கள் வந்துவிடுவார்கள். அந்தச் சிறுவன் போய்ச் சொல்லவேண்டாமா? நான் அவசர அலுவலாய்ப் போய்க் கொண்டிருந்தேன் — இப்பொழுதே தாமதமாகிவிட்டது.இனியாவது போகலாமா?” கடுமையாகச் சொன்னுன்.

அவனது வார்த்தைகளைச் செவிசாய்க்காது டாக்டர் உள்ளே சென்று விட்டார். தனித்திருந்த இராமலிங்கம் வெளியேறினுர்.

ஆஸ்பத்திரி வாசலில் ஒரு “போஸ்டர்” அவன் கண்ணைக் கவர்ந்தது. இரத்த தானம் செய்யும்படி. ஒரு ‘நர்ஸ்’ அழைத்துக் கொண்டிருந்தாள். ஒரு யோசனை ‘பளிச்’சிட்டது. அவனுடைய இரத்தத்தைக் கொடுத்துப் பத்து ரூபாயாவது சம்பாதிக்கலாம். அதில் குழந்தைக்காவது ஏதாவது வாங்கிப் போகலாம். நடந்ததையெல்லாம் அறிந்ததும், தன் பாசத்தின் ஆழத்தை அறிந்து தங்கம் மகிழ்வாளல்லவா? இராமலிங்கம் மீண்டும் உள்ளே திரும்பினுன்......

கண்ணடிக் குழாயில் ஏறிய இரத்தத்தைப் பார்த்தான். இரத்தத்தைக் கொடுத்த களைப்பில் படுத்திருந்தான். ஆயாசம் நீங்கியதும் அவன் எழுந்திருக்கஉதவிஅவனுடைய சட்டையை எடுத்துக் கொடுத்தாள் ஒரு ‘நர்ஸ்.’ பணத்தைப் பெற்றுக்கொள்ளச் சென்றுன். ‘வார்டு’களைத் தாண்டிச் செல்லும்பொழுது ‘வார்டி’லிருந்து வெளியே வந்த பழைய ‘நர்ஸ்’ அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

“நீங்கள் இரத்த தானம் செய்ய வந்த வேளை நல்ல வேளை. ஒரு குழந்தைக்கு உயிரளித்துவிட்டீர்கள்! டாக்டர் கூடக் கைவிட்டிருந்தார். குழந்தையைப் பார்க்க வருகிறீர்களா? அதன் தாய் உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறுள்” அவசரத்தோடு போய்விட்டாள். இன்னெரு குழந்தையாய் இருந்திருந்தால் இதற்காக இராமலிங்கம் பெருமையடைந்திருப்பான். ஆனல் கமலத்தை நினைத்ததும் அவனுடைய குரோதம் பொங்கியெழுந்தது. தன் மகளுக்குக் கொண்டுவந்த அன்புப் பரிசைத் தட்டிக்கொண்ட குட்டிப் பிசாசு தான் கமலம் என்ற வெறுப்பு அவனுக்கு. ‘வார்டு’ வாசலை அடைந்ததும் அவனுடைய கால்கள் சிறிது தயங்கின. கட்டிலருகில் கண்களில் நீர் சோர ஒரு பெண் நின்றுள். எதையோ நினைவு கூர்வது போல் கண்களைக் கூசினுன் இராமலிங்கம். அது யார்?

“தங்கம்! தங்கம்!” என்று கூவினுன்.

“யார்? நீங்களா? வந்துவிட்டீர்களா?” தாவிச் சென்று அவள் கைகளைப் பற்றினுள் தங்கம்.

“தங்கம் நீ எங்கே இங்கு வந்தாய்?” தங்கம் விம்மினுள்.

“இதோ!...இதோ!...உங்கள் பெண்! கமலம்!...”

“ஐயோ!” இராமலிங்கம் அந்தப் பிஞ்சுப் பாதங்களில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினுன். அவன் விருப்புடன் வாங்கிய பரிசுகள் எதற்கு? அவன் வெறுப்புடன் அளித்த உயிர்ப்பரிசு—ஜீவநதியாக மாறி அவள் உடலில் ப்ாய்ந்து கொண்டிருந்ததே!... அதைச் சேர்ந்த உடலுக்கு அதற்குமேல் பரிசு எதற்கு? பத்து ரூபாய்ப் பணம் அது. தன் குழந்தைக்குதவவே இரத்தத்தைக் கொடுத்தான். ஆனல் பெறுமதி மிகுந்த அந்தக் குழந்தைக்கு—தன் இரத்தத்துக்கு —இரத்தத்தை ஈந்துஉயிரைப் பிடித்துவிட்டான். கடந்த ஏழாண்டுகளில் அவன் கொதிப்பேறிய இதயத்துக்கு இந்தத் தியாகம் தருவது எத்துணை இதம்! இது எது? விதியின் விளையாட்டா? இல்லை உயிரோடு இரண்டறக் கலந்த இணைப்பின் கவர்ச்சி.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்றோ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம் :

புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி

268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்

**தாலியின் தோற்றம் காணவேண்டி நம் உள்ளம் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்புள்ள காலத்திற்குத் தாவுகின்றது. கடல் தாவிய அனுமான் "கண்டேன், கண்டேன்" என்று களிப்புப் பொங்கிக் குதித்தோடி வந்ததைப் போல் தாலி பிறந்த கதையைக் கண்டு கொண்டதாய் எண்ணி மகிழ்கிறோம்.**

# கிறித்தவத் திருமணம்

—— பேராசிரியர் மு. சு. அருள்சாமி ——
[தமிழ்த் துறைத் தலைவர், இலோயலாக் கல்லூரி, சென்னை]

தண்ணறுஞ் சோலையில் ஓர் தேமா. பண்பட்ட நிலத்தில் விழுந்த விதை முளைத்து, வேரூன்றி வளர்ந்து, மரமாகி, முதல் மலரை ஏந்தி நிற்கிறது. புதுமலர் விரிகிறது. நறுமணம் சோலையெங்கும் பரவுகிறது. மரத்தின் வாழ்க்கையில் மணக்கும் நாள் அது. தேமா, சென்ற நாட்களில் செழுமையுற வளர்ந்து வந்த வரலாற்றைக் காட்டுகிறது, அம்மலரின் மணம். பூப்பூத்துப் பிஞ்சு விட்டுப், பெருங்காயாக மாறி, விரும்பும் நற்சுவைக்கனியாகும் நாளையும் முன்னுரைக்கிறது அம்மலரின் மணம். மாமரத்துக்கு அது ஓர் மணநாள். பண்பட்ட குலத்தில் பிறந்து வளர்ந்து அழகும் குணமும் ஒருங்கே அமைந்த பருவ மங்கையாக நிற்கிறாள் நங்கை. நம்பியோ நற்குலப் பெற்றோரின் புதல்வனாய்த் தோன்றி, வளர்ந்து, திரண்ட தோள் படைத்த கட்டிளங் காளையாகக் காட்சி அளிக்கிறான். இருவரும் இணையும் நாள் மணநாள். இருவர்க்கும் சென்ற நாள் சிறப்பையெல்லாம் தெரியக்காட்டுகிறது, அந்நாள். பொன்போல் புதல்வர் புதல்வியரைப் பெற்றுப், பேரறங்கள் பேணி நிலைத்த பேரின்பம் பெறப்போவதனை நினைப்பூட்டுகிறது அந்நாள். தேமா மலரோ சிறியது. வாடும் இயல்புடையது. அம்மலரின் மணமும் சிறிய சோலையளவில் பரவும். நிலையற்றதுங்கூட. மக்களோ வாடாப் பெருமலர்கள். அம்மலர்களின் மணமோ மண்ணுலகேயன்றி வானுலகமெங்கும் வீசும். என்றும் நின்று நிலவும் இயல்புடையது, இம்மணம். ஆதலின் மக்கள் வாழ்க்கை மலர்ந்து மணக்கும் நிகழ்ச்சியைத் 'திருமணம்' என்று உரைப்பது தக்கதே.

அன்று மகவாயிருந்தபோது அன்னையின் மலர்க்கை அணைப்பு அமுதமாய் இனித்தது. பின்னர்ச், செப்பும் பொம்மையும் துணை நின்றன. சிற்றாடை கட்டிய நாளில் சுற்றியுள்ள சிறுமியரோடு சிற்றில் அமைத்தாள். வண்ணச் சிறு மணல் வீட்டில் சிறு சோறு சமைத்து வரையிலா இன்பம் கண்டாள். பட்டுப் புனைந்து, பின்னி, முடித்துப் பிச்சிப் பூச்சூடிப் பள்ளி சென்ற நாளில் தன்னையொத்த கன்னியர் கூட்டுறவைத் தேனெனக் கொண்டாள். இன்றோ; அன்னையின் அணைப்புக் கசக்கிறது. சின்னச் செப்பு, பொம்மை, சிறுமணல் வீடெல்லாம் கனவில் கண்டு மறந்த பொருள்களாயின. தோழியர் துணையோ பெருந் தொல்லையாக மாறி வருகிறது. அன்னையின் அணைப்பையும் தோழியின் துணையையும் ஒருசேரத் தருபவர் இல்லையே என்றெண்ணித் தவிக்கிறாள் இளம்பெண். தாயின் மடியினில் தவழ்ந்த நாள் கழிந்தது. தாங்கொணாத குறும்புகள் செய்த நாள் சென்றது. ஏரி, குளங்களில் நீந்தி இன்பம் கண்ட நாள் நீங்கியது. சுற்றாத இடமெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டான். தொடாத ஏடெல்லாம் தொட்டுக் கற்றுத் தேர்ந்த கலைஞனாகி விட்டான். ஆருயிர்த் தோழர்களுக்கோர் அளவில்லை. ஆயினும் "எனக்கென்றே ஒரு துணை கிடைக்காதா? என் அருகே எப்போதும் இருக்காதா? அமுதமொழி பேசி ஆர்வம் ஊட்டாதா? பொற் பாவையாய் முன்னமர்ந்து பாராட்டிக் கொண்டிருக்காதா?" என்றெல்லாம் எண்ணி ஏங்குகிறான். இருவரும் காண்கிறார்கள். ஒருவரையொருவர் ஏற்றதுணையெனத் தேர்கிறார்கள். இசைகிறார்கள். இணைகிறார்கள். இது உலகத்தியல்பு. இவ்வுண்மை இயேசு பெருமானின் பொன்மொழியில் இலங்குகிறது: "படைப்பு நாள் தொட்டு ஆண்டவர் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்" மார்க்கு 10:-6: என்னும் மொழி திருமணம் இயற்கையான நிகழ்ச்சி என்பதைக் காட்டுகிறது.

## சிந்தனைத் திரையில்

திருமணம் என்றவுடன் நம் சிந்தனைத் திரையில் பல காட்சிகள் விழுகின்றன. வைரத்தோடு நினைவிற்கு வருகிறது. முத்துமாலையின் தண்ணொளியை மனக்கண் காண்கிறது. பல பொன்னணிகள் மனத்தில் வந்து போன வண்ணமாய் இருக்கின்றன. உணவில் சிறிது அதிக ஆர்வம் கொண்டவர்க்கு சுவையான பண்டங்கள் பற்றிய சிறு பகற் கனவும் தோன்றலாம். இவையெல்லாம் துணைப் பொருள்கள். திருமணத்தைக் குறிக்கும் இன்னொரு பொருள் உண்டு. அதுதான் தாலி. தமிழ் நாட்டில் தாலி கட்டுதலையே திருமணமாகக் கருதுகிறோம். தாலி திருமணப் பொருள். தாலிக்கு இந்நாளில் தலைவலி ஏற்பட்டுள்ளது. தாலி பற்றி எங்கும் பேசப்படுகிறது. அதுபற்றி அரிய ஆராய்ச்சி பிறந்துள்ளது. "தமிழருக்குத் தாலியுண்டா?" என்ற கேள்வி எழுகின்றது. இல்லை என்பவர் எங்கெங்கெல்லாமோ தேடிச் சான்றுகள் கொண்டு வந்து காட்டிக் களிக்கிறார்கள். உண்டு என்பார் பலர். சான்றுகள் பலவற்றைக் கூட்டிக் கொணர்ந்து "தாலியணிந்தார் தமிழர்" என்று கூறி மகிழ்கின்றனர்.

தாலியின் தோற்றம் காண வேண்டி நம் உள்ளம் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்புள்ள காலத்திற்குத் தாவுகிறது. கடல் தாவிய அனுமான் "கண்டேன், கண்டேன்" என்று களிப்புப் பொங்கிக் குதித்தோடி வந்ததைப்போல் தாலி பிறந்த கதையைக் கண்டு கொண்டதாய் எண்ணி மகிழ்கின்றோம்.

பாய்ந்து வந்த சினப் புலியை ஆய்ந்து நின்று தாக்கி அரும்போர் செய்து வெற்றி கொண்டான் வீரன். பட்டபுலியின் பற்களைப் பிடுங்கிப் பேணிக் கொண்டு வந்து தன் ஆருயிர்க் காதலிக்கு அளித்தான். "சீ! சீ! நாறும் பற்களையா நான் அணிவேன்?" என்று எண்ணி நகையாடிப் புலிப்பற்களை வீசி எறிந்துவிடவில்லை அப்பொற்கொடி. தன் உள்ளங் கவர்ந்த ஒருவனது வீரம் உலகோருக் கெல்லாம் விளங்கும்படியாய் அப்பற்களை எழில்படக் கோத்து இதயம் அருகே உலவும்படியாக அணிந்து மகிழ்ந்தாள் காதலி. அதுவே தாலியாயிற்று. இப்படியே சுவை பொருந்தக் கூறிப் பாராட்டி மகிழ்கிறோம். இக்கூற்று உண்மையாயின் தாலி வீரத்தின் சின்னமாகும். அந்நாள் இளம்பெண் வீரனையே காதலித்தாள். வீரத்திற்காகவே அவனை விரும்பி மணந்தாள். இந்நாள் நங்கையோ வீரத்திற்காக ஒருவனை விரும்புவதில்லை. பி. ஏ., எம். ஏ. போன்ற பட்டத்திற்காக விரும்புகிறாள். மருத்துவரை மணக்க விரும்புகிறாள். பொறியாளனைப் பொருந்த விரும்பித் துடிக்கிறாள். ஓங்கிய மாளிகையை, உயர்ந்த செல்வத்தை, ஓயாதே இயங்கும் காரினைக் காதலிக்கின்றாள். புதுமைப் பித்தர்கள் புதியதோர் கேள்வியை எழுப்பலாம். புலிநிகர் மறவனை விரும்பியவள் புலிப்பல் தாலியை அணிந்தாள் என்பதில் பொருள் உண்டு. பல்வேறு வினைஞரைப், பெருஞ் செல்வத்தைக் காதலிக்கும் நங்கையர் அதனை அணிதல் கூடாது. மங்கையர் காதல் நெஞ்சத்தில் மாற்றம் நிகழ்ந்ததுபோல் தாலியிலும் பெரியதோர் மாற்றத்தைக் காண வேண்டும்என்றும் துடிக்கலாம். அப்படியானால் பட்டச்சான்றிதழ், நாடிமானி (ஸ்டெதாஸ்கோப்) சுத்தியல், வீடு, ரூபாய், கார் ஆகிய இவற்றில் ஒன்றின் உருவம் பொறித்த தாலியை அணியவேண்டும் என்றும் வழக்காடலாம். இத்தகைய பூசல்களுக்கிடையேயும் பல்வேறு சமயத்தைச் சார்ந்த தமிழர்களும் தாலிகட்டுதலையே திருமணமாகக் கருதுகின்றனர். கிறிஸ்தவரும் தாலியைத் திருமணச் சின்னமாய்க் கொள்ளுகின்றனர். ஆனால் கிறிஸ்து பெருமான் தாலிபற்றியோ, வேறு மணமங்கல அணிபற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. ஏன்?

## தையல்காரன் கவலை

மக்கள் எவ்வகைச் சிறு குறையுமின்றித் திருமணம் நிகழவேண்டுமென்பதில் அளவில்லா ஆர்வம்கொண்டிருக்கிறார்கள். மணமக்களின் ஆடை, அணிகளில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். பற்பல சடங்குகளை முறைப்படி, வழுவின்றி நிறைவேற்ற எண்ணுகிறார்கள். திருமணத்தில் மக்கள் கொள்ளும் கவலையெல்லாம் தையல்காரன் கவலையாகவே இருக்கிறது. தாயின் கவலையாக இருப்பதில்லை. பெண்ணொருத்தியிடம் துணிபெற்றுச்செல்கிறான் தையல்காரன். குறித்த அளவுப்படி தைப்பதில் கவனம் செலுத்துகிறான். சிறு குறையும் நிகழக்கூடாதே என்று கவலைப்படுகிறான். அத் துணி பெண் மேனியில் பொலிவுற விளங்கவேண்டுமே என்று எண்ணுகிறான். தைத்தவனை யாரென்று கேட்கும்படி தையல் வேலை அமைந்திருக்க வேண்டுமென்று துடிக்கிறான். திருமணம் நடத்துவோர் கவலையும் இத் தையல்காரன் கவலை போன்றதே. இது பயனற்ற கவலை. இது தாயின்கவலையாக மாறவேண்டும். புற அழகை மேம்படுத்துவதே தனக்குப் புகழும், பிழைப்பும் என்றெண்ணும் தையல்காரன் நிலையில் நிற்கக்கூடாது. பிள்ளையின் அகத்தைத் திருத்தி அழகுற அமைப்பதே கடன் என்றெண்ணும் அன்னை நிலைக்கு வர வேண்டும்.

இங்கே எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறுகிறேன். இது அன்னையின் நிலைக்கும், தையல்காரன்நிலைக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு விளக்கும். தொல்காப்பியர் அந்தணரைப் பார்க்கிறார். வள்ளுவரும் பார்க்கிறார். தொல்காப்பியரால் தையல்காரன்நிலையைத் தாண்ட இயலவில்லை. திருவள்ளுவரோ தாய்நிலையில் நிற்கிறார். அந்தணரைப் பார்த்த தொல்காப்பியர் அவர் தம் மார்பில் புரண்ட முப்புரி நூலைக் கண்டார். தொங்கிய கரகம் கண்டார். அந்தணர்க்கும் முக்கோலும் மணையும் தொல்காப்பியர் கண்முன் நின்றன. ஆய்ந்தாய்ந்து பார்த்தாலும் அவைகளையே பார்த்தார்.

நூலே கரகம் முக்கோல்
மணையே
ஆயுங் காலை அந்தணர்க்குரிய
(தொல். பொருள் 71)

என்ற சூத்திரத்தை வகுத்துவிட்டார். திருவள்ளுவரும் அந்தணரைப்பார்த்தார். கரகமோ, நூலோ, கவின் முக்கோலோ, மணையோ அவரது உள்ளத்தைக் கவரவில்லை. வள்ளுவர் மனம் முப்புரி நூலைத் தாண்டியது. அது கிடந்த மார்பை உருவியது. அந்தணர் நெஞ்சத்திற்குட் சென்றது. அங்குக் குடியிருக்கும் செந்தண்மையைக் கண்டது. அழகான பாடலும் உருவெடுத்தது.

அந்தணர் என்போர் அற
வோர் மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக
லான்.

என்னும் தேனொழுகும் பாடல் வள்ளுவர் தாய் நிலையை விளக்குகிறது. நாம் தையல்காரன் நிலையில் நின்று திருமணத்தின் புறக்கோலங்களை பார்த்தோம். இயேசுக்கிறிஸ்து அன்னை நிலையாம் அருள் நிலையில் நின்று மணமகள் நெஞ்சத்தை நோக்குகிறார்.

—தொடரும்

**யாழ் வினோதக் காணிவலும்**
**கண்கவர் பொருட்காட்சியும்**

**யாழ் மத்திய நூல் நிலையக் கட்டிட நிதிக்காக**
1959-ம் ஆண்டு ஜூன் மாதம்
**12-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை**
யாழ்ப்பாண மாநகரசபை மைதானத்தில் நடைபெறும்.

★ அரசாங்க இலாகாக்கள், தூதுவர் காரியாலயங்கள், தேயிலைப் பிரசாரப் பகுதிபோன்ற முக்கியமான ஸ்தாபனங்கள் பங்குகொள்ளும்.

★ மாட்டுவண்டிச் சவாரி, மல்யுத்தப் போட்டி, மின்சார ஒளியில் கைப்பந்தாட்டப் போட்டிகளும்; சுழல் ராட்டினம், குழந்தைகள் பூங்கா, பயங்கரக் கிணறு, கார் அதிர்ஷ்டச் சீட்டு, முதலியனவும் ஏற்பாடாகியுள்ளன.

★ சங்கீதம், நடனம், நாடகம், முதலிய கலை நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

இவற்றில் இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர்.

★ பேச்சு வன்மை, துப்பாக்கிச் சூடு, தேகாப்பியாசம், நீச்சல் முதலியவற்றில் பள்ளிக்கூட மாணவர்களிடையே போட்டிகள் நடைபெறும்.

★ பார், (Bar) சிற்றுண்டிச்சாலை, இந்திய கைத்தறி இலாகாவினால் அமைக்கப்பெறும் கைத்தறி உடை காட்சிகள் முக்கியாம்சங்களாக இடம் பெறும்.

**நூல் நிலையம் உங்கள் நிதியையும் நேரத்தையும் வேண்டுகிறது.**

**தயவு கூர்ந்து வாருங்கள்!**
**தாராளமாகச் செலவு செய்யுங்கள்!!**

ஒரு கடை (10 x 15) ரூபா 100/-
இரண்டு கடைகள் ரூபா 150/-
காணிவல் நடைபெறும் காலத்துக்கு மட்டும்.

கே. வி. மயில்வாகனம்
பொதுக் காரியதரிசி,
யாழ் வினோதக் காணிவல்.

[சென்றவாரத் தொடர்ச்சி]

இந் நான்கு பெரியார்களும் பனமாவிற்குச் சென்றார்கள். ஆராய்ச்சி ஆரம்பமாயிற்று. பனமா மக்கள் இந்நோய் பரவுவதற்குக்காரணமாக அனேக நம்பிக்கைகள் கொண்டிருந்தனர். அவற்றிலொன்று நோயுற்றோரின் உடல், துணி, மலமாகியவற்றைத் தொடுவதனாலேயே இந் நோய் பரவுகிறது என்பது. இந் நம்பிக்கையின் காரணமாக நோயுற்றோர் ஒருவித கவனிப்புமின்றி ஒதுக்கி வைக்கப்படுவர். ரீட் முதலில் இந்த நம்பிக்கையை ஆராயப் புகுந்தார். இரு வீடுகள் கட்டப்பட்டன. ஒன்று காற்றோட்டம் வெளிச்சம் உள்ள சுத்தமான வீடு. மற்றது காற்றுப் புகமுடியாததாய் கட்டப்பட்டது.

மனிதகுல மணிகள் : 2

# மஞ்சள் காய்ச்சலினின்றும் மக்களைக் காப்பாற்றிய உத்தமர்: வால்டர் ரீடும் அவரது உதவியாளரும்

வீ. இராமகிருஷ்ணன்

மேலும் இவ் வீடு நோயுற்று இறந்தவர்களின், உடைகள் அவர்கள் மலத்தில் புரட்டப்பட்ட விரிப்புகள் போன்றவைகளினால் நிரப்பப்பட்டது. வால்டர் ரீட் தாமே இந் நோய்க்கு முதற் பலியாவதற்குத் தயாரானார். ஆனால் இவ்வாராய்ச்சிக்கு உதவ வந்த மற்ற மூவரும் இதைத் தடுத்தனர். இதற்கு அவர்கள் கூறிய காரணம் மிக உன்னத லட்சியத்தைக்கொண்டது. அவர்கள், ரீட் ஒருவராலேயே சோதனைகளின் பலாபலன்களை அறியமுடியுமாதலால் அவர் தன்னுயிரையே பலிகொடுப்பது தவறு எனக் கூறினார்கள். தங்களைப் பொறுத்தவரையில் படிப்போ அறிவோ அவர்களுக்கு அதிகமில்லாதபடியினால் தங்களின் உயிர் பலியானால் மக்கட் சமுதாயத்திற்கு ஒருவித நஷ்டமுமில்லை. ஒருவேளை தாங்கள் இறப்பதினால் பரம்பரையில் மக்கட்சமுதாயம் நலமடையவும்கூடும் எனக் கூறினார்கள். எத்தகைய உயர்ந்த பண்பாடு? இவர்களுக்கா படிப்பும் அறிவும் இல்லை. மனிதன் மனிதனாகத் திகழ்வதற்கு அவையிரண்டும் அவ்வளவு தேவையில்லைப்போல் காணப்படுகின்றதே.

இரு வீடுகளிலும் சோதனையாளர் வசித்தனர். சுத்தமான வீட்டிலிருந்தவர்க்கு நோயேற்பட்டது. நல்லவேளையாக இச்சோதனையாளர் பனமாவிற்கருகிலிருக்கும் மெக்ஸிக்கோவைச்சேர்ந்தவர். இவருக்கு ஏற்கனவே இந்நோய்க்கு ஓரளவு சகிப்புத்தன்மையிருந்ததினால் சாகாமல் தப்பினார். அசுத்தமான வீட்டில் வசித்தவருக்கு நோயேற்படவில்லை. இதனால் மஞ்சள் காய்ச்சல் தொடுவதினால் பரவுவதில்லை என்பது நிச்சயமாயிற்று.

### தோல்வி

பின்னர் இந்நோய் உணவு, குடிநீர் மூலம் பரவுகிறதோ என்பது சோதிக்கப்பட்டது. இவைகளும் இந்நோய் பரவுவதற்குக் காரணமில்லை என்பது விளங்கியது. நோயுற்றவர்களின் உடல் அணு அணுவாகச் சோதிக்கப்பட்ட பொழுது ஒருவிதமான கிருமிகளும் காணப்படவில்லை. இந் நோய் கிருமிகளிலும் மிகச் சிறிய வைரஸ் (Virus) எனப்படும் பொருளினால் உண்டாக்கப்படுகின்றது என்று தற்கால ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்நோய் ஏற்படுவதற்கு என்ன காரணம், இந் நோய் எப்படிப் பரவுகின்றது ஒன்றுமே அறியப்படவில்லை. ஆராய்ச்சி முழுத் தோல்வியுற்றது. பனமாக் கால்வாய் வெட்டமுடியாது போல் தோன்றியது.

இவ் வேலையில் ரீடிற்கு தென் அமெரிக்காவில் வசித்த ஒரு கிழ வைத்தியரின் யோசனை நினைவிற்கு வந்தது. அவ் வைத்தியர் அவ்வூரோரால் பைத்தியமாக மதிக்கப்பட்டார். இவர் அனேக வருடங்களாக மஞ்சள் காய்ச்சல் ஒருவித நுளம்பினாலேயே (Mosquito) பரப்பப்படுகின்றது எனக் கூறிக் கொண்டிருந்தார். ஒருவரும் அவரைநம்பவில்லை. ஆனால் ரீட் இந்த நிலையில் எந்தவித பைத்தியக்கார யோசனையையும் ஆராயத் தயாராகவிருந்தார்.

(பயப்படுவீர்களோ? மஞ்சள் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பின் கிட்டின சொந்தமான நுளம்புகளே யாழ்ப்பாணப் பகுதியில் அதிகம். ஆனால் இங்கு மஞ்சள் காய்ச்சல் இல்லை. நுளம்பு ஒரு பாவமும் அறியாது. நோயிருந்தால்தான் அது பரப்பும். பயப்படத் தேவையில்லை.)

### வெற்றி

பனமா பிரதேசத்தில் சதுப்பு நிலமதிகம். இங்கு வசித்த ஒருவித நுளம்பே இந் நோயைப் பரப்புகின்றது என்று அக் கிழ வைத்தியன் கூறினான். நோயுள்ளவரின் இரத்தத்தைக் குடித்த நுளம்புகள் சோதனையாளரின் இரத்தத்தைக் குடிக்கும்படி செய்யப்பட்டது. அவருக்கு மஞ்சள் காய்ச்சல் ஏற்பட்டது. இறைவனின் அருளால் சாகாமல் தப்பினார்.

இப்பொழுது ஒரு பெரிய வெற்றியைச் சோதனையாளர் அடைந்தனர். பலவிதசோதனைகளுக்குப்பிறகு நுளம்புகளே இந் நோயைப் பரப்புகின்றன என்பது நிச்சயிக்கப்பட்டது.

விஞ்ஞான ஆரய்ச்சியாளர்கள் எப்பொழுதுமே மிக சந்தேகப் பேர்வழிகள். தாங்கள் கண்ட முடிபுகளை திரும்பத் திரும்ப ஆராய்ச்சிசெய்யத் தயங்குவதில்லை. இக் குணத்தினால் மேற்கூறப்பட்ட சோதனையாளரில் ஒருவர் இறக்க நேரிட்டது. இவர் நோயாளிகள் அறையில் இருக்கும் பொழுது நோயாளி ஒருவனைக் கடித்த நுளம்பொன்று தன் கையின் மேல் உட்காரக்கண்டார். அவர் உடனேயே அந் நுளம்பை ஓட்டியிருக்கலாம். ஆனால் அவர் கடைசியாகத் தன்னுடலிலேயே இந் நோயின் தரத்தை ஆராய ஆசைப்பட்டார். அதனால் நுளம்பை இரத்தம் உறிஞ்சவிட்டார். மூன்றாவது நாளில் அவர் உடல் வீங்கி, மஞ்சளாகிக் காய்ச்சல் தோன்றியது. இந் நோயினால் அவர் இறந்தார். இறக்கும்பொழுதும் நுளம்புகளே இந் நோயைப் பரப்புகின்றன என்பதை நிரூபித்ததில் அவருக்கு மிகத் திருப்தி.

### செல்வம் பெருகியது

இதனை அறிந்தபிற்பாடு நுளம்புகளை அழிப்பது மிக இலகுவாய்இருந்தது. சிறிய நீர்த்தேக்கங்களை நிரப்பி நுளம்புக் குடம்பிகள் (Mosquito Larvae) வளராமல் செய்தார்கள். பெரிய நீர்நிலையங்களில் எண்ணெயை ஊற்றி குடம்பிகளுக்குச் சுவாசிக்கக் காற்றுக் கிடைக்காமல் சாகும்படி செய்தார்கள். வேலைசெய்யும் மக்களுக்குக்கொசுவலை கொடுத்து நுளம்புக்கடியினின்று காப்பாற்றினார்கள். அதிசீக்கிரத்தில் இப்பிரதேசத்திலேயே மஞ்சள் காய்ச்சல் இல்லாமல் செய்தார்கள். இராணுவத்தார் பனமாக்கால்வாயை வெட்டினார்கள். அமெரிக்காவின் செல்வம் பெருகிற்று.

மக்கள் குலம் நோயற்றுவாழ தங்கள் உயிர்களையே பணயம் வைத்த பெரியரார்கள் யார்? அதைப்பற்றி நமக்கென்ன கவலை. அவர்களே தங்கள் செய்கை தியாகமல்ல, கடமையே என்று நினைத்தார்கள். தங்கள் பெயர் வெளித்தெரிய வேண்டிய அவசியமில்லையென்று நினைத்தார்கள். எவனோ கட்டிய ஒரு மாட்டுக் கொட்டிலைத் திறந்து வைக்கும் பொழுதோ அல்லது பொது மேடையில் நின்று சந்தர்ப்பம் கிடைத்தால் தாங்கள் என்னவெல்லாம் செய்வோமென்று (செய்தோமென்றல்ல) கூறும் பொழுதோ பிடிக்கப்பட்ட படங்களைத் தங்கள் செலவிலேயே பத்திரிகைகளுக்கனுப்பி பிரசுரிக்கும்படித் தூண்டும் அரசியல் வாதிகள் வாழும் இவ் விளம்பர உலகத்திலேயே, மக்கட் சமுதாயத்திற்காக மகத்தான தியாகத்தைச் செய்துவிட்டு அதைக் கடமையாக நினைத்த பெரியோரை மனிதகுல மணிகள் என்றழைப்பது பிழையா?

# திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைத்து, வேண்டிய இடத்தில் சீர்படுத்தியும் நல்லதோர் திட்டத்தை வகுக்கலாம்.

இத்தொடரில் அடுத்த இதழில் இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்வோம். இந்தியாவின்பொருளாதாரம், சீனம் போன்று ஒரு திட்டமிடப்பட்ட தேசிய அமைப்பையோ, அல்லது யப்பான் போன்று தனிப்பட்டோர் முயற்சியின் பொருளாதார அமைப்பையோ அனுசரிக்காது, இவை இரண்டுக்கும் இடையான, திட்டமிடப்பட்ட ஏவல், தனிப்பட்டோர் முயற்சி சேர்ந்த ஓர் முறையைக் கையாண்டு வருகிறது. இது ஓர் பயிலும் நடைமுறை நோக்கு. இந்நோக்கு முறையை இந்தியத் தலைவர்கள் தங்கள் தேவைக்கு மிகவும் உகந்தது என்றும் தங்கள் கொள்கைக்கு மிகவும் ஏதுவானது என்றும் கருதுகிறார்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 57 இல் பூர்த்தியாயிற்று. 58இல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் 62இல் முடிவுற இருக்கிறது. இவ்விரு திட்டங்களையும் கவனிக்கும்போது தொழிலபிவிருத்தி முறைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணராமலிருக்க இயலாது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றிலும்கீழ் தொழிலபிவிருத்தி இரட்டிப்படைய இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயமோ முதல் ஐந்து வருடத்தில் நாற்பங்கு வளர்ச்சியும் இரண்டாவது ஐந்து வருடத்திட்டத்தில் இன்னும் மூன்றில் ஒரு பங்கு வளர்ச்சியுமே அடைய இடம் விடப்பட்டிருக்கிறது.

### சீனத்தின் உற்பத்தி வளம்

சோவியத் நாடு சீனத்துக்கு பல உதவிகள் கொடுத்திருந்தாலும் சீனம் தன் பொருளாதார வளர்ச்சிக்கான தொகையைப்பெரும்பாலும் உள்நாட்டு மூலதனத்திலிருந்தே திரட்ட வேண்டியிருக்கின்றது. இம் முதலீட்டைத் தேடுதலை 1953 லிருந்து அவ்வரசாங்கம் தனது கடமையென்றே கருதி வந்து அதற்கான வருவாயைத் தனது முயற்சித் திட்டங்கள் மூலமும் மற்றும் சாதாரண வரிகள் மூலமும் தேடிச் சமாளித்துள்ளது.

வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய மூலதனப் பொருள்களுக்கும் நிதி தேவையல்லவா. இதனை வெளிநாட்டு உதவி கொண்டு ஓரளவு சமாளித்திருந்த போதிலும் பெரும்பாலும் விவசாயப் பொருள்கள், கைத்தொழில், கைவேலைப் பொருள்கள், மற்றும் தாதுப்பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி மூலமே சீனம் சமாளித்துள்ளது. பார்க்கும்போது, ஆரம்பகாலத்தில் சீனம் தான் எண்ணியுள்ள அளவுக்கு உற்பத்தி வளத்தை எய்தியதற்கு முக்கிய காரணம் அந்நாடு தன் ஏற்றுமதிப் பொருள்களை கூட்டியமையே ஆகும். சீனத்தின் வெளிநாட்டு வர்த்தகம் பெரும்பாலும் சோவியத் யூனியனுடனும் மற்றும் சில கீழைத்தேய ஐரோப்பிய நாடுகளுடனுமே இருந்து வந்திருக்கின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான் ஆகிய நாடுகளுடனிருந்த முன்னைய வர்த்தகம் சிறிது சிறிதாக நிறுத்தப்பட்டு முடிவடையும் நிலையை எய்தியது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக இங்கிலாந்துடனும் யப்பானுடனும் இருந்து வந்த வர்த்தக உறவு ஓரளவு புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது எனலாம். வேறு சில ஆசிய நாடுகளுடனும் வர்த்தகம் வலுவடையப்பட்டிருக்கிறது.

### வெளிநாட்டு வர்த்தகம்

எனினும் சீனத்தின் வெளிநாட்டு வர்த்தகம் முழுதும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய ஒன்றேயாகும். முன்பு இறக்குமதி செய்யப்பட்ட பாவனைச் சாமான்கள் இப்போது இறக்குமதி செய்யப்படாதிருத்தலும் அவற்றுக்குத் தேவையான மூலப்பொருள்களும் கைத்தொழிற் சாதனங்களுமே இறக்குமதி செய்யப்படுதலும் இதற்கு அறிகுறி. ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும் முயற்சிகள பல எடுக்கப் படுகின்றன. சீனத்தின் ஏற்றுமதியில் முக்கால்வாசி கமப்பொருள்களைக் கொண்டும் மிகுதி தாதுப்பொருள்களும் கைத்தொழிற் பொருள்களைக் கொண்டும் இருக்கின்றன. சீனமக்களால் தரப்பட்டுள்ள விபரப்படி வருடாவருடம் அந்நாட்டின் தேசிய வருமானம் 9 சத விகிதம் கூடியே வருகின்றது. இதன்படி பார்க்கும்போது அங்கு தராதர வருமானமும் 6 சத விகிதம் கூடியிருக்கிறதெனலாம். எனினும் இவ் விபரங்கள் அறுதியானவை எனக் கொள்வதற்கில்லை. காரணம், சீன தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியின் அளவை அப்படியே வரையறுத்துக் கூறுவதென்பது இயலாது என்பதுதான். எனினும் சீன தந்துள்ள விபரங்களின்படி அங்கு வருமானம் மாத்திரமின்றி தராதரப் பாவினையும் கூடியே இருக்கின்றது. 1952-ம் வருடத்துடன் 56-ம் வருடத் தராதரப் பாவினையை ஒப்பிடும்போது விவசாயிகளைப் பொறுத்த அளவில் 13 சத விகிதமும் மற்றைய தொழிலாளிகளைப் பொறுத்த அளவில் 19சத விகிதமும் கூடுதலையே காணக் கிடைக்கிறதென அறிகிறோம். இவ்விதம் மக்கள் உபயோகித்துவரும் பொருள்களின் தொகையளவு அங்கு கூடியுள்ளபோதிலும் ஏனைய ஆசிய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும்போது சீன் மக்களின் பொருட்பாவினைகள் இன்னும் வெகு கீழ் நிலையிலேயே இருக்கின்றன. குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எய்தியுள்ள போதிலும் சீனத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள் இன்னும் பலவுள. சனத்தொகை பெருகிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப வேலையில்லாப் பிரச்சனையும் வளர்ந்துகொண்டே இருக்கின்றது.

(தொடரும்)

# உலகில் மக்கள் தொகை

## நிமிஷத்துக்கு 85 பேர் வீதம் உயர்கிறது

உலக மக்கள் தொகை நிமிஷத்துக்கு 85பேர்விகிதம் அதாவது வருஷத்துக்கு சுமார் 4 1/2 கோடி வீதம் பெருகிக்கொண்டு வருகிறது என்று ஐ. நா. வெளியிட்டுள்ள 1958-ம் ஆண்டு மக்கள் தொகைப் புத்தகம்கூறுகிறது. சில பிரதேசங்களிலிருந்து சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. பூகோள ரீதியான 275 பிரதேசங்களின் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டவை இந்தப் புள்ளி விவரங்கள், அறிக்கையில் கண்ட காலத்தின் இறுதியில் உலகத்தின் மொத்த மக்கள் தொகை 280 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் சீனப் பெருநிலத்திலும் (64 கோடி), இந்தியாவிலும் (40 கோடி), ருஷ்யாவிலும் (20 கோடிக்கு மேல்), அமெரிக்காவிலும் (17 கோடிக்கு மேல்) இருக்கின்றனர்.

யப்பான், இந்தோனேஷியா, பாகிஸ்தான், பிரேஸில், பிரிட்டன், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிலும் 5 கோடிக்கு மேல் மக்கள் வாழ்கின்றனர்.

இன்று மக்கள் பெருகிவரும் நிலையை வைத்துக் கணக்கிட்டால், கி. பி. இரண்டாயிரம் ஆண்டு பிறக்கு முன் ஆசியாவில் உலகிலுள்ள மக்களில் நூற்றுக்கு 60 பேர் இருப்பர் என்று சொல்லலாம்.

# கேரளத்திற் கொந்தளிப்பு அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சி

## இந்தியா

கேரள கல்விச் சட்டத்தினை எதிர்ப்பதை ஒரு திட்டமாகக் கொண்டு கேரளத்திலுள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் கேரள கொம்யூனிஸ்ட் அரசாங்கத்தை விலகச்செய்வதற்கு ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றன. 12-6-59 இல் ஹர்த்தாலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அரசாங்கம் விலகும்வரை நடைபெறுமா? சனநாயகச் சட்டப்படி தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை வலோற்கார வழிகள்மூலம் கவிழ்க்க கையாளப்படும் முயற்சிகளை இந்தியப் பிரதமர் நேரு வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அரசாங்கத்தின் ராஜினாமா நீங்கலாக, ஏனைய விஷயங்கள் குறித்து எல்லாக் கட்சிகளுடனும் மகாநாடு நடத்திச் சமரச முடிவுக்கு வரத் தாம் விரும்புவதாகவும், மத்திய அரசாங்க இராணுவ உதவியைத் தாம் இதுவரை கோரவில்லை என்றும், சென்னை இராச்சிய பொலிஸ் பகுதியினரின் உதவியைப் பெற ஆலோசனைகள் நடைபெறுகின்றன என்றும் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிப்பாட் கூறியிருக்கின்றார்.

பிரதமர் நேருவைக் கேரளத்துக்கு வந்து நிலைமையை நேரடியாக அவதானிக்குமாறு கேரள முதலமைச்சர் அழைப்பு விடுத்திருக்கின்றார். கோழிக்கோடு, மலையாளம், கொச்சின், திருவனந்தபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் பாடசாலைகளில் 50 வீதத்துக்கு அதிகமானவை திறக்கப்பட்டுவிட்டன. திருவனந்தபுரம் நீங்கலாக பாடசாலைகள் திறக்கப்பட்ட இடங்களில் 75 வீதத்துக்கு அதிகமான மாணவர் பாடசாலைக்கு வருகின்றனராம்.

### துப்பாக்கிப் பிரயோகம்

அங்கமாலிப் பொலீஸ் நிலையத்தை 13-6-59இல் தாக்க வந்த ஆர்ப்பாட்டக்காரர்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோது 5 பேர் இறந்தனர், 23 பேர் காயமடைந்தனர், 27 பொலிஸ்காரரும் காயமடைந்தனர். அரசாங்கக் காரியாலயத்தில் வேலைசெய்யச் சென்றவரைத் தடைசெய்ய முயற்சித்ததற்காக சுமார் 200 பேர் கைதாகியுள்ளனர். இவர்கள்மீது வழக்குத் தொடரப்படுமாம். 14-6-59இல் நடைபெற்ற கைகலப்பில் மூன்று பொலீஸ்காரர் காயமடைந்துள்ளனர். 15-6-59இல் 5 பேர் துப்பாக்கிக்குப் பலியாகியுள்ளனர். அரசாங்க உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை இராணுவம் ஏற்றிருக்கின்றது.

நிலைமை மோசமடைந்து கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டால் ஆச்சரியப்படத்தேவையில்லை.

# ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் புதிய கலாசார மண்டபம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மனைவி வரவில்லை

டாக்டர் ராஜேந்திரருடன் 19 பேர் அந்தஇராணுவவைக்கவுன்ற் விமானத்தில் வந்தனர். அவருடன் அவர் மனைவியார் வரவில்லை. அந்த அம்மை மிகவும் வைதீகமும் அடக்கமும் உள்ளவராம். பல குழந்தைகளைப் பெற்றெடுத்த மகராஜிக்குப் பேரப்பிள்ளைகளும் அதிகம். அவர் வெகுவாக தன் புருஷனுடன் பகிரங்க வைபவங்களில் கலந்து கொள்வதில்லை என்றும், தன் குடும்பப் பொறுப்பைப் பார்த்துக் கொள்வதிலேயே அவர் முழு நேரமும் செலவழிப்பதாயும் தெரிகிறது.

ஜனாதிபதியின் கோஷ்டியில் இரு பெண்மணிகள் உள்ளனர். ஒருவர் மந்திரி லக்ஷ்மி மேனன். அவர்தான் துணை அதிகாரி. ஸ்ரீமதி ஞானவதி தர்பார், தலைவரின் சொந்தக் காரியதரிசி. இவர்களைத் தவிர தலைவரின் காரியதரிசி ஏ. வி. பாய் (முன்னர் இலங்கையில் இந்திய ஏஜன்டாக இருந்தவர்), உதவியாளர், வி. டி. அய்யர், சுற்றுப் பிரயாண அதிகாரி எம். வி. சப்தரிஷி, இவர்கள் உள்ளிட்டு இராணுவ, வைத்திய அதிகாரிகளும், மெய்க்காவலர்களும், சிப்பந்திகளுமாக 19 பேர் வந்துள்ளனர்.

### இந்து—பௌத்த ஒற்றுமை

முதல்நாள் மாலை வெள்ளவத்தையிலுள்ள சர்வதேச பௌத்த ஸ்தாபனத்துக்குச் சென்று, ஒரு புத்த விக்ரகத்தை அன்பளிப்பாகக் கொடுத்து, புஷ்பாஞ்சலி செய்தார். புத்தரை இந்துக்கள் ஒரு அவதாரமாக வணங்குவதாகவும், புத்தரின் உபதேசங்கள் நமது பரம்பரைச் செல்வமென்றும் கூறி, பௌத்த—இந்து ஒற்றுமையையும், பௌத்த தர்மத்தின் சிறப்புகளையும் வற்புறுத்தினார்.

அவரை வரவேற்ற டைடஸ் பர்ணாண்டோ, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நீண்ட காலமாக சமூக, அரசியல், பொருளாதார, சமய உறவுகள் உண்டென்றும், இடையில் வேற்றுமைகள் ஏற்பட்டிருப்பினும், அவை குடும்பச் சச்சரவுகள் போன்றவையென்றும், இரு தேச சரித்திரமும், நட்பாலும், சகோதரத்துவத்தாலும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி, பௌத்த ஸ்தலங்கள் அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கம் 6 கோடி ரூபாய் வரை செலவிட்டிருப்பதாகவும் கூறினார். மந்திரி மரைக்கார் உள்ளிட்டுப் பலர் பேசினார்.

செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில், புதிய கலாசார மண்டபத்துக்கு ராஜன்பாபு அஸ்திவாரக்கல் நாட்டுகையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் செய்யும் அரிய பணிகளைப் பாராட்டினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடன் எந்த விதத்திலும், எந்த நாட்டிலும் சேர்ந்து உழைப்பது ஒரு கௌரவமும் பாக்கியமுமாகுமென்று கூறி, இதில் சேர்ந்துள்ள துறவிகள் மதத்துக்காகச் செய்யும் தியாக சேவையைப் புகழ்ந்தார்.

இலங்கையில் ராமகிருஷ்ண மிஷனின் சேவைகள் விரிவடைந்து வருவதை அறியவும், இந்நாட்டு மக்களுக்கு அது கொஞ்சம் சேவை செய்யும் பாக்கியம் பெற்றுள்ளதையும் அறியத் தாம் சந்தோஷப்படுவதாயும், இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கம் இவற்றிடமிருந்து இந்த மிஷன் உதவி பெற முடிந்தது மகிழ்ச்சிக்குரியதென்றும் கூறினார்.

"இவ்வித சேவை ஒரு புறமிருக்க, மக்களையும் நாடுகளையும் ஒன்று பிணைக்க இவ்வித ஸ்தாபனங்கள் மௌனமாக வெளிக்குத்தெரியாமல் பெரிய காரியம் செய்கின்றன. இதன் லட்சியமான மனிதாபிமான சேவை, மக்கள் குல ஒற்றுமையை வலியுறுத்துகின்றது. மனித சுபாவத்திலும், சர்வதேச உறவிலும் மனத்தாங்கலும் நெருக்கடியும் அதிகரிக்கையில், இது அதிக முக்கியமாகும். ஆகவே இவ்வித ஸ்தாபனங்கள் வளர்ச்சியடைய உற்சாகமூட்டி வாழ்த்த வேண்டும்".

"இந்த புதிய கட்டடம் இலங்கை—இந்திய மக்களிடையே, நல்லெண்ணமும் நெருங்கிய உறவும் ஏற்படுத்தவும், மக்களுக்கு சேவை செய்யவும், மிஷனுக்கு அதிக வெற்றியளிக்குமென்று நம்பிப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

புதிய கட்டடத்துக்காக இந்திய அரசாங்கம் 75 ஆயிரமும், இலங்கை அரசாங்கம் 25 ஆயிரமும் அளித்துள்ளன. ஏற்கென்வே எம்.எஸ். கச்சேரி மூலம் 75 ஆயிரம் வசூலாகியுள்ளது என்றும் இந்நாட்டில் பல சமூகத்தரிடையே நல்லுறவை ஏற்படுத்தி, கலாசார சேவை செய்யவும் இப்புதிய கட்டடம் உதவுமென்றும், ஜனாதிபதியை வரவேற்கையில், சுவாமி பிரேமாத்மானந்தா குறிப்பிட்டார்.

வான் முகில் வழாது பொழிந்ததெனினும், மக்கள் அமைதியாக இருந்தனர். வைபவம் வெற்றிகரமாக முடிந்தது.


பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

கொழும்பு 8.


### ஜெனிவா மாநாடு

# பயன்தரும் முடிவுகள் ஏற்படுமென்ற நம்பிக்கை

## உலகவிவகாரம்

நான்கு வல்லரசுகள் மகாநாடு சென்ற வாரத்தில் முறிந்துவிடும் போல் இருந்தது. ஆனால் இப்போது ஆறுவது வாரமாக நடைபெறுகின்றது. மேற்கு வல்லரசுகள் தொடர்ந்து பெர்லின் நகரில் படைகளை வைத்திருப்பதற்கு ஒரு வருட கால எல்லையை விதித்து சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு அந்திராய் குறோமிக்கோ தமது ஆலோசனையை வெளியிட்டார். இதை ஒரு இறுதி எச்சரிக்கையாகக் கருதி அமெரிக்க இராசாங்க மந்திரி கிறிஸ்தியன் ஹேற்றரும், பிரித்தானிய வெளிநாட்டு மந்திரி செல்வின் லோயிட்டும் நிராகரித்ததும் மகாநாடு முறியும் கட்டத்தை அடைந்தது. ஹேற்றரும், குறோமிக்கோவும் இரகசிய பேச்சுகள் நடத்தி மகாநாடு தொடர்ந்து நடைபெற வகை செய்துள்ளனர். குறோமிக்கோ தமது ஆலோசனை இறுதி எச்சரிக்கை அன்று எனக் கூறிவிட்டார். செல்வின் லோயிட் லண்டனில் பிரதமர் ஹரல்ட் மக்மிலனைச் சந்தித்தபின்னர், மந்திரிசபைக் கூட்டத்திலும் பங்குபற்றிவிட்டு ஜெனிவாவுக்குத் திரும்பியிருக்கிறார். இம் மகாநாட்டினால் பயன் தரக்கூடிய முடிவுகள் ஏற்படும் என்று தாம் நம்புவதாக மக்மிலன் கூறியிருக்கிறார். இந்த வாரத்திற்குள் நிலைமை தெரிந்துவிடும். இம் மகாநாட்டை ஒரு மாத காலம் பின் போட்டு வைக்க வேண்டும் என மேற்கு ஜெர்மனியின் பிரதமர் திரு. அடினோர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். பெருந் தலைவர் மகாநாட்டுக்கு ஒழுங்கு செய்யாமல் ஜெனிவா மகாநாடு இவ்வாரம் கலைந்துவிடலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### சிங்கப்பூரும் மலாயாவும்

மலாயாவின் பிரதமரும் சிங்கப்பூரின் பிரதமரும் கோலாலம்பூரில் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். உள் நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்களில் இரு நாடுகளும் ஒத்துழைக்கத் தீர்மானித்திருப்பதாகவும், கல்வி, வர்த்தகம், நிதி, வகுப்புவாத சமரசம் ஆகிய விஷயங்கள் குறித்தும் ஆலோசனைகள் நடைபெற்றன.

சிங்கப்பூரில் மலாய் மொழியை அரசாங்க மொழியாக ஆக்கும் நோக்கத்துடன் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு மலாய் மொழியில் ஆறு மாத காலத்திற்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. இம் மாதம் தொடக்கம் 1000 ஆசிரியர்களும் அடுத்த ஜனவரி மாதம் வேறு 1000 ஆசிரியர்களும் பயிற்சி பெறுவார்கள்.

### பிரான்சின் எதிர்ப்பு

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் உபயோகத்திற்காக அணுக்குண்டுகள் பிரான்சில் சேமித்து வைக்கப்படுவதை பிரெஞ்சு அரசாங்கம் எதிர்த்திருக்கிறது.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆனி மீ 6 உ (20-6-59)


## கேரளத்திற் கிளர்ச்சி

கேரளத்திலிருந்து மிகவும் கவலைதரும் செய்திகள் கிடைக்கின்றன. அங்கு நடக்கும் கிளர்ச்சியில் பல உயிர்கள் மடிந்துவிட்டன. நிலைமை இப்படியே நீடிக்குமாயின் உயிர்ச்சேதங்கள் அதிகரிப்பதுடன், ஜனநாயகமென்பதே மக்களுக்கு ஒரு பெரிய சாபத்தீடாக முடியலாம்.

கம்யூனிஸ்ட் ஆட்சியாளர் அங்கு சட்ட சபையில் கொண்டு வந்து நிறைவேற்றிய கல்விச் சட்டம், கத்தோலிக்க கல்விஸ்தாபனத்தாருக்குப் பிடிக்கவில்லை. பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசாங்கத்திடம் அச்சட்டம் ஒப்படைப்பதாகவுள்ளது. அப்படி ஒப்படைத்தால், கம்யூனிஸ்ட் சார்புள்ள ஆசிரியர்களே நியமிக்கப்படுவதுடன், தங்கள் கல்வி ஸ்தாபன நிர்வாகமும் சீர்குலையுமென்று அவர்கள் அஞ்சுகின்றார்கள். ஆகவே, அவர்கள் இச்சட்டத்தை ஆட்சேபித்து, தங்கள் பள்ளிக்கூடங்களைத் திறப்பதில்லை என்று தீர்மானித்தனர்.

ஜனநாயக முறைப்படியே சட்ட சபையில் தாங்கள் அச்சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியதாயும், இவ்விஷயமாக ஏதும் ஆட்சேபமிருந்தால், நேரில் 'வட்ட மேசை' மாநாடு கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ளலாமென்றும் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் கூறினர். ஆனல் அந்த ஆட்சிமீது மொத்தம் 37 குற்றங்கள் சாட்டி, பேச்சு வார்த்தைகள் நடத்துவதால் பயன் எதுவும் ஏற்பட முடியாதென்றும், அந்த ஆட்சியையே ஒழிப்பதுதான் தங்கள் நோக்கமென்றும் அதற்காகவே தாங்கள் நேரடி கிளர்ச்சிகளை "அஹிம்சாமுறை"யில் நடத்துவதாகவும் காங்கிரஸ் உட்பட எதிர்க் கட்சிகளெல்லாம் சேர்ந்து அங்கு ஹர்த்தால், மறியல், முதலிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அஹிம்சா முறையில் இவ்வித கிளர்ச்சிகள் ஆரம்பித்தாலும், சில விஷமிகளும் வெறியர்களும் பலாத்காரங்களில் ஈடுபட்டு நிலைமையை மோசமாக்குவது அனுபவம் கண்ட உண்மை. காந்தி அடிகள் முன்னர் ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தபோது, பலாத்காரம் தலை தூக்கவே உடன் தாம் இமாலயத்தவறு செய்துவிட்டதாகக்கூறி அந்த இயக்கத்தை உடனே தள்ளிவைத்தார். இப்போது போலிஸார் தான் பலாத்காரத்தில் அங்கு இறங்கியதாக காங்கிரஸ்காரர் குற்றம் சாட்டுகின்றனர். போலிஸ் நிலையத்தைத் தாக்கி, பல போலிசாரைக் காயப்படுத்தியதால்தான் தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதாக கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். இதில் எது உண்மையாயினும், அங்கு இப்போது பலாத்காரம் வெகுவாகத் தாண்டவமாடி, பொது மக்களைப் பெருந்தொல்லைக்கு உட்படுத்தி வருகின்றது.

"அஹிம்சா முறை" என்றால் என்ன! மனம்: வாக்கு, காயங்களால் எதிராளிகளுக்குத் தீங்கு செய்யப்படாதென்பதே காந்தி அடிகள் கூறிய இலக்கணமாகும். ஆனல் கேரளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்துக்காக இந்த இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. அந்த இலக்கணப்படி, அஹிம்சையாகமாட்டாது. மக்களால் சட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நேரடி நடவடிக்கையை எடுப்பது, எப்படி ஜனநாயகமுமாக முடியும்?

இந்திய ஊழியர் சங்கத் தலைவரான குன்ஸ்ருவும், அங்கு காங்கிரஸ் எடுத்துள்ள நடவடிக்கை ஜனநாயக முறையாகாதென்று கருத்துத் தெரிவித்துள்ளார். தங்களுக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தை அங்குள்ள அரசாங்கம், துர்ப்பிரயோகம் செய்து, சட்டத்துக்கு மாறாக நடப்பின், உடன் தலைமை அரசாங்கம் இதில் குறுக்கிட்டு, அங்குள்ள மந்திரி சபையைக் கலைத்து, 'கவர்னர்' ஆட்சியை ஏற்படுத்தி, பின் பொதுத் தேர்தல் நடத்தலாம். அதுவே சட்ட ரீதியானதும், ஜனநாயகத்துக்கு ஏற்றதுமான முறை. அதைவிட்டு, சட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தை ஒழிக்க, எதிர்க்கட்சிகளெல்லாம் சிறப்பாக காங்கிரஸும் சேர்ந்து, நேரடி நடவடிக்கைகளை எடுப்பது, இனி ஜனநாயகமே நாட்டில் சரிவர நடைபெற முடியாமற் செய்வதுடன் மக்கள் அமைதியாக வாழமுடியாமலும் போகும்.

நிலைமை அங்கு வரவர மோசமாகி வருகிறது. இதை உணர்ந்து நேருஜி இதில் உடன் தலையிட்டு, நேரடி இயக்கத்தை நிறுத்திப் பேச்சு வார்த்தைகள் மூலம் அமைதியாக இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரென்றே நம்பப்படுகிறது.

## பசு இல்லாமல் பால்பெறும் அற்புதம்

ஒரு பிரான்சுக்காரனும் ஒரு ஸ்கொத்லாந்து வாசியும் ஒரு முறை சந்தித்தனர். பிரான்சுக்காரன், ஸ்கொத்லாந்துவாசியைப் பார்த்து, 'எங்கள் நாட்டில் ஓர் இயந்திரம் இருக்கின்றது. அதன் அருகிலுள்ள தொட்டியில் மாடுகளைக் கட்ட வேண்டியதுதான்; சிலமணி நேரத்தால் அடுத்த தொட்டியிற் பாகம் செய்யப்பெற்ற இறைச்சியைப் புட்டிகளில் அடைத்து அது தள்ளிவிடும்' என்றார். இதனைக்கேட்ட ஸ்கொத்லாந்துவாசி மலைக்கவில்லை. 'இதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது! எங்கள்நாட்டிலுள்ள இயந்திரம் ஒன்றுக்குள்ளே வெறும் புட்டிகளைப் போடவேண்டியதுதான். மறுகணம் மாடுகளே வெளியாகி வரும்' என்று அவர் கூறினர். இந்த ஆச்சரியங்களையெல்லாம் தூக்கியடிக்கும் அளவுக்கு யாழ்ப்பாணம் இன்று அற்புதங்களைச் சாதிக்கின்றது. வீட்டிலேபசுக்கள் இன்றியே இங்குள்ளவர்கள் பால்கறந்து விற்பனைசெய்யும் விந்தையைத்தான் இங்கு குறிப்பிடுகின்றோம். 'பசுக்கள் இன்றியே நீங்கள் எவ்வாறு பாலைப்பெறுகின்றீர்கள் என்ற விந்தையை நாங்கள் அறிய விரும்புகின்றோம்' எனச் சத்தற்ற பாலை விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவரைப் பார்த்து யாழ்ப்பாணத்து நீதிபதி ஆச்சரியத்துடன் கேட்டார். இவ்வாறு அவர் ஆச்சரியப்பட வேண்டியதேயில்லை இந்த வித்தையில் யாழ்ப்பாணம் இவ்வளவுதூரம் முன்னேறியிருப்பதை அவர் அறியார் போலும்!

யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பாற்பண்ணைக்குச் சத்தற்ற பால் விற்பனைசெய்த பலர் நீதிஸ்தலத்திற் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவருக்குச் சவுக்கடி கொடுக்கவேண்டுமெனவும் நீதிபதி திரு. வி. ஜி. எஸ். டேவிட் கூறியிருக்கின்றார். குழந்தைகளும் நோயாளரும் உட்கொள்ளும் பால் உணவில் இவ்வாறு களவுசெய்தல் உண்மையாகவே பாரதூரமான குற்றமாகும். அமெரிக்கா தாராளமாக அனுப்பும் பால்மா ஒருசிலருக்கு இலவசமாகவும் கிடைக்கின்றது. இந்த மாவைக் கரைத்துப் பசுப்பால் என்று விற்றுப் பணம் சம்பாதிக்கும் அளவுக்கும் மனிதப் பண்பு இன்று தாழ்ந்துவிட்டது.

இந்தப் பாபச்செயலை நீக்கி இதில் ஈடுபடும் மாக்களை மக்களாக்குவதற்கு மாநகரசபை போன்ற ஆட்சிமன்றங்கள் முன்வரவேண்டும். பசுக்கள் மேய்வதற்குப் புல்வெளிகளை அமைப்பதுடன் பசுக்களைவாங்குவதற்கும் கடன் உதவிசெய்யலாம் அத்துடன் அவற்றுக்கு வேண்டிய உணவுவகைகளை மலிவாகக் கிடைக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். இவ்வகையிற் பசுச்செல்வத்தையும் பால் உற்பத்தியையும் பெருக்க யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பாற்பண்ணையே வழிகாட்டலாமென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். இவ்வளவு வசதிகளைச் செய்த பின்னரும் மாவைப் பாலாக்கி விற்பதிலும், தண்ணீரில் பாலை ஊற்றி வெண்மையாக்குவதிலும் மனிதப்பிறவிகள் ஆசைகொள்வார்களாயின் அவர்களைப்பற்றி நாம் என்னதான் கூறவிருக்கின்றது?

## சீதனமுறை

'சீதனம் என்ற தீய வழக்கத்தின்மூலம் பெண்கள் அடிமையாகிவரும் தன்மையை நீக்க' யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் பாரியாரான ஸ்ரீமதி மகேஸ்வரி ஸ்ரீகாந்தா ஒரு நல்ல யோசனையைக் கூறினர். உத்தியோகம் பார்ப்பவர்களையே மணப்பதென்ற மனப்பான்மையைப் பெண்கள் கைவிடுவார்களேயானல் அந்த முறை தானகவே மறைந்துவிடும் என்றார். ஒரு பெரிய உத்தியோகத்தரை மணந்த ஒருவரே இவ்விதம் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் படித்த பெண்கள் கட்டுப்பாடாகச் சேர்ந்து பிரசாரங்கள் செய்வதுடன் தாங்களே இதற்கு வழியும் காட்டினல், அந்தத் தீயவழக்கம் வெகு சீக்கிரத்தில் மறையும். காந்தி அடிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்திருக்கையில், இதே விஷயமாகப் படித்த பெண்களுக்கு ஒரு யோசனை கூறினர். படித்த பெண்கள், சீதனம் கேட்கும் ஆடவனை மணப்பதில்லை என்று கட்டுப்பாடாகக் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும் என்றார். அவர் இவ்விதம்கூறி வருஷங்கள் முப்பதுக்கு மேலாகியும் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டதாகக் காணேம்.

இனி, தமிழரைப் பொறுத்தவரை உத்தியோகங்கள் அதிகமாகக் கிடைக்க முடியாததுடன், ஏற்கெனவே உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிலைமையும் பொறாமைப்படத்தக்கதாக இல்லை. உத்தியோகம் வரவரக் குறையக் காரணமுண்டு. எனினும் வரதட்சணை வழக்கத்தை எதிர்த்துப் பெண்கள் இனித் தீவிரமாகப் பிரசாரம் செய்வதுடன், இந்தியாவில் இவ்விஷயமாகச் சட்டம்செய்ய முற்பட்டுள்ளது போல், இங்கும் செய்தால் இந்த வழக்கம் கூடியவிரைவில் மறைய வழிபிறக்கும்.

## சூயஸ் வழி

சூயஸ்கால்வாய் சர்வதேச வழிதான் என்பதை ஒப்புக்கொள்ளும் எகிப்து, இஸ்ரேலிய கப்பல்களையும், அங்கிருந்து வரும் சரக்குகளையும் தடுத்துப் பறிமுதல் செய்வதற்கு ஒரு சமாதானம் கூறுகிறது. அதாவது, இஸ்ரேலுடன் எகிப்துக்குச் சண்டையாம். யுத்தநிலையில் இருப்பதால், இஸ்ரேலிலிருந்துவரும் சரக்குகள் "எதிரி சரக்குகள்" என்றும் அவற்றைப் பறிமுதல் செய்யத் தங்களுக்கு உரிமை உண்டென்றும் எகிப்து வாதிக்கின்றது. இலங்கைக்கு ஒரு கப்பலில் வந்துகொண்டிருந்த இஸ்ரேலிய சரக்குகளைப் பறிமுதல் செய்ததற்கும் இதுதான் காரணமென்றும் தெரிவிக்கின்றது.

இவ்விஷயத்தில் தலையிட்டு அச்சரக்குகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்குமாறு சொந்த முறையில் எகிப்திய தலைவர் நாஸரை இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா கேட்டுக் கொண்டிருக்கின்றார். இதற்கிடையே தமக்கு இலங்கை மீது அபிமானமுள்ளதற்கு அறிகுறியாக ஒரு கப்பல் நிறைய பல லட்சம் மதிப்புள்ள சரக்குகளைவெள்ளக்கஷ்டநிவாரணத்துக்காக நாஸர் அனுப்பியுள்ளாராம். நல்லதுதான். ஆனல் இலங்கைப் பிரதமரின் சொந்த வேண்டுகோளுக்கு நாஸர் செவிசாய்த்து, பறிமுதல்செய்யப்பட்ட சரக்குகளை அவர் நமக்குத் திருப்பி அனுப்புவாரா என்பது முக்கியமான கேள்வி. இதை அனுமதித்தாலும், இனியும் நாம் இஸ்ரேலுடன் வர்த்தகம்செய்ய உரிமை இருக்குமா? என்பது அதைவிட முக்கியம்.

இஸ்ரேலுடன் எகிப்துக்கு சொந்த மனஸ்தாபங்கள் இருக்கலாம். ஆனல் அதைக் காரணமாகக்கொண்டு 'சர்வதேச பாதையான' சூயஸில் அத்தேச கப்பல்களுக்கு வழிவிட முடியாதென்று கூறுவது இஸ்ரேலை மட்டுமன்றி, மற்றெல்லா நாடுகளையும் தண்டிப்பதாகும். இவ்விதமனப்பான்மையால், சிறப்பாக பல ஆசியநாடுகளும் எகிப்து இடையூறு செய்வதை இன்னும் காணவில்லைப்போலும். இவ்வித விஷயங்களில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட எகிப்து ஏற்கனவே இணங்கியிருப்பதாலும், பல ஆசிய நாடுகளின் உரிமைகள் இப்போது பாதிக்கப்படுவதாலும் இவ்விஷயத்தில் எகிப்து இனியும் பிடிவாதம் காட்டாமல் உடன் புனராலோசனை செய்ய வேண்டும்.

## "இந்தியா ராசா" வந்தார்!

"அதோ இருக்காரே அவரு தான் ராசாவா?"

ரத்மலானை விமான நிலையத்திலே ராஜன் பாபுவை வரவேற்கக் காத்திருக்கையில், அங்கே கம்பீரமாக உடைதரித்து நின்ற ஆறடி ஆசாமியைச் சுட்டிக்காட்டி, என் பக்கத்தில் நின்ற ஒரு சாதாரண தமிழ்ப்பெண் மேலே உள்ள கேள்வியை ஆவலுடன் கேட்டார். இந்திய ஜனதிபதியின் மெய்க்காவலாளரான அவர் 'ராஜா'மாதிரியே இருந்தார்!

விசேஷ அழைப்பின் மீது வந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம் அது. அங்கே அந்த எளிய தமிழ்ப்பெண் எப்படி வர முடிந்தது? யார் விட்டது? என்று யோசித்துக்கொண்டிருக்கையில், தன் ஆவலை அடக்க முடியாமல் அக்கேள்வியைக் கேட்டுவிட்டார்.

"அவர் ராசா அல்ல. அவர் ராசாவின் காவற்காரர். ராசா இதோ வருவார்" என்று சொல்லி, "எந்த ஊர் ராஜா தெரியுமா?" என்று கேட்டேன்.

"நம்ம இந்தியா ராசாதான். அதோ அந்தத் தொரைவூட்டில்தான் வேலை செய்யிறேன். ராசாவைப் பார்க்க அவருடன் வந்தேன்" என்றார் பித்தளை நகை அலங்காரத்துடனே பழைய பட்டு ரவிக்கையும், சேலையும் உடுத்திருந்த அந்தப் பெண் மிகப் பெருமையுடன்.

* * *

காலை முதல் வருணன் பாட்டம் பாட்டமாக வெளுத்து வாங்கி விட்டான். அந்தக் கொட்டும் மழையிலும் நனைந்து கொண்டு, ரத்மலானையை நோக்கிப் பலபெண்களும்,ஆண்களும் ஆவலுடன் ஓடி வருவதைக் கண்டேன்.

வழியிலே பல இடங்களில், அசோக சக்ரத்துடன் கூடிய பாரத நாட்டின் மூவர்ண மணிக்கொடிகள் இலங்கைத் தேசியக் கொடிகளுடன் சேர்ந்து கம்பீரமாய்ப் பறந்தன. இந்தமாதிரி இரு தேசக்கொடிகளும் சேர்ந்து பறந்த காட்சியை இதுவரை கொழும்பில் கண்டதில்லை. ரத்மலானையில் அன்று கண்ட காட்சி ஏதோ ஒரு திருவிழாவைப்போல் இருந்தது. கொட்டும் மழையிலும் அவ்வளவு மக்கள் வந்தது ஆச்சரியமே.

* * *

தலையிலே காந்திக் குல்லாய். மேலேவெள்ளைக்கதர்ஷர்வானி. இடுப்பில் கதர் சுருவால், (ரேடியோவில் கூறியதுபோல் வெள்ளை வேட்டியும் அங்கியுமல்ல) காலில் பூட்ஸ். கையில் ஒருதடி இவற்றுடன் ஆறு அடிக்குமேல் உயரமுள்ள ராஷ்டிரபதி ராஜன்பாபு, விமான வாயிலில் நின்று இரு கரங்களையும் கூப்பி வணக்கம் தெரிவித்தார்.

அவரைக்கண்டதும் பலர் சந்தோஷத்துடன் கரகோஷ ஆரவாரம் செய்தனர், "ராஜன் பாபுவுக்கு ஜே! பாரதமாதாவுக்கு ஜே!" என்ற கோஷங்கள் எழுந்தன.

விமான படிக்கட்டுவழியே மெதுவாக இறங்கி வந்தார் 75 வயதான அப்பெரியார். எல்லாரையும் விட உயரத்திலும் அவர் பெரியவராகக் காணப்பட்டார்.

அவரைக் கண்டதும் பலர் கரகோஷத்துடனே சந்தோஷ ஆரவாரம் செய்தனர். 'ராஜன் பாபுவுக்கு ஜே! பாரதமாதாவுக்கு ஜே!' என்ற கோஷங்கள் எழுந்தன. பலர் மாலையிட்டனர். மலர்களை வாரிச் சொரிந்தனர்.

"இந்தியா மக்களின் வாழ்த்துக்களுடன் வந்திருக்கிறேன். இலங்கை வர முடிந்ததுபற்றி

(9ஆம் பக்கம் பார்க்க)

# "உலகுக்கு மீண்டும் இந்தியாவே வழிகாட்ட வேண்டும்"

## இந்து, பௌத்த சமயங்களின் அடிப்படை ஒற்றுமை

"வித்தியாலங்காரப் பிரிவின" எனும் புதிய சர்வகலாசாலையை இந்திய குடியரசுத் தலைவர் குத்துவிளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசினர். அவர் கொழும்பிலிருந்து களனியாவுக்குச் செல்லுகையில், வழியிலே பல மக்கள் கூடி மரியாதை தெரிவித்தனர். பல சிங்களவர் தெருவில் மண்டியிட்டு, இரு கரங்களையும் கூப்பி பாரதத் தலைவரான "இந்திய ராஜா"வை வணங்கினர்.

ராஷ்டிரபதியை வரவேற்று சர்வகலாசாலையை அத்தியட்சகரான வண. பிரஞ்ஞானசார நாயகதேரோ பேசுகையில், "2500 வருடங்களுக்குமுன் இந்தியாவிலே உலகத்துக்கு வித்தியா தம்மத்தால் வழிகாட்டியதும், இப்போது உலகம் துவேஷத்தாலும், யுத்தபீதியாலும் பிளவுபட்டுக் கலங்கித் தவிக்கையில் இந்தியாவே மீண்டும் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்த வழிகாட்டுமென்பதே எங்களது உறுதியான நம்பிக்கை" யென்றார்.

ராஜன்பாபுவுக்கு "நீதிச் சக்கரவர்த்தி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. சர்வகலாசாலையை ஆரம்பித்துவைத்து ராஜன்பாபு பேசுகையில், இந்து, பௌத்த சமயங்களின் அடிப்படை ஒற்றுமையை வற்புறுத்தினர். இந்திய மாணவர்கள் இச் சர்வகலாசாலையிலும், இலங்கை மாணவர்கள் இந்தியாவிலும் அதிகமாகக் கல்வி பயில ஒத்துழைப்பும் ஒற்றுமையும் அதிகரிக்குமென்றார்.

## பஸ் பிரயாணம் வடபகுதியில் மிகமோசம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப்பகுதியில் பஸ் சேவை மிகவும் சீரழிந்து வருவதால் நாளாந்தம் பஸ் பிரயாணிகள் படும்கஷ்டங்கள் அளப்பில. இந் நிலைமையைச் சீராக்குவதற்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை புதிய பஸ்களை அனுப்பவேண்டும். அத்துடன் தமிழ்ப்பிரதேசங்களில் நியாயமான அளவுக்குத் தமிழ் உபயோகிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கேற்ப தமிழ் 'சிறீ' பொறித்த பஸ்களை தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் திரு. ஏ. யே. காசிப்பிள்ளை பிரேரித்தார். இப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

கடலணைக் குடியேற்றத்திட்டத்தின்கீழ் மாநகரசபையின் மூலம் வீடுகளைப் பெற்றவர்கள் அவ் வீடுகளைப் பிறருக்கு வாடகைக்குக் கொடுப்பதால் அவற்றைப் பறிமுதல்செய்து வீடின்றிக் கஷ்டப்படுவோருக்கு அவ் வீடுகளைப் பங்கீடுசெய்து கொடுக்கவேண்டுமென்ற பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேயர் திரு. அல்பிரட் ரி. துரையப்பா தலைமைவகித்தார். (ந. நி.)

## பூஜ்யம் தபால்

திரு. ஸி. சுந்தரலிங்கம்
"அஞ்ஞாத வாசம்"
வவனியா

தலைவரே!

வணக்கம். வவனியாவிலே தாங்கள் அரசியல் அஞ்ஞாத வாசம் செய்து, மௌன விரதம் பூண்டிருக்கையில், நான் தொந்தரவு செய்வதற்காக மன்னிக்கவேண்டும்.

தமிழரின் நிலை இந்நாட்டில் பலதுறைகளிலும் மோசமாகி அவர்கள் தவிக்கையில், தங்களைப்போன்ற திறமைமிக்கவர் வவுனியா பட்டின சபையில், "கோலி" விளையாட முற்பட்டது பற்றி வருந்தியவர்களில் நானும் ஒருவன்.

பட்டினசபை வார்டுகளில் அங்குள்ளவர்கள் குடும்ப உறவு பூண்டிருப்பதாயும், தங்களைத் தேர்தலுக்கு நிற்க வேண்டாமென்று சிலர் கூறியும், தாங்கள் கேட்கவில்லையாம்.

தாங்கள் பிடிவாதமாகப் போட்டியிட்டுத்தோற்றதும்ஒரு விதத்தில் நல்லதே. இந்நாட்டைப் பிளவுபடுத்த தமிழர் விரும்பவில்லை என்பதைப் பகிரங்கமாகக் காட்ட உதவிவிட்டீர்கள்.


இப்படிக்கு
"பூஜ்யம்"

குறிப்பு:—

தங்கள் அரசியல் எதிரிகளும் தங்களது திறமையைப் பாராட்டுவர். தாங்கள் ஒருவரே ஒரு தனிக் கட்சியாக இருந்து, பார்லிமெண்டில் வீரகர்ஜனைசெய்து பலரையும் ஏககாலத்தில் சமாளிப்பீர்கள். தாங்கள் இல்லாத பார்லிமெண்ட் "சப்" என்று ருசியில்லாதுமிருக்கும்.

இந்த மௌனத் தவத்தால் தாங்கள் புதிய சக்திபெற்று, தமிழ் சமூகத்தை ஒன்றுசேர்த்தும், தமிழ் பேசும் மக்களின் சங்கடங்களைப் புதிய வழிகளில் தீர்க்க மீண்டும் முன்வருவீர்களென்பதே பலரது நம்பிக்கையாகும்.

"பூ"



வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திலுள்ள பிரார்த்தனை மண்டபத்தில் இராஜன் பாபு

# பாரதக் குடியரசுத்தலைவரின்

## யாழ்ப்பாண விஜயம் பற்றிய ஒழுங்குகள்

பாரதநாட்டின் குடியரசின் தலைவர் டக்டர் இராசேந்திரப் பிரசாத் அவர்கள் இம்மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிக்குப் பலாலி ஆகாயவிமான நிலையத்தில் வந்து இறங்குவார்கள். அவர்களை காங்கேசன்துறை பாராளுமன்ற அங்கத்தவர், யாழ்ப்பாணப் பாராளுமன்ற அங்கத்தவர், யாழ்ப்பாண மாவட்ட அதிபர், யாழ்ப்பாணம் மேயர், மற்றைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் முதலியோர், தமிழ் பண்பாட்டு முறைக்கமைய வரவேற்று அங்கிருந்து அவர்களைப் பலாலி வீதி, வேம்படி வீதி, முற்றவெளி வீதி வழியாக நகர மண்டபத்திற்கு அழைத்துச் சென்று யாழ்ப்பாண மாநகர சபையாரால் ஒரு வரவேற்பு அளிக்கப்படும்.

ஊர்வலமும் வரவேற்பும் இரண்டு மணி நேரத்துள் முடிவடைய வேண்டியிருப்பதால் இராஷ்டரபதி அவர்கட்கு மாலைகள் சூட அல்லது வேறு தாமதங்கள் ஏற்படச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படமாட்டா.

வரவேற்பும், ஊர்வலமும் அதனோடு தொடர்புடைய சம்பவங்கள் யாவும் சிறப்பாக முடிவடையும் பொருட்டுப் பொலிஸ் பகுதியினர் செய்யும் ஒழுங்குகளுடன் பொது மக்கள் ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### நிகழ்ச்சி முறை

முற்பகல் 9-30 பலாலி நிலயத்தில் மாட்சிமை தங்கிய இராஷ்டரபதி அவர்கள் இறங்குவார்கள்.

முற்பகல் 9-40 ஊர்வல ஆரம்பம். பலாலி வீதி, வேம்படி வீதி, முற்றவெளி வீதி வழியாக யாழ்ப்பாண மாநகர மண்டபத்துக்குச் செல்லுதல்.

முற்பகல் 10-10 யாழ்ப்பாண மாநகர சபையாரின் வரவேற்பு.

முற்பகல் 11-00 நகர மண்டபத்திலிருந்து பலாலி ஆகாய விமான நிலயத்துக்குப் புறப்படுதல்.

முற்பகல் 11-30 விமான நிலயத்திலிருந்து விமானம் புறப்படுதல்.

# அரசினருக்குத் துணிச்சல் உண்டா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த என்னவழி? நேரடி நடவடிக்கைகளுக்கு இது சமயமல்ல. பழைய புண் இன்னும் சரிவர ஆறவில்லை. நாட்டின் மானம் கப்பலேறிவிட்டது. ஆகவே பேச்சு வார்த்தைகள் மூலம்தான் இதை நல்லபடியாகத் தீர்க்கவேண்டும்.

இதே விஷயமாக இந்தியா பின்பற்றும் கொள்கை கவனிக்கத்தக்கது. சென்னை முதலிய பல மாகாணங்களில் பஸ்ஸுகளுக்கும் மோட்டார்களுக்கும் பதிவுநம்பர் கொடுக்கும் அதிகாரம் பலபல ஜில்லா அதிகாரிகளுக்கே உண்டு. அவர்கள் முன்போல் ஆங்கில எழுத்துக்களிலே தொடர்ந்து பாவிக்கின்றார்கள். ஆங்கிலம் இப்போது பொதுமொழிபோல் ஆகிவிட்டது. அதே வழியை இலங்கை அரசாங்கமும் பின்பற்றினல், இந்தச் சங்கடம் தீரும். அற்ப விஷயங்களும் பெரிய பிரச்சினைகளாகி, அமைதியைக் குறைக்காமற் தடுக்கலாம்.

ஆனல் இப்படிச் செய்வதற்கான துணிச்சலும் தீர்க்கதரிசனமும் அரசாங்கத்துக்கு உண்டா? தமிழ் மக்களிடையே கட்டாய சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டிய அவசியத்தை அவர்கள் இப்போதாவது உணர்ந்தார்களா? நியாயமான அளவு தமிழ் பாவிப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகப் பிரதமர் கூறுகின்றார். தமிழ்ப் பகுதிகளில் அநேகமாக அனைவருக்கும் சிங்கள ஸ்ரீ எழுத்துக்கள் தெரியாது. தெரியாத ஒரு எழுத்தை அங்கு பஸ்ஸுகளுக்குப் பாவிப்பது எப்படி நியாயமாகும்?

இந்தக் காரணத்தை முன்னிட்டாவது, அரசாங்கம் இவ் விஷயத்தில் பிடிவாதத்தைத் தளர்த்தி, மனமாற்றம் காட்ட வேண்டும்.

தமிழ் ஸ்ரீ எழுதாவிட்டாலும், ஆங்கில எழுத்துக்களையே ஒரு விசேஷ ஏற்பாடாக அப்பகுதிகளுக்குமட்டும் பாவிக்கலாம். இது அற்ப விஷயம். தமிழ் மக்களின் உணர்ச்சிகளை மதித்து, இதில் அரசாங்கம் விட்டுக் கொடுத்தால், இந்நாட்டில் சமூக ஒற்றுமை பலப்பட உதவியாக இருக்கும்.

இவ்விஷயத்தில் தமிழ் பேசும் தலைவர்களிடையே கருத்து வேற்றுமைக்கு இடம் இல்லை. தமிழ்ப்பகுதி எம். பி.க்கள் அனைவரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய நகரசபைத் தலைவர்களும் சேர்ந்து இவ்விஷயத்தில் கூட்டான முயற்சிசெய்யவேண்டும். சொந்த வேற்றுமைகளை மறந்து, பொதுமக்களின் நன்மையை மதித்து, அவர்கள் இதில் ஒற்றுமையான முயற்சி செய்தால், அரசாங்கமும் மனம் மாறலாம். இவ்விஷயத்திலாவது தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா? அவர்கள் ஒன்றுபடுவதில்தான் வெற்றியும் அடங்கியிருக்கும்.

## 'இந்திய ராசா"......

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் மகிழ்ச்சி. இந்த மழையிலும் நீங்கள் இவ்வளவு பேர் வந்ததற்காக நன்றி......" என்றார் அவர்.

என் பக்கத்துக்கு வந்ததும், அவர் முகத்தைப் பார்த்தேன். இரு கண்களிலும் நீர்த்துளிகளைக் கண்டேன். அவை மழைத்துளிகளா? அல்லது, விடுதலை அடைந்த சேயின் வீட்டுக்கு வந்த சுதந்திரத்தாயின் உள்ளம் குழைந்து வந்த ஆனந்தக் கண்ணீரா?

இந்தியாவின் ராசாவுக்கு 21 குண்டுகள் போட்டு ராஜமரியாதையுடன் இலங்கை வரவேற்றது. இதைப்பார்க்கக்கதிரவனும் வந்துவிட்டான்.

—ஐயாறன்.

## திருக்கேதீச்சரத்தில் மகா சங்காபிஷேகம்

திருக்கேதீச்சர ஆலயத்தில் 25-6-59 வியாழக்கிழமையன்று பகலில் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதருக்கு மகா சங்காபிஷேகமும், விசேஷ பூசையும் நடைபெறுகிறது. அன்று மாலை தேவார பாராயணமும் சைவப் பிரசங்கங்களும், இரவு சுவாமி அம்பாள் வீதி வலம் வரும் மணவாள உற்சவமும் நடைபெறுகின்றன.

## திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை தமிழ் விழா

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் தமிழ் விழா வெள்ளிக்கிழமை காலைஆரம்பமாயிற்று.கலாசாலையின் முகாமையாளர் திரு சு. சுப்பிரமணியம் (வழக்கறிஞர்) கொடியேற்றிவைத்தார். முதல் நாள் விழாவுக்கு வித்தியாதிகாரி எஸ். யு. சோமசேகரம் தலைமை வகித்தார். இவ்விழா தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். சென்னை வானொலி நாடகத் துறைத்தலைவர் திரு. அ. ச. ஞானசம்பந்தன், வித்துவான் ச. கந்தசுவாமி ஆசிரியர் உட்பட அறிஞர்கள் பலர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். இன்னிசைக் கச்சேரிகளும் ஏற்பாடாகியுள்ளன.

# உரிமைகளுக்காகப் போராடுவோம்

## அனுராதபுரத்தில் அகில இலங்கை ஆசிரியர்கள் முழக்கம்

அனுராதபுரம்

"வெளிநாடுகளிலே ஆசிரியர் சங்கங்கள் வளர்ச்சியுற்றிருப்பது போன்று நம் நாட்டில் வளர்ச்சி பெறவில்லை. ஆயினும் நமக்குள்ளே மறைந்து கிடக்கும் வேற்றுமை உணர்ச்சிகளை மறந்து நமது உரிமைக்காகப் போராட ஒன்று சேர்வோம்!" இவ்வாறு அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அனுராதபுரக் கிளையை ஆரம்பித்து வைத்த தலைமைச் சங்கச் செயலாளர் திரு. ஏ. டி. ஆசீர்வாதம் குறிப்பிட்டார்.

தலைமைச் சங்கத் தலைவர் திரு. என். ஜய விக்ரமவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அர்ச். சூசையப்பர் கல்லூரி, விவேகானந்த வித்தியாலயம், கன்னியர்மடம் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்), நிவத்தக ஜயந்தி, மஹாபோதி ஆகிய முக்கிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் பங்கு பற்றினர். திரு. ஜயவிக்ரம பேசியபோது, மூன்று மொழிகளிலும் படிப்பிக்கும் ஆசிரியர்களின் ஒற்றுமை பற்றிய தேவையையும், மொழி, மத, இன வேற்றுமையை நீக்குவதன் அவசியத்தையும் எடுத்துக்கூறினர்.

வட மத்திய மாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தலைமைச் சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

கீழ்க்கண்ட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எல். ஏ. தேவசகாயம், உப தலைவர்கள்: திருமதி எம். பெரேரா, செல்வி பி. செல்லையா. செயலாளர்கள்: திரு. என். பீட்டர் பெரேரா, உதவி செயலாளர்: திரு. ஆர். ஸ்டனிஸ்லாஸ். பொருளாளர்: திரு. எஸ். குமாரவேல், செயற்குழு: திரு. ந. நவரத்தினம் (விவேகானந்தா) செல்வி எம். ஏ. டயாஸ் (நிவத்தக) திரு. கே. இரத்தினசபாபதி (அ. சூ. க.) திருமதி எல். செல்வரட்ணம் (கன்னியர் மடம்)


### இராஜன் பாபுவுக்கு வரவேற்பு

சென்ற வியாழக்கிழமை சரித்திரச் சிறப்பு வாய்ந்த அனுராதபுரம் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்துக்கு மகத்தான வரவேற்புஅளித்து மகிழ்ந்தது.

அன்று பிற்பகல் ஒரு மணியளவில் இராஜன்பாபு அனுராதபுரம் வந்ததும் புது நகரத்தின் புகு வழியில், சிங்கச் சிலைச் சதுக்கத்தில் நகரப் பிரமுகர்கள் வரவேற்றனர். பொலீஸார் அணிவகுத்து நின்றனர்.

மாலையில் டாக்டர் இராஜேந்திர பிரசாத் மஹா போதிக் கோயிலில் நல்லுரை நிகழ்த்தினர். அன்று இரவு இங்கு தங்கிவிட்டு 19-ந் திகதி கண்டிக்குப் புறப்பட்டார்.

(ந. நி.)



நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்



நகை மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.


மாதர் பகுதி

# பட்டதாரிப் பெண்கள்

## குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றவர்களா?

செல்வி எஸ். சின்னையா, பி. ஏ.

**செல்வி சின்னையாவின் கட்டுரை பெண்மணிகளிடையே ஒரு கலகலப்பை ஏற்படுத்தியுள்ளது. பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்துப் பழமையும் புதுமையும் சேர்ந்த ஒரு புதுவாழ்வை ஆரம்பிக்கப் பட்டதாரிப் பெண்களால்தான் முடியும் என்பது கட்டுரையாளரின் கருத்து. அடுத்த இதழில் வாசகர்களின் கருத்துகளை வெளியிட எண்ணியுள்ளோம். கட்டுரையாளர்கள் தங்கள் கருத்தைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொந்தப் பெயரிலோ அல்லது புனை பெயரிலோ அனுப்பி வைக்கலாம்.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

**பட்ட**தாரிப் பெண்கள், பாரதிகண்ட புதுமைப் பெண்களாக வாழமுடியும். பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் அவர்களால் முடியாத காரியங்கள் அல்ல. ஆனல் அவர்களின் முக்கிய கடமை,

**"காதலொருவனைக்**
**கைப்பிடித்தே, அவன்**
**காரியம் யாவினும்**
**கைகொடுத்து,**
**மாதரறங்கள் பழமையைக்**
**காட்டிலும்**
**மாட்சிபெறச் செய்து**
**வாழ்வமடி."**

என்பதேயாகும்

பட்டதாரிப் பெண்கள் குடும்ப வாழ்வில் ஈடுபட்டால், அவர்கள் கந்தோரில் வேலை பார்க்கவேண்டும் என்றநியதியில்லை. உத்தியோகம் பார்க்காவிட்டால், அவர்கள் கற்ற கல்வியாற் பயனில்லை என்று கொள்ளக்கூடாது. குடும்ப வாழ்வில் ஈடுபட்ட பெண்களுக்குக் கணவனும் குடும்பமுமே எல்லாவற்றிற்கும் மேலானது. அவளின் அலுவலகம் வீடு. அவள் கணவன் விரும்பினல், அவகாசமிருந்தால், குடும்ப வேலையைச் செவ்வனே கவனிப்பதுடன், உத்தியோகமும் பார்க்கலாம். இங்கேதான் பட்டதாரிப் பெண்ணின் கெட்டித்தனமும், விவேகமும் வெளிப்படும். உத்தியோகம் பார்ப்பது, கணவனுக்குதவி செய்வதற்கேயன்றிப் போட்டி போடவன்று! தான் கற்ற கல்வியை வீட்டிற்கும், நாட்டிற்கும் பயன் படுத்துவதே அவளின் தலையாய பொறுப்பாகும். இதற்காக, வீட்டைவிட்டு, நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பது அர்த்தமன்று. பட்டதாரிப் பெண்ணின் தொண்டு, வீட்டிலேதான் ஆரம்பமாகவேண்டும். கொண்ட கணவனைத் தெய்வமென்று கொண்டாடும் நமது பண்பாட்டை நாம் தலைமேற்கொள்ளல்வேண்டும். இதனல் குடும்ப வாழ்வு சிக்கலெதுவுமின்றி, மிகவும் இன்பகரமானதாக இருக்கும். கணவன் குறிப்பறிந்து நடப்பது எவ்வளவு இன்றியமையாதது என்பதைப் பட்டதாரிப் பெண் நன்கு அறிவாள். வருவாய்க்குத் தகுந்த செலவு செய்யவும், சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தவும், சிறந்த முறையில் குழந்தைகளை வளர்க்கவும் பட்டதாரிப் பெண்களால் முடியும். கணவன், பணக்கஷ்டத்தால் அவதியுறின், அவனுக்குக் கைகொடுத்துதவ அவள் பெற்ற பல்கலைக் கழகப்பட்டம் பெரிதும் உதவும். அவள் கற்ற கல்வியெல்லாம், குடும்பக்கலையை மேன்மையுறச் செய்யப் பெரிதும் பயன்படும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய உண்மையன்று.

ஒரு பட்டதாரிப் பெண், மனைவி என்ற ஸ்தானத்தை ஏற்று நிர்வகிக்கும் போது, மற்றச் சாதாரணப் பெண்களைவிட, மிக உன்னதமான முறையில் அப்பதவியை வகுக்கக் கூடியவளாயிருக்கின்ருள். கணவனுக்குக் கஷ்டம் வந்த போது, ஆறுதல் கூறித் தேற்றி உற்சாகமூட்டி, அக்கஷ்டத்தை ஆராய்ந்து அதை நீக்க வழிவகைகளைக் கண்டுபிடித்துதவுவதில் உற்ற நண்பனுகவும், பணிவிடை செய்வதில் தங்கையாகவும், ஆகாரமூட்டி அவனுடம்பைப் பேணுவதில் அன்னையாகவும், குறிப்பறிந்தொழுகுவதிலும், அன்பு செய்வதிலும் அரசியாகவும், அவன் அடிமையாகவும், வேண்டியபோது ஆசானுகவும் இருப்பாள்.

பழங்காலத்தின் நிலையையும் வருங்காலத்து நிலையையும் உணர்ந்து பலருடனும் பழகப் பட்டதாரிப் பெண்களால்தான் முடியும். பல்கலைக் கழகத்திற் கல்விபயிலும் பெண்களுக்கு, சமவயதுடைய ஆடவருடன் பழகும் வாய்ப்புக் கிடைக்கின்றது. விவேகமுள்ள அப்பெண்கள் இந்த வாய்ப்பைத் தக்கபடி பயன்படுத்தினல், அதுவே அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைத் தரக்கூடியதாக இருக்கின்றது.

பல ஆண்களுடன் கதைப்பதினல் அவர்கள் கற்புப்பறிபோய்விடாது. கற்பு அவர்கள் மனதில்தான் இருக்கின்றது. கற்பு எந்தப் பெண்ணுக்கும் அவளின் உயிர்போன்றது. எந்தக் கணம் அவள் கற்புக்கு, (மனத்தால் கூட) பங்கம் ஏற்படுகின்றதோ, அந்தக் கணம் அவள் தன் உயிரை விட வேண்டும். இது எங்கள் தமிழ்ப் பண்பாடு. அதை நாம் எமது உயிர்நாடியாகக் கொள்ளல் வேண்டும். இந்த விதிக்குப் பட்டதாரிப் பெண்கள் விலக்கானவர்களல்லர். சந்தர்ப்ப வசத்தினல் ஒரு சில பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளாமல் நடந்ததால் அது பல்கலைக்கழகப் படிப்பின் குற்றமன்று. ஆண்களுடன், எட்டநின்று, பழகுவதனல் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு குணங்கள் அழிந்துவிடமாட்டா. இதைப் பல்கலைக்கழகப் பெண்கள் நன்ருக உணர்வர். இதை உணராமல் கிட்டநின்று பழகுபவர்களும் உண்டு. அவர்களின் கதி ...........!! தனிப்பட்ட சில பெண்களின் பொறுப்பற்ற நடத்தையினல் ஏற்படும் களங்கத்தைப் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் எல்லாப்பெண்களும் பங்கு கொள்ளத் தயாராகவில்லையென்பதைச் சமுதாயம் நன்கு உணர்தல் வேண்டும்.

சுருங்கக்கூறின், பட்டதாரிப் பெண்கள் நாட்டின் முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். 'சாத்திரங்கள் பலபல கற்கவும், சவுரியங்கள் பலபல செய்யவும், மூத்த பொய்மைகள் யாவும் அழிக்கவும், மூடக் கட்டுக்கள் யாவும் தகர்க்கவும், காத்த மானிடர் செய்கையனைத்தையும் கடவுளர்க்கினிதாகச் சமைக்கவும். ஏத்தி ஆண் மக்கள் போற்றிட வாழவும்' ஏற்ற தகுதி உடையவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எனவே, அகப்பை பிடிக்கவும், தொட்டிலாட்டவும், பேனை பிடிக்கவும், அரசியலிற் பங்கு கொள்ளவும், எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு செய்யவும், பட்டதாரிப் பெண்களால் முடியுமென்பதை, அவர்களே நடைமுறையில் நடந்து காட்டி நிரூபிக்க வேண்டும்.

# நமது நூல்நிலையம்

**A Primer of Evolution:** by V. Ramakrishnan B. A., B. Sc (Hons) Jaffna Hindu College, Jaffna, Price: Re. 1-75.

உலகத்தில் உயிரினங்கள் தோன்றிய வரலாறு மிகவும் இரசமானது; அதுமாத்திரமன்றி மிகவும் விந்தையானதுங்கூட. அதனை மிக இலகுவான நடையில் உயர்தர வகுப்பு மாணவர்களும் வாசித்து விளங்கிக் கொள்ளும் முறையில் இதனை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

இந்த உலகத்தில் உயிரினங்கள் ஆதியில் எவ்வாறு தோன்றின? பல்வேறு வகுப்பைச் சேர்ந்த உயிரினம் தோன்றியதற்குக் காரணமென்ன? இக் கேள்விகள் மனிதனின் மூளையைப் பன்னெடுங்காலமாக அரித்துக்கொண்டே வருகின்றன. இக் கேள்விகளுக்கு டார்வின் பெரியார் அற்புதமான விளக்கங்களை உதவியுள்ளார். உலகில் உள்ள பல்வேறு உயிரினங்களுக்கும் பொதுத்தன்மை ஒன்று இருக்கின்றதென்பதை அவர் விளக்கித் தமது கொள்கையை நிலைநாட்டினர். உயிரின் படிமுறை வளர்ச்சி அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) என்பதைத் தமிழ் உலகத்துக்கு மிக இலகுவாக விளக்கிவைத்த பெருமை தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்களையே சாரும்.

**மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.**

ஆசிரியர் இராமகிருஷ்ணன் உயிரினங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் ஆற்றலும் ஈடுபாடுமுள்ளவர். ஆசிரியரின் இந் நூல் அனைவருக்கும் பயன்படக்கூடியதொன்று. கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ச. பேரின்பநாயகனின் முன்னுரையைத் தாங்கியுள்ள இவ் வெளியீடு சிக்கலான ஒரு கோட்பாட்டை மிகச்சரளமாகக் கூறி உலகிடை உயிரினம் தோன்றிய வரலாற்றை நெஞ்சிற் பதியவைக்கின்றது. இந்நூலை ஆசிரியர் தமிழிலும் தந்து உதவுவார் என எதிர்பார்க்கின்ரேம்.

**சமூகத்தொண்டன்:** புத்தாண்டு நிறைவு விழா மலர் **வெளியீடு:** யாழ்ப்பாணப் பகுதிச் சனசமூக நிலையங்கள்.

**சனசமூக** நிலையங்களின் வெளியீடாகப்பணியாற்றிவரும் சமூகத்தொண்டனின் பத்தாண்டு நிறைவு விழா மலர் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல கட்டுரைகளைத்தாங்கிஅழகாக வெளியாகியுள்ளது. பல்வேறு நிலையங்கள் ஆற்றிவரும் பணிகளின் விபரங்களை இம்மலர் வாயிலாக அறியமுடிகின்றது. இதன் ஆசிரியர்களாகத் திரு. இ. பி. இராசையா, திரு. கே. பி. முத்தையா, திரு. என். சோமகாந்தன் பணியாற்றுகின்றனர். சனசமூக நிலையங்களின் ஆதரவு ஆசிரியர்களின் நன் முயற்சிக்குப் பெரிதும் வேண்டப்படுகின்றது.

**அன்னை:** முத்திங்களேடு **வெளியீடு,** வாலிப முன்னேற்றக்கழகம், அனுராதபுரம், **ஈழம். விலை:** சதம் 25.

அறிஞர்கள் வகுக்கும் வழியில் நின்று தமிழ் அன்னைக்குப் பணியாற்றுவதே 'அன்னை' யின் நோக்கமாகும். இலக்கியக் கட்டுரைகளும், சிறுகதைகளும் இதன்கண் உள. திரு. வை. நாகராசன், திரு. ஜோவலன் வாஸ் ஆகியோர் இதழாசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். தமிழ் 'அன்னை' வாழ்க!

# இலக்கணச் சுவாமிகள் நினைவுமலர்

## இலங்கை வானெலியின் பாராட்டுரை

**இலக்கணச் சுவாமிகள்** என்னும் **ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான்** நினைவு மலர். இதை **வெளியிட்டவர்கள்:** கலாநிலையப் பதிப்பகம், சிவன் கோவில் மேலைவீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் அவதரித்து சின்னஞ்சிறு வயதான பதினன்காம் ஆண்டிலேயே ஈழத்திலிருந்து பாரதப் புண்ணிய பூமிக்குச் சென்று துறவறம் பூண்ட ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் வாழ்க்கையையும் அவர் சைவத்திற்கும் தாய் மொழிக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிய அருந் தொண்டையும் விளக்கி உரைக்கிறது இந்த ஞாபகார்த்த மலர். இதில் தம்பிரான் அவர்களது சேவையையும் பக்திப் பண்பையும் நன்கு அறிந்த திரு. மா. வே. திருஞானசம்பந்தர், சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், கொழும்பு வானெலி நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. அருள் தியாகராஜா முதலியோர்களும் மற்றும் பல அறிஞர்களும் எழுதிய பாராட்டுக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. துறவறம்பூண்டவர்கள் சாதாரணமாக ஆத்மீக விஷயங்களில் மட்டுமே அதிகக் கவனம்செலுத்துவது வழக்கம். ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் அவர்களோ ஆத்மீக விஷயங்களில் மட்டுமல்லாது தெய்வத் தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் தீவிரமான கவனம் செலுத்தி இலக்கணச் சுவாமியார் என்ற காரணப் பெயர் அவருக்கு அமைந்தது. முன் எப்பொழுதும் வெளிவந்திராத சிவஞான மகாபாஷியத்தையும் சிவாக்கிர பாஷியத்தையும் இவைபோன்ற இன்னும் பல அரிய புராதன நூல்களையும் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டமை சைவ உலகிற்குச் செய்த மாபெரும் சேவையாகும். சைவசித்தாந்தத்திற்கு எல்லையாக விளங்குபவர் இலக்கணச் சுவாமியார் என்று இரத்தினச்சுருக்கமாக சிவாச்சாரியார் குறிப்பிட்டிருப்பதை அன்பர் திரு. அம்பிகைபாகன் எடுத்துக்காட்டியிருப்பது சுவாமிகளின் சைவ சேவையை அறிவுறுத்திக் காட்டப் போதுமானது. இந்த அரிய நூல் ஒவ்வொருவரும் படித்துப்பயனுற வேண்டிய முக்கியமான நூல் என்பதில் சந்தேகமில்லை.

# சிறுவர் பகுதி

## தந்தை சொல் கேள்

ம. சுப்பிரமணியம் (பதிவு எண். 226)

பூஞ்சோலை என்னும் ஊரிலே முருகானந்தம் என்றொருவர் இருந்தார். அவருடைய வேலை ஆடு மேய்ப்பது. அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் கோபால். அவன் பாடசாலைக்குச் செல்வதில்லை. ஊர் முழுவதும் சுற்றித் திரிவான். இதைக் கண்ட தகப்பன் அவன் வேலையாவது பழகட்டும் என்று தன்னுடன் உதவிக்கு அமர்த்திக்கொண்டான். ஒருநாள் இருவரும் வழக்கம்போல மந்தைகளை ஓட்டிக்கொண்டு மேய்ச்சல் நிலத்தை அடைந்தார்கள். அடுத்த வீட்டுத் தோட்டத்திலிருந்த மாமரத்தைக் கண்டதும் கோபாலின் நாக்கில் ஜலம் ஊறியது. ஆனால் முருகானந்தத்தின் முன் மரத்தில் ஏறினால் முதுகுதான் வீங்கும். ஆகவே அவன் தன் தந்தையார் அவ்விடத்தை விட்டு நகரமாட்டாரா என்று எண்ணமிட்டவாறு இருந்தான். முருகானந்தம், "டேய், கவனமாக மந்தையைப் பார்க்கவேண்டும். மாங்காய் பறிக்கலாம் என்ற ஆசையை ஒழித்துவிடு" என்று கூறிவிட்டுப் புறப்படும்பொழுது அவருடைய நண்பர் பாலசுப்பிரமணியம் அங்கு வந்து சேர்ந்தார். ஆகவே சிறிது நேரத்தில் முருகானந்தமும், பாலசுப்பிரமணியமும் பேச்சிலே மூழ்கிவிட்டனர். கோபால் இச்சமயத்தை நழுவவிடுவானா! விரைவாக அடுத்தவீட்டுச் சுவரைத் தாண்டித் தோட்டத்திற் குதித்தான். அடுத்த இரண்டு நிமிடத்தில் அவன் மாமரத்தின் உச்சிக்கிளையில் காணப்பட்டான். சிறிதுநேரத்தில் பாலசுப்பிரமணியமும், முருகானந்தமும் விடைபெற்றனர். இதைக் கவனித்த கோபால் உச்சிக்கொப்பிலிருந்து மிக விரைவாகவும், அவசரமாகவும் இறங்கினான். அப்போது அவனது கால் தவறி மரத்தினின்றும் கீழே விழுந்துவிட்டான். வலது கால் முறிந்துவிட்டது. அவன் கதறி அழுதான். உடனே முருகானந்தம் ஓடிவந்து தன் மகனைத் தூக்கினார். "இனிமேலாவது என் சொல்லைக் கேட்டு நடந்துகொள்" என்று மகனிடம் சொல்லியவர், அவனைத் தூக்கித் தோள்மீது சாய்த்த வண்ணம் வீட்டுக்குக் கொண்டு சென்றார்.

**கையிழந்து அலறிய சிறுவன் ஆஸ்பத்திரியிற் பட்ட அவஸ்தையைப் பற்றிச் சிறுவர் பகுதியில் ஒரு செய்தி வெளிவந்ததை மருமக்கள் மறந்திருக்கமாட்டார். அதனைப் படித்த பின்னர் மருமகன் ஒருவர் எழுதி அனுப்பிய கருத்தை இங்கு வெளியிட்டுள்ளேன்.**

## என் கருத்து

கு. அரவிந்தன் (ப. எண். 235)

முதலில் புகை வண்டியில் ஏறிய சிறுவன் கவனத்துடன் ஏறியிருத்தல் வேண்டும். இரண்டாவதாக இரக்கமற்ற கார் சொந்தக்காரர்கள் மறுத்த பொழுது நிலைய அதிகாரி மனிதப் பண்புடன்—தன் சொந்தப் பணத்தையேனும் கொடுத்து அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றிருக்க வேண்டும். மூன்றாவதாக சிகிச்சைக் கருவி பழுதடைந்திருந்தது டக்டரின் அசிரத்தையைக் காட்டுகின்றது. சிகிச்சைக் கருவி என்று பழுதடைந்ததோ, அன்றே அதைத் திருத்த அவர் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். அது போகட்டும். 'அம்பூலன்ஸ்' எப்பொழுது தேவைப்படும் என்று சொல்லமுடியாது. டிரைவர் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும்.

இச்சம்பவம் நாட்டின் சீர்கேடான நிலையை—மனிதரின் பண்பற்ற நிலையை விளக்குகின்றது. சிறுவனின் உயிர் இரண்டு மணித்தியாலங்களில் சென்றிருந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

## புதிய மருமக்கள்

பெயரும் பதிவு இலக்கமும்

294. வீ. சுப்பையா
புனித கபீரியல்கல்லூரி,
எட்டியாந்தோட்டை.

295. ப. மு. சின்னையா,
பெரியகுறியானை,
தேகியோவிற்ற.

296. ப. ராசலிங்கம்,
அர்ச். அந்தோனியார் பாடசாலை,
நக்வானை.

297. அன்ரன் கனகரெத்தினம்,
'அரசவில்ல'
எட்டியாந்தோட்டை.

298. ஏ. பி கலந்தர்லெவ்வை,
அங்குநொச்சிய அ. மு.. பாடசாலை
ஹொரவப் பொத்தானை.

299. பொ. கந்தசாமி,
மே/பா. வீ. வல்லிபுரம்,
சாவகச்சேரி வடக்கு.

300. பொ. கிருஷ்ணபிள்ளை,
BT/செட்டிபாளையம்,
அ. த. க. பாடசாலை,
குருக்கள்மடம் P.O.

301. வே. கலையரசி,
91/C, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

302. வே. சச்சிதானந்தம்
'ஸ்ரீ கந்தபவனம்'
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

303. கா. இராமச்சந்திரன்,
368, சிவன்கோவில்வீதி,
திருகோணமலை.

304. எஸ். ஆர். ராசபாலன்,
(J. S. C. 'C') புனித
அந்தோனியார்கல்லூரி,
ஊர்காவற்றுறை.

305. மு. கனகராஜா,
அர்ச். மரியநாயகி பாடசாலை,
மத்துகம.

306. அறிவழகன்
146, தேசியவீடமைப்புத் திட்டம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

307. மு. ஸ்ரீ ரெங்கநாதன்,
போஸ்ட் மாஸ்டர் வங்களா,
காங்கேசன் துறை.

308. சு. பழனிச்சாமி,
90, மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.

309. த. கிருஷ்ணமூர்த்தி,
18/1 பலாலிவீதி,
1-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

310. ஏ. சின்னராசா,
4-ம் குறிச்சி,
சம்மாந்துறை.

செல்வச் சிறுவர்களே,

வணக்கம். சிறுவர்களுக்கு உபயோகமான முறையில் இப்பகுதியில் ஒரு போட்டியை ஏற்படுத்துமாறு உங்களிற் பலர் எழுதிய கடிதங்கள் எனக்குக் கிடைத்து வருகின்றன. இது சம்பந்தமாக உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்றை அடுத்த வாரம் தெரிவிப்பேன்.

சின்ன மாமா

## நூறு கணு மூங்கில்

அழகனார் (பதிவு எண்: 127)

வெகுகாலத்திற்கு முன்பு ஒருவன் இருந்தான். அவனுக்கு அழகான ஒரு பெண் இருந்தாள். அவன் தன்னுடைய வேலைகளைச் செய்ய உதவியாக இருக்கும் பொருட்டு பையன் ஒருவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டான். அந்தப் பையனிடம் அதிக வேலைகள் வாங்குவதற்கு என்ன செய்யலாம் என எண்ணிப் பார்த்தான். பிறகு, ஒரு நாள் பையனை அழைத்து, "தம்பி! நீ நன்றாகப் பாடுபடு; நான் என் மகளை உனக்கு மணஞ் செய்து தருகிறேன்!" என்று சொன்னான்.

அந்தப் பையனின் ஆனந்தத்திற்கு அளவில்லை. துள்ளிக் குதித்தான்! நாள் எல்லாம் கடினமாகவும் அதிகநேரமும் உழைக்கத் தொடங்கினான். அவன் காலத்தைக் கணக்கிடவில்லை; இரவிலும் பகலிலும் தொடர்ந்து நீண்ட நேரம் உழைத்து வரலானான்.

மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தன. பையனின் முதலாளி, பையனின் உழைப்பால் பெரும் பணக்காரனாகி விட்டான்! அப்போது அவன் தனக்குள்ளாகவே, "இப்போது நான் ஒரு பெரும் பணக்காரன். நான் ஏன் ஒரு வேலைக்காரனுக்கு என் மகளை மணம் செய்து தரவேண்டும்? அது பெரும் முட்டாள்தனமாகும். அப்படி ஒரு வேலைக்காரனுக்கு என் மகளை மணம் செய்து தந்தால் ஒவ்வொருவரும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கேலி செய்வார்களே!" என்று எண்ணிக்கொண்டான்.

அதனால் தன் வேலைக்காரனை அந்தப் பையனுக்குக் கொடுத்த வாக்குறுதியை உடைத்தெறிந்தான். அந்த ஊரிலேயே பெரிய பணக்காரனாக உள்ள ஒருவனுக்கும் தன் மகளுக்கும் திருமணம் செய்விக்க ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினான்.

விருந்தினர் கூட்டம் வந்து கொண்டிருந்தது, திருமணத்திற்கு. அப்போது வேலைக்காரனை அந்தப் பையனைப் பெண்ணின் தகப்பன் அழைத்து "நீ காட்டிற்குப் போய் நூறு கணு மூங்கில் ஒன்றை வெட்டி எடுத்துக்கொண்டு வா. சிறப்பு விருந்துணவு செய்ய அது வேண்டும். பிறகு நான் என் பெண்ணை உனக்குத் தருகிறேன்!" என்று கூறி அனுப்பி வைத்தான்.

அவனைப்போல முட்டாள் வேறு எங்கும் எவனும் இருக்கமாட்டான்! ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு நூறு கணு மூங்கிலுக்காகக் காட்டிற்குச் செல்லலானான்!

(தொடரும்)

## சின்னச் சிட்டு

சின்ன சின்னச் சிட்டு
சிங்காரச் சிட்டு
வன்ன வன்னச் சிட்டு
மகிழ்ந்து வரும் சிட்டு!

தும்பு கொண்டு வந்து
தூய கூடு கட்டி
வம்பு தும்பு இல்லா
வாழ்வு கொள்ளும் சிட்டு

சின்னச் சிற காட
செல்லும் எழிற் சிட்டு
வன்னக் கவி பாடி
வானிற் செல்லும் சிட்டு


கைப் பிடிக் காணு
கானம் பாடும் சிட்டு
இப் புவியில் யார்க்கும்
இன்னல் செய்யாச் சிட்டு

சிட்டுச் சின்னன் என்று
தேடிக் கொண்டு வந்து
இட்டமாகக் கூட்டில்
இட்டிடாதே கம்பி

கூட்டில் வைத்து நீயும்
கொஞ்சிப் பழந் தன்னை
ஊட்டி விட்ட போதும்
உள்ளம் மகிழாதாம்

சின்னத் தம்பி நீயும்
சிட்டைப் பிடியாதே
உன்னைப் போல சீவன்
ஒன்று என்றே எண்ணு!

## உண்மைக் கதைகள்.... அனி ஓக்லி: II



**சிறுவயதில் ஆர்வம்:** ஏழு வயதிலேயே அனி ஓக்லி தனது தந்தையின் பழைய துப்பாக்கியொன்றினால் சுட்டாள். சுட்டவுடன் ஏற்பட்ட அதிர்வு அவளைக் கீழே விழுத்தியது. அதன் பயனாக அவளுடைய மூக்கும் உடைந்தது. ஆனால், இச் சம்பவம் அவளுடைய ஆர்வத்தை எள்ளளவும் குறைக்கவே இல்லை. நேராகக்குறிவைத்துச் சுடும் இயல்பு அவளுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. அவள் வெகு விரைவிலேயே சுடுவதிற் கைதேர்ந்தவளானதுடன், வீட்டுச் சாப்பாட்டிற்குத் தன் துப்பாக்கி மூலம் உணவு தேடிக்கொடுத்தாள்.

**உழைப்பு:** அனி தனது 16ஆவது வயதிலேயே உழைப்பாளியாகி விட்டாள். தன் துப்பாக்கியின் திறமையினால் ஒரு பிரபல சாப்பாட்டுக் கடைக்கு உணவு தேடிக் கொடுப்பதே அவளது தொழில். அவள் தனது தொழிலில் மிகுந்த திறமை காட்டினாள். சூடுபடாமல் தப்பித் திரிந்த ஒரு பறவையைப்பற்றி அவளிடம் சாப்பாட்டுக் கடைக்காரர் முறையிட்டனர். உடனே அவள் அப் பறவையை ஒரே வேட்டில் சுட்டு வீழ்த்தினாள்.

**பிராங்க் பற்லர்:** தனது சகோதரியைப் பார்க்கச் சென்றிருந்தபொழுது, அனி பிராங்க் பற்லர் என்னும் ஒரு துப்பாக்கிச்சூட்டு வித்தகருடன் போட்டியிட்டாள். நாட்டிலேயே சிறந்த திறமைசாலிகளில் ஒருவனாக விளங்கிய பிராங்க்கை அனி இலகுவில் தோற்கடித்துவிட்டாள். இவளுடைய திறமை பிராங்க் பற்லரைப் பெரிதும் கவர்ந்தது.

—தொடரும்

# தேடி வந்த செல்வம்

★

— கசின் —

8

**நேர்மையைக் கடைப்பிடிப்பவன் அறியாது விடும் பிழைகள் சரியாகி விடும்.**

* * *

வாழ்க்கை முழுவதும் தேடித் திரிந்தாலும் சில சந்தர்ப்பங்கள் எங்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது. நாங்கள் கற்பனையிலும் நினைக்காத சில அரிய சந்தர்ப்பங்கள் முற்றிலும் எதிர்பாராமல் கிட்டிவிடுவதுமுண்டு. ஏன் அதிகம்; அடுத்தகணம் என்ன நிகழும் என்று யாரால் கூற முடியும்.

நான் இன்று பிற்பகல் அவளை முதன் முதல் கண்டேன். அவளின் தோற்றமும் கொள்கைகளும் என்னைக் கவர்ந்தது உண்மை. ஆனால் நான் விரும்பாமலும், முயற்சிக்காமலும் எங்கள் தொடர்பு இவ்வளவு தூரம் முன்னேறிவிட்டது.

அந்தச் சிறிய அறையில் சின்ன மேசையில் இருந்த உணவுப் பொருள்களைப் பார்த்து அவள், 'இதில் இருக்கும் உணவுப்பொருள்கள் எல்லாவற்றையும் நீங்கள் உண்பீர்கள்தானே' என்று கேட்டாள்.

'ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்' என்று நான் கேட்டேன்.

'நான் வாழைப்பழமும் பாலும் சாப்பிடும் வழக்கமில்லை. அதை முன்னுக்கே சொல்லிவிடுகிறேன்.'

'ஒரு புதிய இடத்தில் நான் அது சாப்பிடுவதில்லை; இது சாப்பிடுவதில்லை என்று கூறுவது ஒரு நல்ல பழக்கமில்லை; இன்று நீங்கள் எனது விருந்தாளி. நான் தருவது எல்லாவற்றையும் நீங்கள் சாப்பிட வேண்டும்?' என்று கண்டிப்பாகக் கூறினேன்.

'எங்களுடைய விருந்தாளிகளாக நீங்கள் எங்கள் வீட்டில் இருக்கும்பொழுது, நாங்கள் தருவது எல்லாவற்றையும் சாப்பிடுவீர்களா' என்று அவள் கேட்டாள்.

'ஆம்; தடையில்லாமல்' என்று நான் சொன்னேன்.

எங்களுடைய தொல்லை சாப்பாட்டுவிஷயத்தில் இருக்கவில்லை. படுக்கை விஷயத்திலும் விவாதம் ஏற்பட்டது.

அவளை அறைக்குள்ளே எனது கட்டிலிலும், நான் வெளியிலும் படுப்பதென நான் எனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு, எனது எண்ணத்தின்படி நான் ஒரு பாயும் தலையணையும் எடுத்துக்கொண்டு, அவளைக் கட்டிலில் படுக்கும்படி சொல்லிவிட்டு, வெளியே வந்தேன்.

அவள் அறைக்குள்ளே தான் தனியே படுக்கமாட்டேன் என்று நீண்டநேர மௌனத்தின் பின் முணுமுணுத்தாள். அவள் சொன்னது உண்மை. சன நடமாட்டமில்லாத அந்தப் பிரதேசத்தில், முற்றிலும் புதியவளான ஒரு அனுபவமற்றவளான இளம் பெண், தன்னந்தனியே அக் குச்சறைக்குள் படுப்பாள் என்று நான் எதிர்பார்த்தது எவ்வளவு தவறுகும்.

'இவ்வளவு வசதிக்குறைவும் ஆள் நடமாட்டமில்லாததுமான இடமென்ருல் நான் வந்திருக்கமாட்டேன்' என்று அவள் சொன்னாள். எனக்கு இவ் வார்த்தைகள் வெட்கமாகவும், வேதனையாகவும் இருந்தன.

'சரி நான் உள்ளே படுத்துக்கொள்கிறேன். நீங்கள் கட்டிலில் நுளம்பு வலையை இழுத்துவிட்டுப் படுங்கள். இந்த ஊர் நுளம்புகள் பொல்லாதவை. உங்களுடைய முகமெல்லாம் கடித்துவிடும்' என்று இப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டப்பார்த்தேன்.

'முடியாது; நான் தரையில் படுக்கிறேன். நீங்கள் கட்டிலில் படுங்கள்' என்று அவள் சொன்னாள். உண்மையில் தரையில் ஒருவரும் படுக்க முடியாது. அது ஈரலிப்பாயிருந்தது. வெளியில் நல்ல மழை பெய்துகொண்டிருந்ததால் மேலும் ஈரமாகப் புலப்பட்டது.

'நீங்கள் கட்டிலில் படுங்கள்; படுக்காவிட்டால் நானும் படுக்க மாட்டேன்' என்று கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவளும், 'நானும் படுக்கப்போவதில்லை' என்று கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

எனக்கு ஒரு புத்தியும் தெரியவில்லை. நான் செயலற்றுச் சிந்தனையிலிருந்தேன்.

'என்ன ஆழ்ந்த யோசனை' என்று அவள் என்னைப் பரிவோடு கேட்டாள். அவளுடைய கண்கள் என்னைக் கூறு குறிப்பாகப் பார்ப்பதுபோல் எனக்குத் தோன்றியது. அவளுடைய கண்களில் ஒரு ஆழ்ந்த ஏக்கம் தோன்றுவதுபோல இருந்தது.

'நீங்கள் இதில் இருங்கள்; நான் கதிரையில் சாய்ந்துகொண்டிருக்கப் போகிறேன்' என்று அவள் கேட்டாள். அவளுக்கு அந்த அளவு உதவியாவது என்னால் செய்ய முடிகிறதே என்ற ஒரு சிறு உவகையோடு எழுந்து கட்டிலில் இருந்தேன்.

'ஒரு புத்தி செய்வோம்' என்று அவள் இனிது உற்சாகத்தோடு கூறினாள்.

'என்ன புத்தி' என்று அவசரத்தோடு கேட்டேன்.

'நீங்கள் முதல் கொஞ்சம் படுத்து நித்திரை கொள்ளுங்கள், பிறகு என்னை நித்திரை கொள்ள விடுங்கள்' என்று அவள் தனது புத்தியை வெளியிட்டாள்.

'நீங்கள் முதலில் படுங்கள்; நான் பிறகு படுக்கிறேன்' என்று நான் சொன்னேன்.

'முடியாது; நான் படுத்தால் நித்திரையாகிவிடுவேன். பிறகு நீங்கள் எழுப்பவும் மாட்டீர்கள். நீங்கள்தான் முதலில் நித்திரை கொள்ள வேண்டும்' என்று அவள் திருப்பி உள்ளதைக் கூறினாள். அவள் கூறிய நியாயத்தையே நானும் திருப்பிக் கூறினேன். ஆனால் யார் படுத்தாலும் நித்திரை வராது. கடைசியில் இத் திட்டம் கைவிடப்பட்டது.

நான் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, செருமி எனது சக்தியை ஒருங்குசேர்த்து, 'நான் ஒன்று சொல்லட்டுமா' என்று கேட்டேன். 'என்ன' என்று ஆவலுடன் கேட்டாள். அவள் தவருக எண்ணிவிடக்கூடுமென்ற பயத்தில் நான் அந்த யோசனையைக் கூறவில்லை. சிறிதுநேரத்தில் நித்திராதேவியிடம் சரண்புகுந்து விட்டோம்.

(தொடரும்)

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.

# வெண்குஷ்டத்தைக் குணப்படுத்த அணுக் கதிரியக்க சிகிச்சை

மருத்துவ ஆராய்ச்சிக்கென்று உருவாக்கிய அணு உலை ஒன்று அமெரிக்காவில் புரூக்ஹேவன் தேசிய ஆய்வுக் கூடத்தில் 1959 ஏப்ரல்மாதம் வேலை செய்யத் தொடங்கியது. வைத்திய ஆராய்ச்சிக்கும் நோய் தீர்ப்பதற்கும் அணு சக்தியைப் பயன்படுத்தும் பணி இதனல் பெரிதும் முன்னேறும் என்று எதிர்பார்க்கிருர்கள்.

புரூக்ஹேவன் மருத்துவ மன்றம் என்னும் புதிய ஸ்தாபனத்தில்தான் அந்த ஆய்வுக் கூடம் அமைந்திருக்கிறது. அம் மன்றத்தில் பல வகைப் பிணிகளால் வருந்தும் நோயாளிகளைக் கொண்டு சிறப்பான ஆராய்ச்சி நடத்தும் மருத்துவ மனை ஒன்றும், அணு சக்தியின் மருத்துவப் பயன்களை ஆராயும் விரிவான ஆராய்ச்சிக் கூடங்களுமுண்டு.

இதுநாள்வரை புரூக்ஹேவன் தேசிய ஆய்வுக் கூடத்தில் வேருெரு அணு உலை பயன்பட்டு வந்தது. அது பொதுப்படையான அணுஉலை. அதிலிருந்து கிடைக்கும் 'நியூட்ரான்' கற்றைகளைச் செலுத்தித்தான் பலவகைப் புற்றுநோய்க்குச் சிகிச்சை செய்து வந்தனர். புதிய அணு உலை பழைய அணு உலையைவிட 50 மடங்கு அதிக ஆற்றல் வாய்ந்த 'நியூட்ரான்'களை அளிக்கவல்லது. இவை புற்றுநோய்ச் சிகிச்சைக்கு மட்டுமல்ல, பல புது மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் பயன்படும். உலகிலேயே மருத்துவ ஆராய்ச்சிக்கெனத் தனிப்பட உருவாக்கப்பட்டுள்ள அணு உலை இன்று வரை இது ஒன்றேதான்.

## "நியூட்ரான்" யாது?

அணுவின் உட்கருவில்உள்ள துகள்களில் ஒன்று நியூட்ரான். அணுஉலையில் அணு சிதையும்போது, நியூட்ரான்கள் விடுபட்டு வெளியே பாயும். இவை மின் ஏற்றம் இல்லாதவை ஆதலால் பெரும்பாலான திடப்பொருள்களை எளிதில் ஊடுருவிச் செல்ல வல்லவை. மூளையில் புற்றுநோய் கொண்டவருக்கு இந்த நியூட்ரான்களைக் கொண்டு சிகிச்சை செய்கிருர்கள். முதலில் நோயாளியின் இரத்தத்தில் 'போரான்' என்னும் பொருள் ஒரு சிறிது செலுத்தப்படும். இந்த 'போரான்' 'நியூட்ரான்'களைக் கவரும் தன்மை மிக்கது. இரத்தத்தில் செலுத்திய 'போரான்' மூளையில் புற்று நோய் கண்ட பகுதியில் சேர்ந்த பிறகு, நியூட்ரான் கற்றையை அந்த இடத்தில் படும்படி செலுத்துவார்கள். நியூட்ரான்கள், போரான் அணுக்களின் உட்கருவில் பட்டவுடன், அந்த அணுக்கள் சிதையும். அதன் விளைவாக ஏற்படும் மாறுதல்கள் புற்றுநோய் கண்ட திசுக்களை அழிக்க வல்லவை.

இவ்வாறுதான் புரூக்ஹேவன் மருத்துவ மன்றத்தில் புற்று நோய்க்கு இந்த அணு உலையைப் பயன்படுத்துகிருர்கள். அங்கு சிகிச்சைக்கு வந்திருக்கும் நோயாளிகள் இன்றைய வைத்தியத்தால் கைவிடப்பட்டவர்களே. அதாவது, அவர்களது நோய்களுக்கு இன்றைய வைத்திய உலகில் மருந்து எதுவும் இல்லை. புரூக்ஹேவன் மன்றத்தில் இத்தகையோர் பெரும்பாலும் புற்றுநோய் கண்டவர்களாக உள்ளனர்.

புற்றுநோய்களைக் குணப்படுத்த அணுக் கதிரியக்கத்தைப் பயன்படுத்தி வியக்கத்தக்க பலன்கள் விளைந்துள்ளன என்று புரூக்ஹேவன் நிலைய ஆராய்ச்சி ஏற்கனவே விளக்கிக் காட்டியுள்ளது. உதாரணமாக, முன்பு வைத்தியர்களால் இடம் குறிப்பிட முடியாதிருந்த ஒருவகை மூளைப் புற்றுநோய் இன்ன இடத்தில்தான் பீடித்திருக்கிறது என்பதை அணுவின் உதவியால் இன்று சரிவரக் கண்டு பிடித்து விடலாம். இதனல் நோயாளியின் உடல் நலம் சீர்திருந்தவும் வாழ்நாள் நீடிக்கவும் வழி பிறந்துள்ளது. வெண் குஷ்டத்துக்கும் அணுக் கதிரியக்கம் மருந்தாக உதவுகிறது என்று புரூக்ஹேவன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

## புரூக்ஹேவன் சிறப்பு

புது அணுஉலை கிடைத்திருப்பதால் இன்னும் பல வகை நோய்களின் காரணத்தையும் அவைகளைப் போக்கும் வழியையும் அறிவதற்கு புரூக்ஹேவன் விஞ்ஞானிகள் வல்லவர்களாவார்கள்.

ரசாயன மூலங்களை அணு உலையில் இட்டு அவற்றைக் கதிரியக்கமுள்ளவை ஆக்கலாம். இவற்றில் பல, மிக்க பயனுள்ளவை. எனினும் சிறிது நேரத்திற்குள் கதிரியக்கத்தை இழந்து விடுகின்றன. எனவே சில மணி நேரத்திற்குள் அவற்றைப் பயன்படுத்தினல்தான் பலன் காண முடியும். இப்பொழுது புரூக்ஹேவன் நிலையத்தில் புது அணு உலை இத்தகைய கதிரியக்கப் பொருட்களை உற்பத்தி செய்து கொடுத்துப் பெரும் பயன் விளைவிக்கும். இதனல் இதற்கு முன் செய்ய முடியாதிருந்த பல அடிப்படை ஆராய்ச்சிகளை இனி அங்கு செய்ய முடியும்.

இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

**ஈழநாடு** வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து இதனுடன் மனிஓடர்/செக்/மூலம் அனுப்பி வைக்கின்றேன்

.................................
கையொப்பம்.

பெயர்: ...........................................................

விலாசம்:.......................................................

இங்கே வெட்டவும்

அருள்வழி

# தவறான வழியும் சரியான வழியும்

**தார்மிக புனருத்தாரண இயக்கத்தின் தந்தையான டாக்டர் பிராங் புக்மன் தமது 81 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியின் சுருக்கம் இது**

“நம்மை எதிர்நோக்கியுள்ள உலகத்திலே வாழ்வதற்கு நாம் இன்னும் தயாராக இருக்கவில்லை” இவ்விதம் கூறியவர் “ஸ்பூட்னிக்”குக்குப்போட்டியாக ‘அட்லாஸை’ வான வெளிக்கு ஏவி விட்டவராவர். 400 விஞ்ஞானிகளும், 35 ஆயிரம் ஆட்களுமடங்கிய ஒரு படையின் தலைவராக விளங்கும் ஒரு மேதை அவர். வானவெளியில் ஒரு ராக்கெட்டை விடுவதற்கு ஒரு சரியான வழியும் ஒரு தவறான வழியுமுண்டு. அதே போல் இம் மண்ணுலகில் வாழவும் ஒரு சரியான வழியும் ஒரு தவறானவழியுமுண்டு.

தேசிய விஞ்ஞான சபையின் நிர்வாக அதிகாரியான டாக்டர் டக்லிஸ்கார்னல் சொல்லுகிறார்: ‘உலகத்தை ஒருசில மணிநேரத்துக்குள்ளாக நாசமாக்கிவிடுவதை விஞ்ஞானம் சாத்தியமாக்கிவிட்டது. ஆனால் பிரச்சினைவிஞ்ஞானத்தில் அடங்கியதல்ல. இது மனிதனிலேயே தங்கியுள்ளது. நவீன மனிதனையே புதிதாகத் திருத்தி அமைக்க வேண்டும்’.

### பேராசையும் சுயநலமும்

நாம் நீண்டகாலமாக தவறான வழியிலேயே வாழ்கின்றோம். அதுதான் சாதாரண வழி என்றும் நினைக்கின்றோம். குடும்பங்கள் சிதைகின்றன. கைத்தொழில்கள் குலைகின்றன. தேசங்கள் பிளவுபடுகின்றன. மகாநாடுகளில் முட்டுக்கட்டைகள் ஏற்படுகின்றன. இவையெல்லாம், நாம் தவறான வழியிலே செல்லுவதின் பலன்களாகும்.

பலர் கம்யூனிஸத்தைக் கண்டிக்கின்றார்கள். ஆனால் துவேஷம், பேராசை, பயம், சுயநலம் முதலியவை நம்மிடையே குழப்பமும், பிளவும் ஏற்படுத்தியுள்ளதுதான் கம்யூனிஸத்தின் சக்தியும் உயிருமாகுமென்பது சரியாகாதா?

நமது பேராசையும் சுயநலமும்தான், சாதாரண மக்களையும் கம்யூனிசத்தின்பக்கம் நாடச்செய்கின்றன. நாம் தார்மிக நெறிகளை மறந்துவிட்டோம். நமது பாதுகாப்புக்குக் கவசமான அந்த நெறியை நாம் கைவிட்டுவிட்டோம்.

### தெய்வம் காட்டும் வழி

சரியான வழி என்பது, “எனது வழி”யல்ல. உங்களது வழியாகவும் இல்லாமலிருக்கலாம். சரியானவழி என்பது தெய்வம் காட்டும் வழியே. சிலர் நினைக்கிறார்கள் சுதந்திரம்; ஜனநாயகம் என்பது, நாம் மனம்போனபடி காரியங்கள் செய்வதுதான் என்று ஒவ்வொருவரும் தானே எதையும் தீர்மானித்து தன்வழியே செல்கின்றனர். தகப்பனும் தாயும் தங்கள் இஷ்டப்படி வாழ்க்கை நடத்துகின்றார்கள். தங்கள் வழியைப் பிள்ளைகள் பின்பற்றினால் பயப்படுகின்றார்கள். அமெரிக்காவிலே இவ்வாண்டில் 10 லட்சம் வாலிபர்கள் குற்றம்சாட்டப்பட்டு வாலிபர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட இருக்கிறார்கள்! சிதைந்த குடும்பங்கள், தேசமெங்கும் மனக் குழப்பத்தைப் பரப்புகின்றன. புத்திபேதம், விவாகரத்து முதலியவற்றைத் தடுக்க “நியூ அமெரிக்கன்” என்ற புதிய நாடகம் வழிகாட்டுகின்றது.

### அரசியலில்

அரசியலிலும் சரியானவழியும் தவறானவழியுமுண்டு. பிரான்ஸுக்கும் ஜேர்மனிக்கும் நட்பு ஏற்பட்டுள்ளது ஒரு பெரிய காரியம். இதற்கு ஒரு முக்கிய காரணம் தார்மிக புனருத்தாரணமே என்று ஒரு பெரிய ஜேர்மன் அதிகாரி தெரிவிக்கிறார்.

“தார்மிக புனருத்தாரண வேலையைப் பரப்பாவிடில் உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியாது” என்று ஜேர்மன் சான்சலரான டாக்டர் அடினார் எனக்கு எழுதியுள்ளார். சர்வதேச ஒப்பந்தங்களுக்கு இந்த இயக்கம் தோன்றாத்துணையாக இருந்துவருவதாயும் அவர் தெரிவிக்கின்றார்.

லெபனான்பிரச்சினைமுடிவு, யப்பான்பிலிப்பைன்ஸ்நட்பு, ஸைப்பிரஸ் சமரசம் இவையெல்லாம் உலக அரசியல் வாதிகளை அதிசயிக்கச்செய்த சில சமீப சம்பவங்களாகும். இவை சாத்தியமாவதற்கு தார்மிக புனருத்தாரணத்தின் மூலம் வளரும் புதிய அரசியல் ஞானமே காரணமென்று ‘நியூயார்க் டைம்ஸ்’ பத்திரிகை எழுதுகின்றது.

### ‘பிரீடம்’ படம்

ஆபிரிக்காவிலே எங்கும் வெள்ளைக்காரரைப் பார்த்து, “நீங்கள் எப்போது வெளியேறப்போகிறீர்கள்” என்று கேட்கிறார்கள். ஆனால் எம். ஆர். ஏ. இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டு “நீங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வருவீர்கள்?” என்று கேட்கிறார்கள். “துவேஷமற்ற பீதியற்ற, பேராசையில்லாத ஆபிரிக்காவை அமைக்கவேண்டுமென்றும் ஆண்களும் பெண்களும் சுதந்திரமாக அங்கு வாழவேண்டுமென்றும் கிழக்கு நைஜீரியா பிரதமரான டாக்டர் அஸிகிவி, “பிரீடம்” என்று ஆபிரிக்கர் தயாரித்த எம். ஆர், ஏ. படத்தைப் பார்த்த பின். மூன்றரைக் கோடி மக்களடங்கிய நைஜீரிய தேசிய சமுதாயத்துக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

நிற துவேஷமுள்ள தென் ஆபிரிக்காவிலே “பிரீடம்” படம் காட்டப்படுகிறது. ஏராளமான வெள்ளைக்காரர்கள் வந்து பார்க்கிறார்கள். அதில் பிரதமராக நடிக்கும் ஆபிரிக்கர் மேடையில் அதே உடையுடன் தோன்றிப் பேசுகின்றார். அத்தியேட்டரில் கூடிய வெள்ளைக்காரர்கள் முதல் முதலாக ஒரு கறுப்பர் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்பது அதுவே முதல் தடவையாகும்!

### பரிசுத்தப்படுத்தும் நோக்கம் ?

பர்மிய அரசியல் ஞானியான ஊ நு சமீபத்தில் என்னை வந்து கண்டார். தூய்மையான கைகள், தூய்மையான மனம் இவை படைத்த ஆண்களும் பெண்களுமடங்கிய சமுதாயத்தை அடையவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினோம். தார்மிக புனருத்தாரணமே இதற்கு வழிகாட்டுமென்பதை அவர் உணர்ந்து, தமது நாட்டுக்கு இந்த இயக்கத்தை வரவேற்றார்.

இப்போது யப்பானில் நடைபெறும் எம். ஆர். ஏ. மகாநாட்டின் நோக்கம் தேசிய சமுதாயத்தை அடிமுதல் முடி வரை பரிசுத்தப் படுத்துவது தான். அங்கு காட்டப்படும் “ஸோல்ட் ஒப் லைற்” என்ற நாடகம் மந்திரிகள், பல கட்சி அரசியல் வாதிகள், கைத்தொழில் முதலாளிகள், தொழிலாளர் தலைவர்கள் இவர்கள் விலைக்கு வாங்கப்படக் கூடியவர்களாக இருப்பதாய், கம்யூனிஸ சக்திகளை எதிர் நிற்க முடியாமலிருப்பதை அது காட்டுகின்றது. அடிப்படைத் தேவையைப் பயமின்றி வெளிக்காட்டுவதாலும், இன்றைய பிரச்சினைக்குப்பதிலளிப்பதாலும், அந்த நாடகம் பெரிதும் பாராட்டப்படுகின்றது.

பீதியற்ற, துவேஷமற்ற, பேராசையில்லாத, ஆண்களும், பெண்களும் தெய்வத்துக்கே முற்றிலும் அர்ப்பணித்து, புதிய உலகை அமைக்கக்கூடிய தலைவர்களை ஒவ்வொரு நாட்டுக்கும் அளிக்கவேண்டியதே நமது மேலான பணியாகும்.

அரசியலிலும் சரியான வழியும் தவறான வழியுமுண்டு. பயம், துவேஷம், பேராசை இவை மனிதர் மனதிலிருந்து நீங்கிவிட்டால், சர்வ தேசிய நெருக்கடிகள் சுலபமாகத் தீருவதை எம். ஆர். ஏ. முடிவாகக் காட்டியுள்ளது. இதுவே நம் முன்னுள்ள காட்சியாகும். இது மிக எளிதானது. மிகவும் அடிப்படையானது. இது இல்லாமல் முடியவே முடியாது.

## ராஷ்டிரபதி இராஜேந்திர பிரசாத் அவர்களின் ஜனன ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| கே | | சந் | சனி |
| | கிரக நிலை | | |
| | | | வியா |
| ல செ புத | சூ | சுக் | ரா |

| | | | |
|---|---|---|---|
| | | புத | ரா செ- |
| சுக் | நவாம்ச நிலை | | |
| சூ | | | வியா |
| கேது | | சனி | சந் ல |

1884 ஆம் டிசெம்பர்மீ 3உ காலை 8 மணி 45 நிமிஷமளவில் ஜனனம்.

அக்ஷாம்சம் வடக்கு 25 பாகை 36 கலை
தேசாந்தரம் கிழக்கு 85 பாகை 10 கலை
லக்னம் தநுசு
நட்க்ஷத்திரம் மிருகசீரிடம் 2ம் பாதம்
ஜனன காலத்தில் செவ்வாய் தசை இருப்பு
ஆம் 5, மீ 1, நாள் 16.

—சி. சுப்பிரமணிய ஐயர்—
[திருக்கணித பஞ்சாங்க கணிதர்.]

## இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | சூரி. புத. |
| | இவ்வாரக் கிரகநிலை 22உ துலா-வியா 24உ கடக-புத | | செ. வெ. |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(20-6-59 — 26-6-59)

**மேடம்**: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) சினேகிதர்களால் நன்மை வந்தடையும். நடந்த கருமங்களினால் பண விருத்தி ஏற்படும். எல்லாக் கருமங்களிலும், பிரயாசை அதிகரிக்கும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்குக் குறைவிராது. வியாபாரத் தொழிலால் வருமானம் இவ்வாரம் அதிகரிக்கும். பெண்மணிகளின் உறவு விருத்தியுறும்

**இடபம்**: (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) கஷ்டங்களிலிருந்து நீங்க நண்பர்கள் உதவுவார்கள். வேலை அதிகமாகி உமக்கு மகிழ்ச்சியைக் குறைக்கும். தனலாபங்கள் கிடைப்பதுடன் அதே வேளையில் செலவும் அதிகரிக்கும். சிறு சுகவீனங்கள் தவிர இந்த வாரம் நல்லாயிருக்கும். பழைய முதலீடுகள் மூலம்அதிக இலாபமடையலாம்.

**மிதுனம்**: (மிருகசீரிடம்3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) வார இறுதியில் மகிழ்ச்சிகரமான செய்திகள் எட்டும். மேலதிகாரிகள் அதிக உதவியாயிருப்பர். தேகசுகம் குறைவடையும். இரகசியப் பகைவர்களின் தொந்தரவுகளைச் சாமர்த்தியத்துடன் தவிர்த்துக் கொள்வீர். கொடுக்கல் வாங்கல் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

**கடகம்**: (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) எதிர்பார்க்காத சில கருமங்கள் நிறைவேறும். பிரயாண அலைச்சலும், சினேகிதர்களின் உறவால் கவலையுமுண்டு. சுகவீனமும் குடும்பச் சிக்கல்களும் தோன்றி மறையும். தொழில் துறைகளில் செல்வாக்கு அதிகரிக்கும். பெண்களின் நட்பால் அனேக நாட்களாக இருந்து வந்த மன எண்ணம் நிறைவேறும்.

**சிங்கம்**: (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) இனத்தவர்களுடன் சண்டை சச்சரவுக்கு இடமுண்டு. புது முயற்சிகள் நல்ல பலனைத்தரும். தனலாபங்கள் கிடைப்பதுடன் எதிரிகளும் பின் வாங்குவர். சுகவீனமும் குடும்பச் சிக்கல்களும் நிலையான இடம் பெறும். நீர் அதிகம் உழைப்பதுடன் புதுப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டி நேரிடும்.

**கன்னி**: (உத்தரம் 2, 3, 4-ம் பாதம். அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) பிரயாண அலைச்சலுடன் பழிச் சொற்களும் சுமத்தப்படும். வார இறுதியில் தேகசுகம் குறையும். ஆரம்பிக்கும் சில கருமங்களில் பகைவர் தலையிடுவர். தொழில் முறையில் நற்பலன் கிடைக்கும். எதிர்பாராத முறையில் சில கருமங்கள் நிறைவேறும். அனேக நாட்களாக மனதிற்குடி கொண்டிருந்த எண்ணம் இவ்வாரம் நிறைவேறும்.

**துலாம்**: (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) சமயக் கோட்பாடுகளில் வெறுப்பு அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பேரிலேதான் நிறைவேறும். நடந்த கருமங்களினால் வழக்குத் தொல்லைகள் ஏற்படக்கூடும். பெரியோர் மதிப்பு அதிகரிக்கும். புத்திரர்களால் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும், வஞ்சகக்காரர் தீமைகள் விளைவிக்க முயல்வர்.

**விருச்சிகம்**: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) இனபந்துக்களின் கொண்டாட்டங்கள் இவ்வாரம் நிறைவேறும். அன்னியர் நட்பு அதிகரிக்கும். சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் தோன்றி மறையும். உத்தியோக மாற்றம் ஏற்படலாம். பணத்துறையில் சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். பெண்களினால் சில தொல்லைகள் ஏற்படக்கூடும். அரச சேவையில் சில கஷ்டங்கள் தோன்றி நீங்கும்.

**தனுசு**: (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) தேக சுகம் அவ்வளவு திருப்திகரமாய் இருக்கமாட்டாது. ஆனால் பணத்துறையில் இது நல்ல வாரம். உத்தியோக உயர்வினால் பெரு மக்களின் நட்பு அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பேரில் நிறைவேறும். கொடுக்கல் வாங்கல் மூலம் பகைமை உண்டாகும்.

**மகரம்**: (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் நிலையான இடம்பெறும். நீர் முயன்றுழைப்பதோடு புதுப் பொறுப்புக்களையும் மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். பணத்துறையில் இது நல்ல வாரம். எல்லா எதிர்ப்பையும் நீர் சமாளிக்கக்கூடியதாயிருக்கும். மேலதிகாரிகளிடமிருந்து உதவிகள் வந்து சேரும். நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்**: (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) இவ்வாரத்தில் பல முக்கிய கருமங்களில் தலையிட வேண்டி நேரிடும். உத்தியோக உயர்வினால் பெருமக்களின் மதிப்பும் நட்பும் அதிகரிக்கும். வாகன விருத்திகள் உண்டாகும். எதிரிகளைப்பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம்.

**மீனம்**: (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) இவ்வாரம் கஷ்டங்களிலிருந்து நீங்குவது சிரமமாக இருக்கும். இரகசியப்பகைவர் மூலம் இன்னல்களுக்கு இடமுண்டு. எல்லா எதிர்ப்பையும் நீர் தவிர்க்கக் கூடியதாகவேயிருக்கும். மாதாவழி உறவினர்கள்மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு. எதிரிகளின் தோல்வியும், கமத்தொழில் மூலம் விருத்தியும் உண்டு.

விளையாட்டுப் பகுதி

# இரு உதைபந்தாட்ட வீரருக்குத் தண்டனை

யாழ்ப்பாணக் கோஷ்டிக்காகச் சதுர்முகப் போட்டியில் விளையாடும்படி அழைக்கப்பட்ட இரு ஆட்டக்காரர்கள் அதில் விளையாட மறுத்ததன் காரணமாக அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்ற். அந்தோனிஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஜே. ரி. பீரிஸ், றி. விஜயரத்தினம் ஆகிய இருவரும் உதைபந்தாட்டங்களிற் கலந்து கொள்ள முடியாதவாறு தடைப்படுத்தப் பட்டுள்ளனர். இத் தண்டனை 3-5-59 இல் அமுலாயிற்று.

### 1960 இல் சதுர்முகப் போட்டி


யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் நடைபெற்ற சதுர்முகப் போட்டி வருகிற வருடம் மட்டக்களப்பில் நடைபெறும். பங்குபற்றும் அநுராதபுரம், திருக்கோணமலையாழ்ப்பாணம் ஆகியவை சம்மதத்தைத் தெரிவித்துள்ளன.


### மாவட்டப்போட்டி

இலங்கை உதைபந்தாட்டக் கழகம் நடாத்தும் மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டி கலந்து கொள்வதெனு முடிவாகியிருக்கிறது. கோஷ்டிக்குத் தலைமை தாங்க ஏ. இ. நவரத்தினராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடுமையாகக் காற்று வீசுவதால் மானிப்பாயில் பயிற்சிகள் ஒழுங்காகியுள்ளன.

## உண்மைக் கதைகள்: "சூகர்" றே ரெுபின்சன் —I







**றேரெுபின்சன்** :— "சூகர் றே" ரெுபின்சன் ஒரு சாதுவான சிறுவனுக இருந்தும், கடைசியில் உலகத்திலேயே மிகச் சிறந்த குத்துச்சண்டை வீரர்களில் ஒருவராக விளங்கினுர். சமயப்பற்று அதிகமுடைய இவர் தமது வெற்றிக்குக் காரணம் கடவுள்மீதுள்ள நம்பிக்கையே என்று கூறினுர். அவருடைய கொள்கைகளும், வள்ளல் தன்மையும் அவருக்குப் பெருமதிப்பை ஈட்டித்தந்துள்ளன.

**ஆரம்பம்** :— ரெுபின்சன் 1921ஆம் ஆண்டில் டிரெுயிற் என்னும் இடத்தில் ஏழைப் பெற்ருேருக்கு மகனுகப் பிறந்தான். அவனுடைய வீட்டுக் கருகாமையிலிருந்த ஓர் உடற் பயிற்சிக்கூடத்தில் குத்துச்சண்டை வீரரின் பயிற்சிகளைக் குழந்தைப் பருவத்திலேயே பார்த்தான் ரெுபின்சன். இங்குயோ லூயி என்னும் ஏழை மகனெுருவன் அப்பொழுதுதான் தனது வருங்காலத்துக்கு வழி வகுத்துக்கொண்டிருந்தான். இந்தக்குத்துச் சண்டை வீரர் ரெுபின்சனின் நன்மதிப்புக்கு ஆளாகினுர். யோ லூயி பின்னர் உலகின் சிறந்த குத்துச்சண்டை வீரர்களில் ஒருவராக விளங்கினுர்.

**நாட்டியம்** :— ரெுபின்சன் 12 வயதானபொழுது, அவனுடைய தாய் தன் குடும்பத்துடன் நியூயோக் நகரத்துக்குக் குடியிருக்கச் சென்ருர். அங்கு அவர் தன் குடும்பத்தைக் காப்பாற்றப் பலவிதமான வேலைகளையும் கஷ்டப்பட்டுச் செய்தார். தாயின் கஷ்டத்தைக் கண்டு மனம்பொறுக்காத ரெுபின்சன் சப்பாத்துகளைப் பளபளக்க மினுக்குவது, தெருக்களில் நாட்டியமாடுவது போன்ற பலவித தொழில்களைச் செய்தான். ரெுபின்சன் ஓர் இயற்கை நாட்டியக்காரன்.

—தொடரும்

# மேயரின் விளையாட்டு மைதானத் திட்டம்

## கொழும்பு அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டக் கோஷ்டி

சுற்றுப்பிரயாணம் ஒத்திவைப்பு இங்குள்ள காலநிலை நன்ருயில்லாமையால் கொழும்பில் இருந்து வரவிருந்த அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டக் கோஷ்டியை அக்டோபருக்குப் பின்னுல் வரும்படி யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம் ஆலோசனை கூறியுள்ளது.

## திரு. டேவிட் இரத்தினசிங்கம்

### மாரடைப்பினுல் காலமானுர்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி விளையாட்டுப் பகுதி ஆசிரியரும் யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கத்தின் உதவிக்காரியதரிசியுமான திரு டேவிட் ரத்தினசிங்கம் சென்ற திங்கட்கிழமை மாரடைப்பினுல் காலமானுர். கம்பீரமான தோற்றம், இனிய பேச்சு, சரளமாகப் பழகும் சுபாவம், செயலாற்றும் திறமை — யாவும் நிறைந்த அன்னுரின் திடீர் மறைவு யாழ்ப்பாண விளையாட்டுலகுக்கு பலத்த நஷ்டமாகும். எதிர்பாராத இச்செய்தியினுல் அதிர்ச்சியடைந்த யூனியன் கல்லூரி ஆசிரியமாணவ மாணவிகளும் ஏனைய கல்லூரிகளின் ஆசிரியர்களும் விளையாட்டுப் பிரியர்களும் திரளாகக் கூடி அந்திம யாத்திரையின் போது அஞ்சலி செலுத்தினர். இறைவன் யாரை அதிகம் நேசிக்கிருரோ அவர்களை விரைவாக தமதருகே அழைத்துக் கொள்கிருர். இவர் பிரிவால் துயருறும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் அனுதாபம் உரியதாகும்.

யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கம் குருநகருக்கருகில் உள்ள விளையாட்டு மைதானத்தை மேயரிடம் நகரமைதானமாக்குவதற்குக் கொடுப்பதென முடிவு செய்துள்ளது.

ஒரு நகர மைதானத்தின் அவசிய அம்சங்களாவன:


அதன் பரப்பு, அதற்குள்ள போக்குவரத்துவசதிகள், நிலத்தின் தன்மை, காற்று முதலிய இயற்கைச் சக்திகளின் இடையூறு, கட்டடம் கட்டவசதி, சுற்றுடல் இப்படி எவ்வளவோ இவையெல்லாம் அம்மைதானத்துக்கு உண்டா என்பது ஆலோசனைக்குரிய விஷயம்.

மேயர், மைதான நிர்வாகத்தில், இடத்தைப் பொறுத்த வரையில் பட்டின எல்லைக்கு வெளியே போனுலும் குறைந்தது அரை நூற்ருண்டுக்குப் பின் தேடும் தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் அமைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு உதைபந்தாட்டத்துக்கு இப்பொழுதே 15,000 பேர் வரை (இருந்து பார்க்க வசதியும், ஆட்டத்தில் தரமும் இருந்தால்) வருவார்கள். கிரிக்கட், உதை பந்தாட்டம், விளையாட்டுப் போட்டி ஆகிய மூன்றுக்குமாவது போதியதாக ஒரு மைதானம் அவசியம் தேவை. வெள்ளத்தால் பாதிக்கப்படாத, காற்று அதிகமாக வீசாத இடமாகவும் இருக்கவேண்டும். அது கடற்கரைதானு? தரையில் புல் இருந்தாலும் ஊரியும் கல்லும் நல்லதா? கொட்டி நிரவிய நிலத்தில் நல்ல கட்டடம் எழுப்ப முடியுமா?

இப்பொழுது திரையிடப்படுகிறது

வின்ஸர் (யாழ்ப்பாணம்) எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) அசோகமாலா (நீர்கொழும்பு) வேல்ஸ் (கண்டி) கிங்ஸ் (பதுளை)

சிவாஜி கணேசன்
பத்மினி
எம். என். ராஜம்
டி. ஆர். ராஜகுமாரி
லலிதா
டி. பி. முத்துலெட்சுமி
ஈ. வி. சரோஜா
எம். என். நம்பியார்
வி. ஆர். ராஜகோபால்
(லேட்)என். எஸ். கிருஷ்ணன்



முதலிய சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்

தங்கப் பதுமை

இப்படம் 1958ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த தமிழ்ப்படம் என இந்திய அரசாங்கத்தினரால் பரிசளிக்கப்பட்டது.

விரைவில் வருகிறது!

வீரபாண்டிய கட்டபொம்மன்

சினிமா உலகம்

# அன்பு எங்கே?

அன்பு அன்பு என்று பேசிக்கொள்ளுகின்றோம். ஆனால், அந்த அன்பு எங்கே இருக்கிறது என்பதைத் தான் மனிதன் அறியாது தவிக்கிறான். பொறுமை, அடக்கம், உறுதியுள்ள நெஞ்சம் இவற்றிலே தான் அன்பு இருக்கிறது. இதனை நிரூபிக்கிறது **அன்பு எங்கே?** என்னும் படம்.

மாசிலாமணி முதலியார் லட்சாதிபதி. அவர் தமது வியாபாரத்திலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு, தன் மக்களான ராமு, சோமு இவர்களிடமே வியாபாரப் பொறுப்பு முழுவதையும் ஒப்படைத்து விடுகிறார். ராமு அமுதா என்னும் பெண்ணைத் திருமணம் செய்தும், அவள் 'பட்டிக்காடு' என்ற குற்றத்திற்காகத் தள்ளி வைத்துவிட்டு மாலா என்ற நடனக்காரியுடன் கூடிக்குலாவுகிறான். சோமுவோ, தன் தந்தை சீட்டாட்டத்தில் ஈடுபடுவதையும், தன் தமையன் கட்டின மனைவியைவிட்டு வேறு பெண்களுடன் கூடித்திரிவதையும், தன் தாய் ஒரே சாமிப் பைத்தியமாயிருப்பதையும் கண்டு தானும் ஒரு குடிகாரனாக மாறிவிடுகிறான். அவனுடைய தங்கை காமு, தன்னுடைய கணவன் 'பட்டிக்காடு' என்று சொல்லி அவனை உதறித் தள்ளிவிட்டு வீட்டில் தஞ்சம் புகுந்து விடுகிறாள்.

இப்படிச் சீர்கெட்ட குடும்பத்தில் தான் மூத்தவன் ராமுவின் மனைவி அமுதா வந்து சேருகிறாள். அவள், அன்பு எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறாள். அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த குடும்பத்தை அறிவுப் பாதையில் இட்டுச் செல்வதுடன், தன் கணவனின் வெறுப்பையும் போக்கித் தன்னிடம் அன்பு வைக்கச் செய்கிறாள்.

ராமுவாக வருபவர் பாலாஜி. இப்படத்தில் அவரது நடிப்பு முன்னைய படங்களிலும் பார்க்க எவ்வளவோ மேல் என்றே சொல்லவேண்டும்.

சோமுவாக எஸ். எஸ். ராஜேந்திரன் குடிகாரனாக வந்து கும்மாளமடிக்கிறார். அவருடைய பேச்சும், நடிப்பும் இப்படத்தில் குறும்புத்தனம் மிகுந்தவையாகவே காணப்படுகின்றன.

மாசிலாமணி முதலியாராக நடிக்கும் குணசித்திர நடிகர் ரங்கராவ் இப்படத்திலும் கச்சிதமாக நடித்துள்ளார்.

அமுதாவாக, அன்பின் உருவாக, பொறுமையின் சிகரமாகப் பண்டரிபாய் நடிக்கின்றார். வாழ்க்கையில் எதிர்நோக்கி வரும் எந்தப் புயலையும் சகிக்க முடியுமென்பதைத் தமது புன்முறுவல் ஒன்றினாலேயே எளிதிற் காட்டிவிடுகிறார், அனுபவம் மிக்க இந் நடிகை.

காமுவாக நடிப்பவர் மைனாவதி. கட்டிய கணவனை மதிக்காது நடந்தபோதிலும் அவர் ஈற்றில் கணவனிடம் அன்பு கொண்டு பதிசேவை செய்யும் பொழுது, நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இவருடைய பரிதாபகரமான பட்டிக்காட்டு மாப்பிளை தான் டி. ஆர். ராமச்சந்திரன். இப்படத்திலும் அவரது ஹாஸ்ய வெடிகளுக்குக் குறைவேயில்லை. மாலாவாக வரும் சூரியகலாவும், பார்வதியாக வரும் தேவிகாவும் தம் பாகங்களை நன்றாகவே செய்துள்ளனர்.

ஆரம்பத்தில் குழப்பமாகத் தோன்றும் படம் பின்னர் தெளிவுபெற்றும் கடைசியில் நீண்டு செல்கின்றது.

'ராக்—அன்ட்—ரால்' நடனங்கள் தமிழ்ப் படங்களை விட்டு நீங்கும்நாள் எந்நாளோ? இப்படத்திலும் அத்தகைய நடனங்கள் இடம்பெறுகின்றன.

சரளமான நடையில், அடிக்கடி வார்த்தைகளில் கருத்துப் பொதிந்த ஹாஸ்யம் தொனிக்க வசனத்தை எழுதியிருக்கிறார் முரசொலிமாறன்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சை ராமையாதாஸ், கண்ணதாசன் இவர்களுடைய இனிமையான பாடல்களும் இடம்பெறுகின்றன.

யோகானந்தத்தின் டைரக்‌ஷன் பரவாயில்லை.

**அன்பு எங்கே** என்பதை நீங்கள் ஆராயவிரும்பினால், அது பொறுமை உள்ள இடத்தில் தான் இருக்குமென இப் படம் விளக்கிவைக்கின்றது.

—மின்மினி

### நடிப்பும் நட்சத்திரமும்!

'கல்யாணப் பரிசு' என்னும் படத்தில் அருமையாக நடித்துப் புகழ்பெற்றுள்ள விஜயகுமாரி நடிப்புத் தொழிலைப் பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

"ஆசிரியராக, டாக்டராக, நர்ஸாகப் பணியாற்றுவதைப் போல, சினிமாவில் நடிப்பதும் ஒரு தொழில்தான். அதைக் கேவலமாகக் கருதக்கூடாது. அதே நேரத்தில் எல்லோராலும் இந்தத் தொழிலில் பரிமளிக்க முடியாது. திறமையும், தகுதியும் உள்ளவர்கள் சினிமாவில் சேர்ந்து நிச்சயம் முன்னேறலாம்".

### நடிப்பும் பிடிப்பும்!

நடிகவேள் எம். ஆர். ராதா 'ரத்தக்கண்ணீர்' மூலம் புகழ் பெற்றவர். சிறந்த குணசித்திர நடிகர். "உங்களுக்குப் பிடித்த தமிழ்ப்படம் எது?" என்னும் கேள்விக்கு அவர் தரும் பதில் அவருக்கே உரித்தான புரட்சிகரமான பதிலாகத்தான் இருக்கிறது!

"நான். தமிழ்ப் படங்களைப் பார்ப்பதே கிடையாது......! எப்பொழுதாவது, யாராவது அறிவாளிகள் ஆங்கிலப் படம் நன்றாக இருக்கிறது என்று கூறினால் போவேன்...!"

# சிவகெங்கைச் சீமை

பொன்பூக்கும் புகழ்ச் சிவகங்கை மருது சகோதரர்களின் ஆட்சியைக் கண்டது மன்றி ஏகாதிபத்திய எதிர்ப்பையும் காட்டி இதிகாசத்திலேயே இடம்பெற்றுவிட்டது. தமிழகத்தின் குறுநில மன்னர்களின் பட்டியலிற் சேர்க்கப்படவேண்டிய மருது சகோதரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பியாகிய ஊமைத்துரைக்குப் புகலிடம் அளித்ததன் மூலம் கோழைகள் என்ற பழிச்சொல்லுக்கும் ஆளாகியுள்ளார்கள்.

கம்பனி ஆட்சியின் கொடுமைகளைத் தாங்காது தவித்துக் கொண்டிருந்த தாய்நாட்டின் சூழ்நிலையை நிலைக்களனாக அமைத்து மருது சகோதரர்களின் தன்மான உணர்ச்சியை அறிவுறுத்தி, தூங்கிக்கிடந்த தமிழகத்தின் விழிப்பை உணர்த்துவதற்காகவே இக்கதை சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இதிற் கற்பனையும் விரவியுள்ளது.

தயாரிப்பாளரின் நோக்கத்தை அப்படியே பிரதிபலிக்கும்வகையில் பாத்திரங்களின் குணம்சங்கள் பொருந்தவில்லை என்பதைப் படத்தை ஒருமுறை பார்ப்பவர்கள்உணர்ந்து கொள்வார்கள். "தஞ்சம் என்று வந்தவனைத் தாரணி எதிர்த்தாலும் கைவிடோம்" என்று முழக்கி ஊமைத்துரைக்குத் தஞ்சமளித்ததன் மூலம் நாட்டுப்பற்றைப் புகுத்தியிருப்பது அவ்வளவு வரவேற்கத்தக்கதல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய வசனங்களும் பிரசங்கங்களும் கதைக்குப் புறம்பாக ஒலிக்கின்றனவேயன்றி, உயிர்த்துடிப்பைப் பெறவில்லை என்பதை ஒப்புக் கொண்டேயாகவேண்டும். "நாடு விடுதலை கேட்பது குற்றமென்றால், பகைவர் பூட்டிய விலங்கை உடைப்பது குற்றமென்றால், கொள்ளைக்காரனை உதைப்பது குற்றமென்றால், இந்தக் குற்றவாளிகள் நாடெங்கும் பரவட்டும்" இது கண்ணதாசனின் கைவரிசைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பின்னணிப் பாடல்களும். சாயி சுப்புலட்சுமி, கமலா லக்ஷ்மணன் ஆகியவர்களின் நடனங்களும் படத்தின் விறுவிறுப்புக்குத் துணைபுரிகின்றன. இப்படத்திற் கமலாவின் நடனம் மிதமிஞ்சிவிட்டது. "தென்பாண்டி மண்டலமே" என்ற பாடலுக்குச் சாயி சுப்புலட்சுமியின் நடனம் நன்று.

முத்தழகாக நடிக்கும் எஸ். எஸ். இராஜேந்திரனிடம் உணர்ச்சி ததும்பும் அளவுக்கு நடிப்புத் திகழவில்லை. பெரிய மருதுவாகத் தோன்றும் டி.கே. பகவதியிடம் தேர்ந்த அனுபவ முத்திரைதென்படுகிறது. கதை அமைப்புக்கேற்ப அவரது பாகம் சோபிக்கவும் செய்கின்றது.

மேஜர் வெல்ஷாக நடிக்கும் வஹாப் காஷ்மீர் அசல் ஆங்கிலேயனாக மாறிவிட்டார். இயற்கையான நடிப்புத்திறனை அவரிடம் காணமுடிகின்றது. பி. எஸ். வீரப்பா, எம். கே. முஸ்தபா ஆகியவர்களிடம் குடிகொண்டுள்ள நடிப்புக்கலை இணையற்றது.

'தென்றல்' வீசும் சிவகெங்கைச் சீமையில் தோன்றும் ஆண்களுக்கு எது குறைந்தாலும் மீசைமட்டும் கெம்பீரமாகவே இருக்கிறது!

குறைந்தகால எல்லையுள் இப்படம் சிறந்தமுறையிற் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடல்கள் இனிக்கின்றன காட்சிகள் பரிமளிக்கின்றன.

★ அஜன்

## பாரதத்தின் அழகுத்தூதுவர் வைஜயந்திக்கு பாரிஸ் பத்திரிகைகள் புகழ்மாலை

பாரிஸில் தியேட்டர் டீஸ் நேஷன்ஸ் சார்பில் வைஜயந்தி ஆடிய நடனங்களைப் பற்றிப் பிரெஞ்சுப் பத்திரிகையாகிய 'லீ பிகாரோ' எழுதுவதாவது:

பாரதநாடு நமக்கு அனுப்பிய அழகுத் தூதுவராக வைஜயந்தி விளங்குகிறார்.

பால்வடியும் வதனமுள்ள அழகி வைஜயந்தியின் தெய்வீக நடனங்கள் பாரிஸ் நகரத்தையே கொள்ளைகொண்டு விட்டதென, 'பாரிஸ் ஜேர்னல் எழுதியுள்ளது.



அன்பு எங்கே? — முதலாளி புகழ் தேவிகா

உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான
இரும்புச் சாமான்களுக்கு
எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ்வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

சண்முகம் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்: ஆ. சண்முகராசா
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

இப்பொழுது திரையிடப்படுகிறது!


சென்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபேட்டி (பதுளை) ஜோதி (திருகோணமலை)

தினசரி 2 மணி, 6 மணி, 9-30 மணிக்கு. காலைக்காட்சி ஞாயிறு காலை 10 மணிக்கு
22-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மாலை 6 மணி இரவு 9-30 மணி



இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன்
வீரப்பா, டி. கே. பகவதி, எஸ். வரலெட்சுமி,
எம். என். ராஜம்
கமலா
லக்ஷ்மணன்
முதலிய
சிறந்த நட்சத்திரங்கள்
நடிக்கும்

டைரக்ஷன்:
கே. சங்கர்



இந்தியநாட்டின் வீரம், பண்பாடு ஆகியவை விளங்கும்
இதிகாச காலத்தை எடுத்துக்காட்டும் திரை ஓவியம்!

தமிழ்நாட்டுச் சரித்திரத்தின் விறுகொண்ட
வீரஏடுகளின் வரலாற்றைச் சித்திரிக்கும் படம்!

கண்ணதாசன்
தயாரிப்பு

# சிவகெங்கைச் சீமை

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், லீலா, சுசீலா, ஜமுனுராணி, ஜிக்கி, கோமளா.

---

இப்பொழுது திரையிடப்படுகிறது!


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா நவா வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை)

விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (மஸ்கேலியா) சரசாவி (அக்கரப்பட்டன்) தீவொளி (நுவரெலியா)



இலட்சிய நடிகர்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ டி. ஆர். ராமச்சந்திரன்
★ பாலாஜி
★ ரங்கராவ்
★ பண்டரீபாய்
★ மைனுவதி
★ தேவிகா
★ சூரியகலா
★ லெட்சுமி பிரபா
நடிக்கும்

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்,
ஏ. எம். ராஜா, சுசீலா,
லீலா, ஜமுனுராணி,
ராதாஜெயலட்சுமி,
பாலசரஸ்வதி



டைரக்ஷன்:
யோகானந்

# அன்பு எங்கே?

பார்த்தோர் உள்ளத்தை பரவசமூட்டும் பாங்கான பைந்தமிழ் திரை ஓவியம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஜூன் மாதம் 20ம் திகதி வெளியிடப்பெற்றது.